

# ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியும்

## கேலிச் சித்திரத்தின் உண்மை நிலையும்



ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
இமாம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

*The blessed model of the*
***Holy Prophet***
***Muhammad*** *(may peace and blessings of Allah be upon him)*
*and the Caricatures*

Shock waves of indignation ran across the Muslim world following the recent publication of offensive and crude caricatures of the Holy Prophet Muhammad (may peace and blessings of Allah be upon him) in some parts of Europe. The uninformed, as ever, misled by the mullah gave in to public display of rage and rampant chaos ensued. Midst this confusion of an undeniably distressing time for all Muslims, spoke the voice of reason, calm and peace, precisely in line with the teaching of the "prince of peace" himself.. the Holy Prophet (may peace and blessings of Allah be upon him). This was the voice of Hadhrat Khalifatul Masih V (may Allah assist him with His mighty help) that unfolded the reality of the Islamic ways and means to respond to injustice; calling for peace, reasoning, endeavour to enlighten the world with the power of the pen and ultimately to always put one's trust in sincere prayers. He delivered a series of five faith inspiring and enlightening Friday Sermons on the subject that are a beckon of light for anyone in this often perplexing world that we live in. These Friday Sermons are being presented in this booklet.

9 789383 882618

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியும் கேலிச்சித்திரத்தின் உண்மை நிலையும்

**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

வெளியிடுவோர்:
***நஸாரத் நஷ்ரோ இஷாஅத்***
*சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா*
*காதியான், பஞ்சாப்.*

*Tamil Version of the Book*

The Blessed Model of the Holy Prophet Muhammad
and the Caricatures

*Consisting of 5 Friday Sermons of Hadhrat Mirza Masroor Ahmad, Imam Jama'at-e-Ahmadiyya, Khalifatul Masih V*

Translated by : Moulavi A.P.A.Tariq Ahmad

First Edition : 2015

Copies : 1000

Published by : Nazarat Nashr-o-Isha'at,
Sadr Anjuman Ahmadiyya,
Gurdaspur Dist.,
Qadian-143516, Punjab.

Printed at : Fazl-e-Umar Printing Press, Qadian

**Note:** *No part of this Book may be reproduced in any form without prior written permission from Publisher, except for the quotation of brief passages in criticism.*

ISBN No. : 978-93-83882-61-8

Noorul Islam Toll Free No. : 1800 - 3010 - 2131
Tamil Toll Free No. : 1800 - 425 - 40000

For further information Please visit:
www.alislam.org
www.ahmadiyyamuslimjamaat.in/feedback
www.youtube.com/alislamtamil

# அறிமுகம்

ஆரம்பத்திலிருந்தே உண்மைக்கும் பொய்யிற்கும், ஒளிக்கும் இருளுக்கும் இடையே போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப வெற்றி எப்பொழுதும் உண்மைக்கும் ஒளிக்கும் தான் கிடைக்கிறது. உண்மையில் ஆணவத்தின் காரணமாக மலிவான புகழைப் பெறுவதற்காக இறைவனுடைய தூதர்களை எதிர்ப்பது சிலருடைய பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடைசியில் அவர்கள் தோல்வியையும், நஷ்டத்தையும் அடைந்தனர். இஸ்லாத்தின் மீதும், அனைத்து உலகங்களின் பெருமைக்குரிய தலைவருமாகிய ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மகத்துவத்தின் மீதும் பல்வேறு மக்கள் அவமரியாதையான நடத்தையை மேற்கொண்டுள்ளனர். மேலும் அல்லாஹ்வின் நடைமுறைக்கேற்ப அவர்கள் தோல்வியின் முகத்தைக் கண்டனர். அண்மையிலும் கருத்து சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் என்ற சாக்கில் சில விசமிகள் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக தமது வெறுப்பை வெளிப்படுத்துவதற்காக அநேகமாக இஸ்லாமிய உலகிற்கு வெறுப்பை வெளிப்படுத்துவதற்காக முட்டாள்தனமான கார்டூன்களையும் கேலிச் சித்திரத்தையும் பல்வேறு நூல்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிட்டுள்ளனர். (இது இந்த நூலின் முதற்பதிப்பாகிய 2006-ஆம் ஆண்டில் குறிப்பிட்ட விசயமாகும்). அதன் எதிர் விளைவாக பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் மற்றும் இஸ்லாமிய நாடுகளில் மிகப் பெரும் கடுமையான எதிர் விளைவு ஏற்பட்டது. தீயிட்டுக் கொளுத்தப்பட்டன; கோபத்தை வெளிப்படுத்துவதற்காக உடைத்து நாசமும் ஆக்கப்பட்டன.

அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்டதன் மிகப் பெரிய நோக்கம், அல்லாஹ்வின் அருளினாலும் கருணையினாலும் உண்மையான போதனைகளை உலகத்தில் பரப்புவதேயாகும். எனவே

அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜமாஅத்தின் எதிர் விளைவு தீயிட்டுக் கொளுத்துவது, உடைத்தெறிவது ஆகிறவற்றிக்கு பதிலாக, ஆட்சேபணை செய்பவர்களின் ஆட்சேபணைகளுக்கு திருப்தி அளிக்கும் வகைளிலான பதில்களைக் கூறுவதும், இதன் மூலம் இஸ்லாத்தின் சரியான, உண்மையான தூதை உலகத்திற்கு எட்ட வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதாகவே இருக்கிறது. இதன்படி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் தற்போதைய சம்பவங்களைப் பற்றி இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி 10, 17, 24 மற்றும் மார்ச் 3, 10 ஆகிய தமது ஜுமுஆ பேருரையில் மிகப் பரந்த அளவில் விளக்கிக் கூறியுள்ளார்கள். அந்த ஜுமுஆ பேருரைகளிலிருந்து, இப்படிப்பட்ட நிலைமைகளில் ஓர் உண்மையான இறை நம்பிக்கையாளரின் எதிர் செயல் எப்படி இருக்க வேண்டும் என்பதும், நிலைமைகளை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதும் தெரிய வருகிறது.

ஜமாஅத் சகோதரர்கள் இந்த வழிகாட்டுதல்களை தாம் படிப்பது மட்டுமல்லாது தமக்குத் தெரிந்தவர்களுக்கும் இதனைப் படிக்கக் கொடுக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றி தெரிய வரும். இந்த நோக்கத்தில் இந்த வழிகாட்டல்கள் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றன.

எளியவன்
முனீருத்தீன் சம்ஸ்
அடிசனல் வகீலுத் தஸ்னீஃப்
ஜுன் 2006

# பொருளடக்கம்


## I. 10.02.2006 ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை

1. டென்மார்க்கிலும் மேற்கத்திய நாடுகளிலும் மிக மோசமான கேலிப்படங்களை வெளியிட்டதில் இஸ்லாமிய உலகத்தின் எதிர் நடவடிக்கை 3
2. நீதியாக நடந்து கொள்ளும் சிலருடைய கருத்துகள் 5
3. சில முஸ்லிம் தலைவர்களின் தவறான எதிர் நடவடிக்கையால் இஸ்லாத்தை அவப்பெயராக்குவதற்கு மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது 7
4. அஹ்மதிகளின் எதிர் நடவடிக்கை முறை 10
5. இஸ்லாத்திற்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் எதிரான சூழ்ச்சிகளுக்கான பாதுகாப்பை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் செய்ய வேண்டியதிருந்தது. 11
6. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியை உலகத்திற்கு முன்னால் எடுத்துக் காட்டுங்கள் 13
7. கேலிச் சித்திரங்ளை வெளியிட்டதற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத் மேற்கொண்ட உடனடி நடவடிக்கை 18
8. அஹ்மதி இளைஞர்கள் பத்திரிகை துறையில் செல்ல வேண்டும் 22
9. கொடிகளை எரிப்தனாலோ அல்லது உடைப்பதனாலோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கண்ணியம் நிலை பெற முடியாது 23
10. உங்களின் வேதனைகளை துஆக்களாக உருமாற்றுங்கள்; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது அதிகமாக ஸலவாத் ஓதுங்கள் 25

## II. 17.02.2006 ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை


11. மற்றவர்களின் உணர்வுகளுடன் விளையாடுவது மக்களாட்சியுமல்ல; கருத்துச் சுதந்திரமும் அல்ல 31

12. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமானப்படுத்தும் செயல்களில் பிடிவாதம் பிடிப்பது இறை கோபத்தை மூட்டுவதற்கு காரணமாகும் 32

13. இப்படிப்பட்ட நிலைமைகளில் அஹ்மதியின் எதிர் விளைவு எப்படி இருக்க வேண்டும்? 33

14. இஸ்லாத்தின் மதிப்பையும் கண்ணியத்தையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த தன்மையையும் மஸீஹ், மஹ்தியின் ஜமாஅத்து தான் நிலைநாட்ட வேண்டும். 34

15. மஸீஹ் இறங்குவார் என்பதன் உண்மையான பொருள், அன்னாரின் சில முக்கியமான பணிகள், அன்னாரின் உண்மைக்கான சில சான்றுகள் 35

16. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் கருவூலங்களை வாரி வழங்குவார் என்பதன் கருத்து 38

17. சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார் என்பதன் விளக்கம் 39

18. வாக்களிக்கப்பட்ட முஸீஹ் முஹம்மதிய்ய உம்மத்திலிருந்தே வரவிருந்தார் 42

19. மஸீஹ், மஹ்தி என்பது ஒரே நபரின் இரு பெயர்களாகும். அவர் மார்க்கப் போரை நிறுத்துவார் 44

20. ஹஸ்ரத் வாக்களிக்ப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தாம் இறைவன் புறமிருந்து வந்ததாக ஆணையிட்டுக் கூறிய வாக்குமூலம் 46

21. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு வானத்தின் சான்று 48

22. அல்லாஹ் அன்னாரின் அன்பை உள்ளங்களில் வைப்பான்; எல்லா பிரிவினரையும் விட அன்னாரின் பிரிவை மேலோங்கச் செய்வான் 52

## III. 24.02.2006 ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை

23. மேற்கத்திய நாடுகளும் பத்திரிகைகளின் இன்னொரு தகுதியும் 59

24. முஸ்லிம்களின் அவல நிலையின் மிக பயங்கரமான நிலைமை 61

25. முஸ்லிம்கள் சிதறுண்டு கிடத்தல் மற்றும் பலவீனத்திற்கான உண்மையான காரணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படாமையும் மஸீஹ், மஹ்தியை மறுத்தலுமேயாகும் 63

26. துஆ செய்வதும் அருள்களை பெறுவதற்கான உண்மையான வழிமுறையும் 65

27. வெற்றிகள் துஆக்களின் மூலமாகவே கிடைக்க முடியும் 75

28. இஸ்லாத்தின் இழந்து போன மகத்துவத்தை திரும்ப நிலைநாட்டுவதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும் 77

## IV. 03.03.2006 ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை

29. ஜங் என்ற பத்திரிகை அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி பொய்யான அடிப்படையற்ற செய்தியை வெளியிட்டிருப்பது வெறும் விசமத்தனமும் தீமையைத் தூண்டுவதும் ஆகும் 85

30. இந்த பொய் செய்தியை வெளியிட்டிருப்பவர்களுக்கு, இது முற்றிலும் பொய்; பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்றே நான் பதில் கூறுகிறேன் 90

31. கேலிச் சித்திரத்திற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர் நடவடிக்கையும், முயற்சியும் 90

32. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த பேரன்பு 93

33. முஸ்லிம் அரசாங்கங்கள், பயனை நோக்கமாகக் கொண்ட முல்லாக்கள், விசமிகளின் வலையில் விழக்கூடாது 95

34. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின் இரத்தினச் சுருக்கம் 96

35. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து 101

36. வாளின் மூலமாக போர் புரிதல் என்பதன் உண்மை நிலை 104

37. உண்மையான நோக்கங்கள் முன்னால் வருவதற்காக ஜமாஅத்திற்கு எதிரான பொய்க் கூற்றுகள், கீழ்த்தரமான சூழ்ச்சிகள் பற்றி முழுமையாக ஆய்வு செய்யப்படும் 106

**V. 10.03.2006 ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை**

38. சில முஸ்லிம் பிரிவுகளின் இஸ்லாத்திற்கு எதிரான செயல் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தை தாக்குவதற்கு ஆதராவகவும் ஒத்தாசையாகவும் ஆகி விடுகிறது 111

39. முஸ்லிம் அல்லாதவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வது பற்றி இஸ்லாத்தின் போதனை 112

40. மக்கத்து நிராகரிப்பவர்கள், இஸ்லாத்தின் எதிரிகளின் வரம்பு மீறல்கள், கொடுமையிழைத்தலுக்கு எதிரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி 112

41. இஸ்லாம் வாளின் கடுமையினால் அல்ல. மாறாக, அழகிய நல்லொழுக்கம், இஸ்லாத்திலுள்ள மன, மார்க்க சுதந்திரம் ஆகிய போதனையினால் பரவியது 116

42. மனித உரிமையை நலைநாட்டுவதில் மற்றும், மத நல்லிணக்கத்திற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற முன்மாதிரி 127

☆☆ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பு, நேசம், கருணை ஆகியவற்றின் அழகிய முன்மாதிரியை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அம்சங்களை வெளிப்படுத்த வேண்டிய, நமது செயல்களை சீர்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

☆☆ டென்மார்க்கில் மிகவும் அசுத்தமான, அவமரியாதையைக் கொண்ட, முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய கேலிச் சித்திரங்களை வெளியிட்டதற்கு கடுமையான கண்டனமும் அதற்கு எதிராக இஸ்லாமிய வட்டத்திற்குள் இருந்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர் நடவடிக்கை மற்றும் அதன் நல்ல விளைவுகள் பற்றிய குறிப்பும்.

☆☆ இந்த விதமான செயல்களால் இஸ்லாத்துடன் அவர்களுக்கு இருக்கும் பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் வெளிப்படுகிறது. மேலும் இந்த அசுத்தமான சிந்தனை -களைக் கொண்டவர்களின் அசுத்தமமும் இறைவனை விட்டும் அவர்கள் வெகு தூரம் விலகி இருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. கொடிகளை எரிப்பதும், போராட்டங்களை நடத்துவதும், உடைத்து சேதங்களை ஏற்படுத்துவதும், குழப்பங்களை பரப்புவதும் சரியான வழிமுறையல்ல.

☆☆ நாம் நமது நடவடிக்கைகளை இஸ்லாமிய வழிமுறையின் படியும் போதனையின்படியும் உருவாக்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனையும் அழகிய முன்மாதிரியின் ஒளியும் பிரகாசித்து வெளிவரும் வகையில் நமது எதிர்நடவடிக்கைகள் எப்போதும் இருக்க வேண்டும்.

☆☆ அஹ்மதிகள் பத்திரிகைத் துறையை மேற்கொள்ளுமாறு அறிவுரை.

**ஜுமுஆ குத்பா - 10.02.2006**

**இடம் : பைத்துல் ஃபுதூஹ், இங்கிலாந்து**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

وَمَآ اَرْسَلْنٰكَ اِلَّا رَحْمَةً لِّلْعٰلَمِيْنَ (சூரா அல் அன்பியா, வசனம் 108)

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ؕ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ

وَسَلِّمُوْا تَسْلِيْمًا اِنَّ الَّذِيْنَ يُؤْذُوْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ لَعَنَهُمُ اللّٰهُ فِى الدُّنْيَا

وَالْاٰخِرَةِ وَاَعَدَّ لَهُمْ عَذَابًا مُّهِيْنًا ۝٥٨ (சூரா அல் அஹ்ஸாப், வசனம் 57-58)

## டென்மார்க்கிலும் மேற்கத்திய நாடுகளிலும் வெளியிடப்பட்டுள்ள மிகவும் மோசமான கேலிச் சித்திரம் தொடர்பாக இஸ்லாமிய உலகின் எதிர்நடவடிக்கை

இன்றைய காலத்தில் டென்மார்க்கிலும் சில மேற்கத்திய நாடுகளிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி மிகவும் அசுத்தமான, முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய, வெறியூட்டக்கூடிய காட்டூனை பத்திரிக்கைகளில் வெளியிட்டுள்ளனர். அதனால் முழு இஸ்லாமிய உலகிலும் துக்கமும், கோபமும் அலைபாய்ந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமிடமிருந்தும் இச்செயலுக்கு எதிர்விளைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எப்படி இருந்தாலும் இந்தச் செயலுக்கு இயல்பாகவே எதிர்விளைவு ஏற்படத்தான் வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருக்கும் அன்பிலும் பாசத்திலும் மற்ற முஸ்லிம்களை விட முந்தியிருக்கும் அஹ்மதிகளும் தமது எதிர்விளைவுகளைக் காட்டத்தான் வேண்டும். ஏனெனில் அஹ்மதிகளுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கிய ஞானத்தினால் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் அந்தஸ்தைப் பற்றிய அறிவும், ஞானமும் அதிகம் இருக்கின்றது. மேலும்

பல அஹ்மதிகள் கடிதம் எழுதி தங்கள் வருத்தத்தையும், ஆவேசத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் இதைத் தடுப்பதற்கு நிரந்திர திட்டம் தீட்ட வேண்டும் என்றும் அந்த மகத்தான நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்து என்ன என்பதைப் பற்றி உலகிற்கு எடுத்துக்கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படி இருந்தாலும், ஜமாஅத்துகள் எங்கெல்லாம் சுறுசுறுப்பாக இருக்கின்றதோ அவை இந்த விசயத்தில் தமது கடமையை செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாமெல்லாம் அறிந்திருப்பது போல, நமது எதிர்ப்பு ஒருபோதும் போராட்டம், தர்ணா நடத்துதல் என்ற முறையில் இருப்பதில்லை. தீயிட்டுக் கொளுத்துதல் என்ற முயைிலும் இருப்பதில்லை. நடப்பதில்லை. போராட்டங்களை நடத்துவதோ, பொருள்களை நாசப்படுத்துவதோ, கொடிகளை எரிப்பதோ இதற்குரிய சிகிச்சையுமல்ல.

இக்காலத்தில் மற்ற மார்க்கத்தினரும், மேற்கத்திய உலகமும் இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் தோற்றுநர் (ஸல்) அவர்களையும் தாக்கிக் கொண்டிருக்கின்றன. தற்காலத்தில் மேற்கத்திய சமுதாயங்களுக்கு மார்க்கத்துடன் எந்த ஆர்வமும் இல்லை. இவர்களில் பொரும்பாலானவர்கள் உலக கேளிக்கை, விளையாட்டுகளில் வீழ்ந்து கிடக்கின்றனர்.அவர்கள் அதில் எந்த அளவிற்கு ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் அதனால் மார்க்கத்தைப் பொருத்தவரை அது இஸ்லாமாக இருந்தாலும், கிறித்தவமாக இருந்தாலும் அல்லது அவர்களின் வேறு ஏதேனும் மார்க்கமாக இருந்தாலும் அதைப் பற்றி அவர்களுக்கு எந்த அக்கறையுமில்லை. அவர்கள் மார்க்கத்தை விட்டு முற்றிலும் தொடர்பற்றவர்களாகி விட்டார்கள். மார்க்கத்தின் புனிதத்தன்மைப் பற்றிய உணர்வு பெரும்பாலானவர்களில் இல்லாமற் போய்விட்டது. இன்னும் சொல்லப்போனால், கடந்த சில நாட்களுக்கு முன் ஃபிரான்சில் ஒரு செய்தி வெளியாயிருந்தது. அதில் நாங்கள் விரும்பினால் அல்லாஹ்வைப் பற்றியும் கார்டூன் வரைவோம் – நவூதுபில்லாஹ். அதற்கு எங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று கூறப்பட்டிருந்தது. ஆக, அவர்களின் நிலை அந்த அளவுக்கு கெட்டு விட்டது பாருங்கள். கார்டூன் வரைபவர்கள் தனது புத்திக்கேற்ப மிகவும் இழிவான செயலை செய்துள்ளனர். மேலும் இஸ்லாமிய உலகம் காட்டிய எதிர்விளைவு பற்றியும் பல விமர்சனம் எழுதுபவர்கள். இந்த எதிர்விளைவு இஸ்லாமிய சமூகத்திற்கும், மேற்கத்திய

மதசார்பற்ற மக்களாட்சிக்கும் இடையே முரண்பட்டதாகும் என்று எழுதியுள்ளனர். ஆனால் இதற்கும் சமூயத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று இப்போது இவர்களில் பெரும்பாலானவர்களின் ஒழுக்கங்கள் சீர்கெட்டுப் போய் விட்டன. சுதந்திரம் என்ற பெயரில் வெட்கக்கேடான செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏறக்குறைய வெட்கம் என்பதே இல்லாமற் போய்விட்டது.

## நீதியாக நடந்து கொள்ளும் சிலருடைய கருத்துகள்

விமர்சனம் எழுதுபவர்களில் கண்ணியமானவர்கள் அல்லது நீதியை விரும்புபவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள், இதனை இஸ்லாமிய சமூகத்திற்கும் மேற்கத்திய மதசார்பற்ற மக்களாட்சிக்கும் இடையேயான முரண்பாடு என்று கூறுவது தவறு என்று எழுதியுள்ளனர். இங்கிலாந்திலுள்ள ஒரு பத்திரிக்கை எழுத்தாளர் ராபர்ட் ஃபிஸ்க் (Robert Fisk) என்பவர் போதுமான அளவு நீதியை கடைபிடித்தவாறு எழுதியுள்ளார். இஸ்லாமிய சமூகத்திற்கும், மேற்கத்திய மதசார்பற்ற மக்களாட்சிக்கும் இடையே முரண்பாடு காணப்படுகின்றது என டென்மார்க்கைச் சேர்ந்த ஒருவர் எழுதியிருந்தார். அது பற்றி (ராபர்ட் ஃபிஸ்க் என்ற) இவர், இது முற்றிலும் தவறான விசயமாகும். இது நாகரீகம் அல்லது மதச் சார்பின்மையின் முரண்பாடு அல்ல என்று எழுதியுள்ளார். மேலும் அவர் இவ்வாறு எழுதியுள்ளார்: இது கருத்து சுதந்திரம் என்பதுமல்ல. முஸ்லிம்களின் கொள்கைப்படி இறை தூதருக்கு இறைவன் நேரடியாக தனது போதனைகளை இறக்கினான். அவர்கள் பூமியில் இறைவனின் பிரதிநிதி ஆவார்கள். ஆனால் இவர்கள் (அதாவது கிறிஸ்தவர்கள்) புரிந்துள்ளது என்னவென்றால் (கருத்து கூறக்கூடிய இந்த கிறிஸ்தவர் எழுதுகிறார்) ஆனால் நபிமார்கள், வலிமார்களின் போதனைகள் மனிதனுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் நவீன சிந்தனையுடன் இணையாமற் போகாததன் காரணமாக வரலாற்று சுழற்சியில் மறைந்து விட்டன. முஸ்லிம்கள் மார்க்கத்தை தம் வாழ்க்கையின் பகுதியாகக் கருதுகின்றார்கள். பல நூற்றாண்டுகள் பயணித்து, பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் அவர்களின் இந்த சிந்தனை நிலைபெற்றுள்ளது. ஆனால் நாமோ வாழ்க்கையை விட்டும் மார்க்கத்தை தனித்து பிரித்து

விட்டோம். எனவே நாம் இஸ்லாத்திற்கு எதிராக கிறித்தவம் என்ற வி–யதத்தை பேசவில்லை. மாறாக இஸ்லாத்திற்கு எதிராக மேற்கத்திய கலாச்சாரம் என்ற விசயத்தை பேசுகின்றோம். இந்த அடிப்படையில், நாம் இன்னொன்றையும் விரும்புகின்றோம். அதாவது நாம் நமது இறை தூதர்களையும் அவர்களின் போதனைகளையும் கேலி கிண்டல் செய்ய முடியுமென்றால், மற்ற மார்க்கங்களை ஏன் கேலி கிண்டல் செய்ய முடியாது?

**மேலும் (ராபர்ட் ஃபிக்ஸ் என்ற) இவர் எழுதுகிறார்:**

இந்த விசயம் தற்போது நடந்ததுதானா? எனக்கு நினைவிருக்கின்றது. 10,12 ஆண்டுகளுக்கு முன் Last Temptation of Christ என்ற ஒரு film வெளியானது. அதில் இயேசுவை ஒரு பெண்ணுடன் ஆட்சேபனைக்குரிய நிலையில் காட்டப்பட்டது. அதனால் பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. பாரிஸில் ஒருவர் ஆவேசப்பட்டு அந்த சினிமா தியேட்டரை தீயிட்டுக் கொளுத்தினார். இளைஞர் கொலையும் செய்யப்பட்டார். இதற்கு என்ன பொருள்? ஒரு பக்கம் நம்மில் சிலர் மார்க்க உணர்வுகளை அவமானப்படுத்துவதை கட்டுப்படுத்த முடியாமற் போய் விடுகிறோம். ஆனால் கருத்து சுதந்திரம் என்ற வகையில் கீழ்த்தரமான கார்டூன் வெளியிடுவதை முஸ்லிம்கள் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்கிறோம். இது சரியான வழிமுறையா? பத்திரிகை சுதந்திரத்திற்கும் கருத்து சுதந்திரத்திற்கும் தடை போட முடியாது என்று மேற்கத்திய தலைவர்கள் கூறும் போது எனக்கு சிரிப்பு வருகின்றது. சர்ச்சைக்குரிய காட்டூனில் முஹம்மது நபிக்குப் பதிலாக அணுகுண்டு வடிவத்தைக் கொண்ட தொப்பி ஒரு யூத தலைவரின் (Rabbi) தலையில் இருப்பதாக வரைந்திருந்தால் கோ–மிடமாட்டார்களா? இதில் யூத மதத்திற்கு எதிரான (Anti Semitism) வாடை வீசுகிறது என்று கூறமாட்டார்களா? மேலும் மார்க்க ரீதியாக யூதர்களின் மனம் புண்படுத்தப்படுகிறது என்று கூறமாட்டார்களா? இது கருத்து சுதந்திரத்திற்கான தடை என்ற பிரச்சனை என்றால், பிறகு இது இரண்டாம் உலகப் போரின் போது பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்ரியா ஆகிய நாடுகளில் யூத சந்ததிகள் கொல்லப்பட வில்லை. அது எங்களுடைய உரிமை எனக்கூறி சவால் விட்டது சட்டப்படி ஏன் குற்றமாகம்?

முஸ்லிம்களுள் மார்க்க சீர்திருத்தத்தையும், நடுநிலையையும் விரும்பக்கூடிய, தெளிவான சிந்தனையை ஊக்குவிக்கக் கூடியவர்களுக்கு இந்த கார்டூன் வெளியீடு சகிப்புத் தன்மையை வழங்கியிருக்கும் என்றால் இதன் மீது மிகக் குறைவானவர்களே ஆட்சேபனை செய்திருப்பார்கள். ஆனால் இஸ்லாம் ஒரு தீவிரவாத மார்க்கம் என்பதைத் தவிர வேறு என்ன தூதுச் செய்தியை கொடுக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. வெறியை தூண்டுவதைத் தவிர இந்த காட்டூன்கள் வேறு என்ன நேர்மறையான விளைவை ஏற்படுத்தியிருக்கிறது?

**(ஜன்ங் நாளிதழ் – இலண்டன் 7 பிப்ரவரி 2006, பக்கம் 1,3)**

ஆக, எப்படியிருந்த போதிலும் முஸ்லிம்களின் சில நடவடிக்கையின் காரணமாக இது போன்ற செயல்களுக்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் இந்த மக்களில் உண்மையை எடுத்துரைக்கும் சான்றோர்களும் இருக்கின்றனர்.

## சில முஸ்லிம் தலைவர்களின் தவறான எதிர் நடவடிக்கையால் இஸ்லாத்தை அவப்பெயராக்குவதற்கு மற்றவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது

பல்வேறு நாடுகளின் சார்பாக அங்கு ஏற்பட்டிருக்கும் எதிர்விளைவுகளின் அறிக்கைகளை நான் வரவழைத்துள்ளேன். அதில் முஸ்லிம்கள் சார்பாகவும் ஜரோப்பிய அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகை பிரமுகர்கள் சார்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலானவர்கள் பத்திரிக்கையின் இந்த செயலை விரும்பவில்லை. ஆயினும் நான் கூறியது போன்று, எங்கிருந்தாவது எவரிடமிருந்தாவது ஒரு கருத்து வெளியிடப்படுகின்றது. அதனால் இந்த அசுத்தமான சிந்தனையைக் கொண்டவர்களின் அசுத்தம் வெளிப்பட்டு விடுகின்றது. அவர்கள் இறைவனை விட்டு விலகியிருக்கின்றனர் என்பதும் தெரிந்து விடுகின்றது. இஸ்லாத்தின் மீது வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் காட்டுகின்றனர். ஆயினும் சில முஸ்லிம் தலைவர்களின் தவறான எதிர்நடவடிக்கைகளினால் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்கு அந்த மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விடுகிறது என்று நான் கூறுகிறேன். அதன் மூலமாகவே பின்னர் இந்த

மக்கள் அரசியல் ஆதாயங்களையும் தேடிக்கொள்கின்றனர். பிறகு, பொது வாழ்க்கையில் முஸ்லிம் என்று அழைக்கப்படுபவர்களின் நடத்தை எப்படி இருக்கிறதென்றால் அதனால் இங்குள்ள அரசாங்கங்கள் நெருக்கடிக்கு உள்ளாகிவிடுகின்றன. உதாரணமாக வேலை எதுவும் செய்வதில்லை. வீட்டில் சும்மா உட்கார்ந்து கொண்டே இருக்கிறார்கள். சமூக உதவி (Social Help) பெற ஆரம்பித்து விடுகிறார்கள். அல்லது அரசாங்க வரிகளை திருடும் செயல்களை செய்கின்றனர். இவ்விதமான பல தவறான வேலைகளைச் செய்கின்றனர். ஆக, இந்த சந்தர்ப்பங்களை முஸ்லிம்களே ஏற்படுத்திக் கொடுத்து விடுகின்றனர். பிறகு எச்சரிக்கையான சமுதாயங்கள் அதிலிருந்து பயனடைகின்றன.

சில நேரத்தில் அநியாயமும் அவர்களிடமிருந்தே நடக்கின்றது. முஸ்லிம்கள் அல்லாத ஆனால் முஸ்லிம்களின் தவறான எதிர்நடவடிக்கையின் காரணமாக இவர்களே கொடுமைக்கும் உள்ளாகின்றனர். முஸ்லிம்களை கொடுமைக்காரர்களாக்கி விடுகின்றார்கள். முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் உடைத்தெரியும் இந்த செயலை நற்செயல் எனக் கருதவில்லை என்பது சரிதான். ஆனால் அவப்பெயரை தேடித்தரும் சில தலைவர்கள் சில தீயவர்கள் இந்த அவப்பெயரையே தேடித் தந்து கொண்டிருக்கின்றனர்.

உதாரணமாக இந்த நிகழ்ச்சி நடந்த பிறகு டென்மார்க்கில் என்ன நடந்தது என்பதைப் பற்றி ஓர் அறிக்கை கூறுவதாவது, டேனின் பொது மக்களின் கருத்து என்னவென்றால், பத்திரிக்கை மன்னிப்புக் கேட்ட பிறகு முஸ்லிம்கள் அந்த மன்னிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த பிரச்சனையை அமைதியாக முடித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் இஸ்லாத்தின் உண்மையான போதனை அவர்கள் வரை சென்றடையும். மேலும் அவர்கள் வன்முறையில் இருந்து விலக வேண்டும். பிறகு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடக்கின்றன. டேனிஷ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இங்குள்ள சிறுவர்கள் தொலைக்காட்சியில் கண்டு கொதிப்படைகிறார்கள். ஏனெனில் டேனிஷ் கொடி கொளுத்தப்படுகின்றது. தூதரகங்கள் கொளுத்ததப்படுகின்றன. அவர்கள் மிகவும் பயந்துள்ளார்கள். போர் அபாயம் இருப்பதாக அவர்கள்

உணர்கின்றனர். அவர்களை கொன்று விடுவதாக மிரட்டப்படுகிறார்கள். இப்போது பொதுமக்களும் சில அரசியல்வாதிகளும் இதைக்கண்டு வெறுத்துள்ளார்கள். மேலும் முஸ்லிம்களுக்கு மனம் புண்பட்ட காரணத்தினால் நாமே அந்த முஸ்லிம்களுக்கு ஒரு பெரிய பள்ளிவாயிலைக் கட்டிக் கொடுக்க வேண்டும்; அதற்கான செலவை இங்குள்ள அமைப்புகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஓர் எதிர்நடவடிக்கையும் வெளிப்பட்டிருக்கிறது. மேலும் கோபென்ஹேகனின் சுப்ரீம் மேயர் இந்த கருத்தை விரும்பியுள்ளார். பிறகு நான் கூறியது போன்று, முஸ்லிம்களில் பெரும்பான்மையினரும் இந்த மன்னிப்பை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என விரும்பியுள்ளனர். ஆனால் அவர்களில் 27 அமைப்புகளுக்கு பிரதிநிதியான ஒரு தலைவர் கூறுகிறார்: பத்திரிக்கை மன்னிப்புக் கேட்டுக் கொண்டாலும் அது நம் அனைவரின் முன்னாலும் ஒரு முறை வந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்படிச் செய்தால் இந்த பிரச்சனையை முடிக்குமாறு நாங்கள் முஸ்லிம் நாடுகளுக்கு சென்று தெரிவிப்போம். ஆக இஸ்லாத்தை பயங்கரமான ஒன்றாக படம்பிடித்துக் காட்ட இவர்கள் முயற்சி செய்கின்றனர். சமாதானத்தின் பக்கம் கை கொடுப்பதற்குப் பதிலாக இவர்களுடைய சிந்தனை குழப்பக்கத்தின் பக்கம் இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த குழப்பங்களுடன் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் நாங்கள் அப்படிச் செய்து விடுவோம்; இப்படிச் செய்து விடுவோம் என்று மிரட்டியவாறு நமது கொள்கை பரப்பு நிலையங்களுக்கும் தொலைபேசியில் பேசுகின்றனர். மிரட்டல் கடிதங்கள் வருகின்றன. எங்கெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசல்கள், கொள்கை பரப்பு நிலையங்கள் இருக்கின்றனவோ அல்லாஹ் அவற்றை பாதுகாப்பானாக. மேலும் அவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக.

எப்படி இருந்தாலும், தவறான எதிர்நடவடிக்கை எடுக்கும்போது மறுபக்கமும் தவறான விளைவு தான் ஏற்படும். நான் கூறியது போன்று, அவர்கள் தமது செயலுக்கு மன்னிப்பு கேட்டு விட்டார்கள். பிறகு இதற்கு முஸ்லிம்கள் எதிர்நடவடிக்கை மேற்கொள்ளும் போது (கேலிச் சித்திரத்தை வரைந்த) அவர்கள் அநியாயக்காரர்களாக இருந்தும், எந்நிலையிலும் அவர்கள் கொடுமை இழைத்திருந்தும், மிகவும் தவறான ஒரு

நடவடிக்கையை மேற்கொண்டிருந்தும் இப்போது (முஸ்லிம்கள்) கொடுமைக்குள்ளானவர்களாக மாறிவிடுகின்றனர். பாருங்கள்! அவர்கள் டென்மார்க்கில் மன்னிப்பு கேட்கிறார்கள். ஆனால் முஸ்லிம் தலைவர்கள் அடம்பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இந்த முஸ்லிம்களும் கொஞ்சம் அறிவுடன் செயல்பட வேண்டும். கொஞ்சம் விழிப்புடன் செயல்பட வேண்டும். மேலும் தங்களின் எதிர்நடவடிக்கையின் முறைகளை மாற்ற வேண்டும்.

## அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை முறை

மேலும் நான் கூறியது போன்று, இந்த செயலினால் ஒருவேளை எல்லாரையும்விட அதிகமாக ஏன் உறுதியாக நமது உள்ளத்திற்கு வருத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நமது எதிர்நடவடிக்கையின் வழிமுறை மாறுபட்டதாகும். இங்கு நான் இன்னொன்றையும் கூறிக் கொள்கிறேன். எப்போதும் போல் இவர்கள் இனிவரும் காலங்களிலும் அவ்வப்போது இந்த மாதிரி வெளியிட்டுக் கொண்டிருக்கலாம். முஸ்லிம்களின் மனம் புண்படும் வகையில் மேலும் சில செயல்களை அவர்கள் செய்யலாம். அதற்குப் பின்னால் சில நோக்கங்களும் இருக்கலாம். கிழக்கு நாடுகளிலிருந்து, துணைக்கண்டமாகிய இந்தியா, பாகிஸ்தானிலிருந்து வருகின்ற முஸ்லிம்களின் மீது இதனைச் சாக்காக வைத்து தடையை ஏற்படுத்த முயற்சி செய்யலாம். எனவே, எப்படி இருந்தாலும் இவர்கள் தடையை விதிக்கப்போகிறார்களோ இல்லையோ நாம் நமது நடவடிக்கையை இஸ்லாமிய போதனைக்கேற்ப வழிமுறைக்கேற்ப வடிவமைக்க வேண்டும்.

மேலும் நான் கூறியது போன்று, இஸ்லாத்திற்கு எதிராகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் ஆரம்பத்திலிருந்தே இந்த சதித்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அல்லாஹ் இதனைப் பாதுகாக்கவிருந்தான். இதனை காப்பாற்றுவதற்காக வாக்குறுதி வழங்கியிருக்கின்றான். எனவே அவன் காப்பாற்றி வந்து கொண்டிருக்கின்றான். எல்லா எதிர் முயற்சிகளும் தோல்வியடைந்து விடுகின்றன.

## இஸ்லாத்திற்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் எதிரான சதித்திட்டங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முறியடிக்க வேண்டியதிருந்தது

மேலும் இக்காலத்தில் இறைவன் இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நியமித்துள்ளான். எனவே இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தாக்கி எழுதியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும், அவர்களுக்குப் பிறகு அவர்களின் போதனைகளின்படி செயல்பட்டவாறு அவர்களுடைய கலீஃபாக்களும் ஜமாஅத்திற்கு என்ன வழிகாட்டினார்களோ, என்ன எதிர்நடவடிக்கை மேற்கொண்டார்களோ, பிறகு அதற்கு என்ன விளைவுகள் ஏற்பட்டனவோ அவற்றை நான் எடுத்துரைக்கிறேன். அப்போது தான் நம்மைப் பற்றி, போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் அஹ்மதிகள் கலந்து கொள்ளாததால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அசிங்மாக தாக்கியிருப்பது குறித்து நமக்கு எந்த வேதனையுமில்லை என்பதை நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறுபவர்களுக்கு ஜமாஅத்தின் சாதனைகள் தெரிய வரும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனையும் முன்மாதிரியும் வெளிப்படும் வகையில் நமது எதிர்நடவடிக்கை எப்போழுதும் இருக்கிறது; இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் போதனை வெளிப்பட வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாகயம் (ஸல்) அவர்களின் மீது அசுத்தமான தாக்குதல் நடந்திருப்பதைக் கண்டு பொருள்களை சேதப்படுத்துவதற்குப் பதிலாக அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்தவாறு அவனிடம் உதவி தேடுபவர்களாக நாம் இருக்கின்றோம். இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான நேசராகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் காணப்பட்ட நபி (ஸல்) அவர்கள் மீதான உண்மையான நேசம் தொடர்பான தன்மான உணர்விற்கு இரண்டு உதாரணங்களை எடுத்துரைக்கிறேன்.

முதல் உதாரணம், கிறிஸ்தவரான பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் பற்றியதாகும். அவர் தனது நூலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரான தனது மிக அசுத்தமான சிந்தனையை வெளிப்படுத்தியவாறு தஜ்ஜால் என்ற சொல்லை பயன்படுத்தியிருந்தார் நவூதுபில்லாஹ். அந்த நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இஸ்லாத்திற்கு கிறிஸ்துவத்திற்குமிடையே ஒரு விவாதமும் நடந்து கொண்டிருந்தது.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் 15 நாட்கள் விவாதத்தில் ஈடுபட்டிருந்தேன். விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஆத்தமின் தண்டனைக்காக மறைமுகமாக நான் துஆ கேட்டுக் கொண்டிருந்தேன். அதாவது அவர் கூறிய வார்த்தைகளுக்காக அவர் பிடிக்கப்படுவதற்காக. விவாதம் முடிவடைந்ததும் நான் அவரிடம் கூறினேன். ஒரு விவாதம் முடிந்து விட்டது. ஆனால் இறைவன் புறமிருந்துள்ள இன்னொரு வகை போட்டி எஞ்சியிருக்கின்றது. அது என்னவென்றால், நீர் அந்துரூனா பைபிள் என்ற உமது நூலில் எங்களுடைய நபி (ஸல்) அவர்களை தஜ்ஜால் என்ற பெயரால் அழைத்திருக்கின்றீர். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாளராகக் கருதுகின்றேன். மேலும் இஸ்லாம் மார்க்கத்தை அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததாக உறுதி கொள்கின்றேன். எனவே இது எத்தகைய போட்டி என்றால் வானத்தின் தீர்ப்பு இதை தெளிவுபடுத்தும். அந்த வானத்தின் தீர்ப்பு என்னவென்றால், நம்மில் யார் தனது கூற்றில் பொய்யராக இருக்கின்றாரோ, அநியாயமாக இறைதூதரை பொய்யர் என்றும், தஜ்ஜால் என்றும் கூறுகிறாரோ, உண்மைக்கு எதிரியாக இருக்கின்றாரோ அவர் உண்மையின் பக்கம் திரும்பினாலன்றி அதாவது அவர் உண்மை நபியை தஜ்ஜால் என்று கூறுவதிலிருந்து விலகவில்லை என்றால், தீய சொற்களைக் கூறுவதை விட்டுவிடவில்லையென்றால் அவர் இன்றிலிருந்து 15 மாதங்களுக்குள் உண்மையாளரின் வாழ்நாளிலேயே நாசமடைந்து விடுவார். இது ஏன் கூறப்பட்டிருக்கின்றதென்றால், ஒரு மார்க்கத்தை மறுப்பது மட்டும் ஒருவரை உலகத்தில் தண்டனைக்கு

உரியவராக்கி விடுவதில்லை. மாறாக வரம்பு மீறி நடந்து கொள்ளுதல், அகங்காரம், தீய சொற்களைக் கூறுதல் ஆகியவை தான் தண்டனைக்குரியவராக்கி விடுகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

நான் இதை (பாதிரி ஆத்தமிடம்) கூறிய போது அவரது நிறம் மாறி விட்டது. முகம் சிவந்து விட்டது. கைகள் நடுங்க ஆரம்பித்து விட்டன. அப்போது அவர் தயக்கமின்றி வாயிலிருந்து நாவை வெளியே நீட்டி, இரு கைகளாலும் (தன்) காதைப் பிடித்து கைகளை தலையுடன் சேர்த்து, குற்றம் சுமத்தப்பட்டவர் பயந்து கடுமையாக மறுத்துரைத்து தவ்பா, இஸ்திக்ஃபார் செய்வது போல அசைத்தார். மேலும் தவ்பா, தவ்பா நான் ஒரு போதும் அவமரியாதை செய்யவில்லை என்று மீண்டும் மீண்டும் கூறினார். மேலும் இதன் பிறகும் இஸ்லாத்திற்கு எதிராக ஒரு போதும் எதையும் கூறவில்லை.

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தன்மான உணர்வு கொண்டிருந்த அல்லாஹ்வின் சிங்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எதிர்நடவடிக்கையாக இருந்தது. இதுபோன்ற செயலை செய்யக்கூடியவர்களை நோக்கி அன்னார் அறைகூவல் விடுத்து வந்தார்கள்.

பிறகு இன்னொருவர் லேக்ராம் என்ற ஒரு இந்து பண்டிதர் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் ஏசினார். அவரை இந்த ஈனச் செயலிலிருந்து விலகியிருக்குமாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவருக்கு அறிவுரை கூறினார்கள். ஆனால் அவர் விலகவில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அப்போது அல்லாஹ் லேக்ராமின் வேதனையுடன் கூடிய மரணம் பற்றி செய்தி அறிவித்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகிறார்கள்:

இறைவன் எனக்கு, அல்லாஹ் மற்றும் தூதரின் எதிரியைப் பற்றி வாக்குறுதி வழங்கியிருக்கிறான். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களை ஏசுகின்றார். அசுத்தமான சொற்களை நாவில் கொண்டு வருகின்றார். அவர் பெயர் லேக்ராம் என்பதாகும். நான் கேட்ட துஆவை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். மேலும் அவர் 6 ஆண்டுகளுக்குள் நாசமாகி விடுவார் என இறைவன் எனக்கு செய்தி தெரிவித்திருக்கின்றான். உண்மையான மார்க்கத்தைத் தேடுபவர்களுக்கு இது ஓர் அடையாளமாகும். அவ்வாறே நடந்தது. அவர் வேதனையுடன் கூடிய மரணத்தை அடைந்தார்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை உலகின் முன்னால் எடுத்து வையுங்கள்

இந்த வழிமுறையைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். இவ்விதமான செயல்களை செய்பவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மைகளை, அருள்களை எடுத்துக் கூறுங்கள். உலக கண்களிலிருந்து மறைந்திருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய ஒளிமிக்க அம்சங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுங்கள். மேலும் அல்லாஹ்விடம் துஆ கேளுங்கள். ஒன்று, அல்லாஹ் இவர்களை இந்த செயல்களிலிருந்து விலக்கி வைப்பானாக. அல்லது தானே இவர்களைப் பிடிப்பானாக. பிடிப்பதற்கென அல்லாஹ்விற்கென்று தனது வழிமுறைகள் இருக்கின்றன. யாரை, எப்படிப் பிடிக்க வேண்டும் என்பதை அவன் நன்கறிவான்.

அடுத்து, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் மிகவும் முட்டாள்தனமான ஒரு புத்தகம் ரங்கீலா ரஸூல் என்ற பெயரில் எழுதப்பட்டது. பிறகு வர்த்தமான் என்ற புத்தகம் முட்டாள்தனமான ஒரு கட்டுரையை வெளியிட்டது. அப்போது இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஆத்திரமடைந்து விட்டனர். எல்லாப் புறமும் முஸ்லிம்களிடத்தில் ஒரு கொந்தளிப்பு காணப்பட்டது. மேலும் கடுமையான எதிர்நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முஸ்லிம்களை நோக்கிக் கூறினார்கள்: **சகோதரர்களே! நான் மனவேதனையுடன் மீண்டும் உங்களிடம் கூறுகிறேன். சண்டையிடுபவர்**

**வீரம் கொண்டவர் அல்லர். அவர் கோழையாவார். ஏனெனில் அவர் தன் நஃப்ஸின் கீழ் அமுங்கி விட்டார்.**

**கோபத்தை அடக்குபவர் தான் வீரம் கொண்டவர் என்ற நபிமொழிக்கேற்ப இந்தக் கூற்று இருக்கின்றது**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

வீரம் கொண்டவர் யார் என்றால் அவர் நிரந்தரமான எண்ணம் கொண்டவராக இருக்கின்றார். அதை நிறைவேற்றாதவரை அவர் அதிலிருந்து பின்வாங்குவதில்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு மூன்று விசயங்களில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்று, நீங்கள் இறையச்சத்துடன் செயல்பட வேண்டும். மார்க்கத்தை அக்கறையற்ற பார்வையுடன் நீங்கள் பார்க்கக்கூடாது. நீங்கள் உங்களது செயலை முதலில் சரிசெய்து கொள்ளுங்கள். இரண்டாவது, இஸ்லாத்தை தப்லீக் செய்வதில் முழு ஆர்வம் காட்ட வேண்டும். இஸ்லாமிய போதனை உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் தெரிய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மைகள், நன்மைகள், அழகிய வாழ்க்கை முன்மாதிரி ஆகியவை அனைவருக்கும் தெரிய வேண்டும். மூன்றாவது, நீங்கள் நாகரிக, பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்றுவதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும். (அன்வாருல் உலூம், தொகுதி 9, பக்கம் : 555-556)

இப்போது ஒவ்வொறு முஸ்லிமுக்கும் அவர் சாதாரண நபராக இருந்தாலும், தலைவராக இருந்தாலும் இது கடமையாகும். இப்போது பாருங்கள்! சுதந்திரம் இருந்தும், சுதந்திரமானவர்கள் என்று இந்த முஸ்லிம் நாடுகள் அழைக்கப்பட்டாலும் இன்றுவரை அவர்கள் நாகரிக, பொருளாதார அடிமைத்தனத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இந்த மேற்கத்திய நாடுகளின் தயவில் இருக்கின்றனர். அவர்களை

காப்பியடிப்பதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். தாமே வேலை செய்வதில்லை. அவர்களை சார்ந்திருக்கின்றனர். எனவே தான் அவர்கள் முஸ்லிம்களின் உணர்வுகளுடன் அவ்வப்போது விளையாடிக் கொண்டிருக்கின்றனர். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சீரத்துந்நபி கூட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். ஆக, இதுதான் கண்டன நடவடிக்கையின் முறையாகும். பொருள்களை உடைத்து நாசப்படுத்துவதும், குழப்பங்களை உண்டாக்குவதும் சரியான முறையல்ல. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி கூறிய அறிவுரைகளில் அதிகமாக விளித்திருப்பது அஹ்மதிகளை நோக்கித்தான்.

இந்த நாடுகளிலுள்ள சில தவறான சம்பிரதாயங்கள் சில அஹ்மதி குடும்பங்களிடமும் அறியாமலேயே நுழைந்து கொண்டிருக்கின்றன. எனவே அஹ்மதிகளை நோக்கி நான் கூறுகின்றேன். உங்களை நோக்கியும் கூறப்பட்டுள்ளது. இவர்களின் கலாச்சாரத்திலுள்ள நல்ல வி–யங்களை மேற் கொள்ளுங்கள். ஆனால் தவறான விசயங்களிலிருந்து நாம் தப்பிக்க வேண்டும். நம்முடைய எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்றால் பொருள்களை உடைத்து நாசப்படுத்துவதற்குப் பதிலாக நாம் நம்மைப் பற்றி ஆய்வு செய்வதன் பக்கம் கவனம் வேண்டும். நமது செயல்கள் என்ன? நம்மிடம் இறையச்சம் எந்த அளவிற்கு இருக்கிறது? அவனை வணங்குவதன் பக்கம் எந்த அளவுக்கு கவனம் இருக்கிறது? மார்க்க கட்டளைகளின்படி செயல்படுவதன் பக்கம் எவ்வளவு கவனம் இருக்கிறது? அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதன் பக்கம் எவ்வளவு கவனம் இருக்கிறது? என்றெல்லாம் பார்க்க வேண்டும்.

பிறகு பாருங்கள்! ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹு தஆலா) அவர்களின் காலகட்டத்தில் ருஷ்டி என்பவர் இழிவுபடுத்தும் வகையில் புத்தகம் எழுதினார். அப்போது அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஒரு குத்பாக்களும் கொடுத்தார்கள். ஒரு மறுப்பு நூலையும் எழுத வைத்தார்கள். நான் கூறியது போன்று இந்த செயல்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. சென்ற ஆண்டின் ஆரம்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

வாழ்க்கைப் பற்றி ஒரு கட்டுரை வெளியானது. அப்போதும் நான் ஜமாஅத்துகளுக்கும் கிளை அமைப்புகளுக்கும் கடிதங்கள் எழுதுங்கள். மறுப்புக் கட்டுரைகள் எழுதுங்கள். தொடர்புகளை விரிவுபடுத்துங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் சிறப்புகளையும், நன்மைகளையும் எடுத்துக் கூறுங்கள் என்பதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அழகிய அம்சங்களை உலகத்திற்கு காட்டும் சவாலகும். அது பொருள்களை உடைப்பதால் நடைபெற முடியாது. எனவே எல்லா அஹ்மதிகளும் ஒவ்வொரு நாட்டிலும் கல்வி அறிவுள்ள புரியும் திறனுள்ள பிற முஸ்லிம்களுக்கும் புரிய வைக்க வேண்டும். அதாவது நீங்களும் இவ்விதமாக அமைதியான வழிமுறையில் எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்புகளை அதிகமாக்குங்கள். எழுதுங்கள் எனக் கூற வேண்டும். அப்போது எல்லா நாட்டிலும் எல்லா வகை மக்களுக்கும் சான்று முழுமையடைந்து விடும். அதற்குப் பிறகும் எவராவது ஆட்சேபனை செய்தால் அவருடைய விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது.

**அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ரஹ்மத்துல் லில் ஆலமீனாக (அனைத்து உலகங்களுக்கும் அருட்கொடையாக) அனுப்பியுள்ளான்.**

இறைவனே கூறுகிறான்: وَمَآ اَرۡسَلۡنٰكَ اِلَّا رَحۡمَةً لِّلۡعٰلَمِيۡنَ
**அதாவது நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பியுள்ளோம். (சூரா அல் அன்பியா வசனம் 108)** மேலும் அன்னாரை விட அதிக அருளை விநியோகம் செய்யக்கூடியவர் இதற்கு முன் ஒருபோதும் பிறந்ததுமில்லை; பிறக்கப்போவதுமில்லை. ஆயினும் அன்னாரின் அழகிய முன்மாதிரி என்றென்றும் நிலைபெற்றிருக்கும். அதனைப் பின்பற்றி நடப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமும் முயற்சி செய்ய வேண்டும். இந்த வகையிலும் பெரும் பொறுப்பு அஹ்மதிகளுக்கு இருக்கின்றது. நம் மீதே சுமத்தப்பட்டுள்ளது.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்துலகங்களுக்கும் அருட்கொடையாக விளங்கினார்கள். ஆனால் இம்மக்கள் அவர்களைப் பின்பற்றி பயங்கரமானவராக சித்தரித்துக்

காட்டுகிறார்கள். எனவே நாம் இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பு, நேசம், கருணை ஆகியவற்றின் அழகிய முன்மாதிரியை உலகிற்கு காட்ட வேண்டும். மேலும் அதனை காட்டுவதற்கு முஸ்லிம்கள் தமது நடத்தைகளையும் மாற்ற வேண்டியது வரும் என்பது வெளிப்படை. தீவிரவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எதிரிகள் மதீனாவுக்கு வந்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது போரை தணிக்காத வரை அவர்களோ போரிலிருந்து கூட விலகியிருக்க எப்போதும் முயற்சி செய்தார்கள். பிறகு அல்லாஹ்வின் அனுமதியினால் தற்காபுக்காக போர் செய்ய வேண்டி வந்தது. அங்கேயும் என்ன கட்டளை இருந்ததென்றால்

وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ۝۱۹۱

**முஸ்லிம்களே! உங்களுடன் போர் செய்வோருடன் நீங்களும் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை அல்லாஹ் நேசிப்பதில்லை. (சூரா பக்ரா வசனம் 191).**

தன் மீது இறங்கிய மார்க்க சட்டத்தின்படி அதிகமாக செயல்படக்கூடியவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பற்றி பொருத்தமற்ற சிந்தனைகளை வெளிப்படுத்துவது மாபெரும் கொடுமையாகும். எப்படி இருந்த போதிலும் அவர்கள் மன்னிப்புக் கேட்டு விட்டனர். அவர்களில் ஒருவர் மன்னிப்புக் கேட்டதாக நமது கொள்கை பரப்புனர் ஒருவரின் தகவலும் வந்துள்ளது.

## கேலிச் சித்திரங்ளை வெளியிட்டதற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத் மேற்கொண்ட உடனடி நடவடிக்கை

மற்ற முஸ்லிம்களின் ஆவேசம் என்னவென்றால், ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். பொருள்களை உடைக்கின்றார்கள். ஏனென்றால் பொருள்கள் உடைக்கப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டும் என்பதே அவர்களின் எதிர்நடவடிக்கை ஆகும். இந்த சம்பவத்திற்குப் பிறகு என்ன உடனடி எதிர்நடவடிக்கை வெளிப்படுத்த வேண்டுமோ, அதை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்துள்ளது. அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை

எப்படி இருந்ததென்றால் அஹ்மதிகள் உடனே அந்த பத்திரிக்கை நிருபர்களை சந்தித்தனர். பிறகு இது ஒன்றும் இன்று நடக்கின்ற விசயமல்ல. 2006-ம் ஆண்டு பிப்ரவரியில் பேராட்டங்கள் இது சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றது. அப்போது நாம் என்ன செய்தோம்? நான் கூறியது போன்று இது செப்டம்பரில் நடந்த சம்பவமாகும். அல்லது அக்டோபரின் ஆரம்பத்தில் நடந்ததாக வைத்துக் கொள்வோம். அப்போது நமது ஜமாஅத்தின் கொள்ளை பரப்புனர் உடனடியாக ஒரு விரிவான கட்டுரையை தயார் செய்து அதனை கார்டூன் வெளியிட்ட பத்திரிக்கையாளர்களுக்கு அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படத்தை வெளியிட்டதற்கு கண்டனம் தெரிவித்தார். பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளை எடுத்துக்கூறி எங்களின் கண்டனம் இப்படி தான் இருக்கும். நாங்கள் கண்டிப்பாக ஊர்வலம் நடத்த மாட்டோம். ஆனால் பேனாவின் மூலம் நாங்கள் உங்களுடன் ஜிஹாது செய்வோம். படம் வெளியிட்டதற்கு வருத்தம் தெரிவிக்கின்றோம். கருத்து சுதந்திரம் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் அதற்காக மற்றவர்களின் உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்பது அதற்கு பொருளல்ல என்பதையும் பத்திரிகைக்கு எடுத்துக் கூறினோம். எப்படியிருந்தபோதிலும் தெளிவான ஒரு எதிர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒரு மறுப்புக் கட்டுரையும் பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதை அவர்கள் வெளியிட்டு விட்டார்கள். டேனிஷ் பொதுமக்கள் சார்பாக நல்ல பின்விளைவு ஏற்பட்டது. ஏனெனில் நமது கொள்ளை பரப்பு நிலையத்திற்கு தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் நமது கட்டுரையை அவர்கள் விரும்பியதாக குறிப்பிட்டார்கள். பிறகு ஒரு பத்திரிக்கையாளர் கூட்டத்தில் பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் சார்பாக நமக்கும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு வந்தது. அங்கு நமது ஜமாஅத் சென்று, உங்களுடைய சட்டம், கருத்து சுதந்திரத்திற்கு அனுமதி அளித்திருப்பது உண்மை தான். ஆனால் அதற்காக பிற மார்க்க வழிகாட்டிகளை, கண்ணியத்திற்குரியவர்களை ஏளனமாக பார்க்க வேண்டும் என்றோ, அவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்றோ பொருளல்ல. மேலும் இங்கு முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இந்த சமூகத்தில் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் உணர்வுகளை எந்நிலையிலும் கவனத்திற்கொள்வது அவசியமானதாகும். ஏனெனில் அது இல்லாமல் அமைதி நிலைபெற முடியாது என்று கூறியது.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை எவ்வளவு ஆழமானது! எவ்வளவு அழகான முன்மாதிரி! எவ்வளவு உயர்ந்த ஒழுக்கங்களை கொண்டவர்களாக திகழ்ந்தார்கள்! எத்தனை மக்களுக்கு அனுதாபம் காட்டுபவர்களாக விளங்கினார்கள்!! இறைவனுடைய படைப்பினங்களோடு எவ்வளவு அனுதாபம் காட்டுபவர்களாக விளங்கினார்கள்! என்பதையும் அன்னார் அனுதாபம் மற்றும் கருணையின் தோற்றமாக திகழ்ந்தார்கள் என்பதையும் அவர்களுக்கு எடுத்து கூறப்பட்டது. இதற்கான சில சம்பவங்களை அவர்களுக்கு எடுத்துக்கூறிய பிறகு இத்தகைய போதனைகளைக் கொண்டவரைப் பற்றி இத்தகைய நற்பண்புகளைக் கொண்டவரைப் பற்றி இவ்வாறு படம்பிடித்துக் காட்டுவது ஆகுமானதா? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. நமது கொள்கை பரப்புனர் கூறிய இந்த விசயங்களை அவர்கள் கேட்டு அதை மிகவும் விரும்பினார்கள்; மிகவும் பாராட்டினார்கள். இந்த மாதிரியான கூட்டம் முதலில் நடந்திருந்தால் ஒருபோதும் காட்டூன் வைத்திருக்க மாட்டார்கள் என்று கார்ட்டூன் வரையக்கூடிய ஒருவர் பகிரங்கமாக வெளிப்படுத்தினார். இஸ்லாத்தின் போதனை என்ன என்பது பற்றி இப்போது தான் அவர்களுக்கு தெரிந்துள்ளது. பிறகு இந்த மாதிரியான கலந்துரையாடல் அடிக்கடி நடக்க வேண்டும் என்று அவர்கள் அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

மேலும் பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் சார்பாகவும் ஒரு பத்திரிக்கை செய்தி வெளியிடப்பட்டது. அது அனைவருக்கும் படித்துக் காட்டப்பட்டது. மேலும் தொலைக்காட்சியிலும் நேர்காணல் நடைபெற்றது. அது நன்றாக இருந்தது. பிறகு அமைச்சர்களுடனும் மீட்டிங் நடைபெற்றது. ஆக, அஹ்மதிய்யா ஜமாஅத் இவ்விதமாக முயற்சி செய்கின்றது. மற்ற நாடுகளிலும் இவ்வாறு நடைபெற்றுள்ளது. எப்படியிருந்த போதிலும் எந்த நாட்டில் நடந்ததோ அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் கணிசமாக வேலை செய்துள்ளது. ஆனால் இந்த காட்டூனுக்கு காரணம் டென்மார்கில் ஒரு

டேனிஷ் எழுத்தாளர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். குர்ஆனும் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கையும் என்பது அதன் தலைப்பாகும். அது மார்க்கெட்டிற்கு வந்து விட்டது. அந்த நூலாசிரியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படத்தை வரைந்து அனுப்புமாறு ஓவியர்களை கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி சிலர் வரைந்து அனுப்பியுள்ளனர். முஸ்லிம்களிடம் எதிர் விளைவு ஏற்படும் என்பதற்காக அந்த ஓவியர்கள் தமது பெயரை வெளியிடவில்லை. இந்த புத்தகம் தான் காரணமாக அமைகின்றது. இந்த பத்திரிக்கையிலும் கார்ட்டுன்தான் காரணமாக இருந்தது. எனவே இனி இது தொடர்பாகவும் அவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். உலகில் எங்கெல்லாம் இதைப்படித்து விட்டு ஆட்சேபனைகள் கிளம்புகின்றனவோ அவற்றை அறிந்து அவற்றிற்கு நாம் பதில் கூற வேண்டும். ஆனால் டென்மார்க்கில் இன்னொரு கருத்தும் நிலவுகிறது. நாங்கள் வெளியிடாத சில தவறான காட்டூன்களையும் சில முஸ்லிம்கள் மூலமாக இஸ்லாமிய உலகிக்கு காட்டி எங்களுக்கு எதிராக தூண்டி விட முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என அவர்கள் கூறுகின்றனர். இது உண்மையா? பொய்யா? என்று தெரியவில்லை. ஆனால் உடனடியாக நாம் கவனமூட்டியதால் அவர்கள் உணர்ந்து விட்டார்கள். ஆக இதற்கான எதிர்நடவடிக்கையை அஹ்மதிய்யா ஜமாஅத் மூன்று மாதங்களுக்கு முன்பே செய்துவிட்டது. முஸ்லிம்களாகிய இவர்களுக்கு இன்று தான் தெரிகின்றது.

எனவே எல்லா நாட்டிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சம்பவங்களை எடுத்துக் கூற வேண்டிய தேவை இருக்கின்றது. குறிப்பாக இஸ்லாம் போர் ஆர்வம் கொண்டது என்ற மாயத் தோற்றம் காணப்படுகிறது. அதை சான்றுகளுடன் மறுத்துரைப்பது நமது கடமையாகும். பத்திரிக்கைகளிலும் அதிகமாக எழுதுங்கள் என்று நான் முன்னரும் கூறியிருந்தேன். பத்திரிக்கைகளுக்கும் எழுத்தாளர்களுக்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாறு பற்றிய புத்தகங்களையும் அனுப்பி வைக்கலாம்.

## அஹ்மதி இளைஞர்கள் பத்திரிக்கை துறையில் நுழைய வேண்டும்

பிறகு வருங்காலத்திற்காக இன்னொரு ஆலோசனையும் உள்ளது. இதுபற்றியும் ஜமாஅத் திட்டம் வகுக்க வேண்டும். இளைஞர்கள் அதிகமான பத்திரிக்கை துறையில் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். இதில் ஆர்வமுள்ளவர்கள் செல்லுங்கள். அப்போது தான் பத்திரிக்கைகளிலும் அந்த இடங்களிலும் பத்திரிக்கையாளர்களித்திலும் நமது செல்வாக்கு இருக்கும். ஏனெனில் இந்த மாதிரியான செயல்கள் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நமக்கு மீடியாக்களுடன் அதிகமதிகமாக தொடர்பு இருந்தால் தான் இந்த விசயங்களை நாம் தடுக்க முடியும். இந்த முட்டாள்தனமான செயல்களை தடுத்து நிறுத்த முடியும். அதற்குப் பிறகும் எவராவது அகங்காரம் காட்டுகின்றார் என்றால் அப்படிப்பட்டவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் சாபமிட்ட மக்களைச் சேர்ந்தவர்களாகி விடுகின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ الَّذِينَ يُؤْذُونَ اللَّهَ وَرَسُولَهُ لَعَنَهُمُ اللَّهُ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ
وَأَعَدَّ لَهُمْ عَذَابًا مُّهِينًا ﴿٥٨﴾

**அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் துன்பத்தைக் கொடுப்பவர்களை, அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சபித்துள்ளான். மேலும் அவன் அவர்களுக்கு இழிவுபடுத்தக்கூடிய தண்டனையை ஆயத்தப்படுத்தியுள்ளான். (சூரா அல் அஹ்ஸாப், வசனம் 58)**

இந்தக் கட்டளை முடிந்து விடவில்லை. நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் உயிருள்ள நபியாவார்கள். அவர்களின் போதனை எப்பொழுதும் உயிரை வழங்கக்கூடிய போதனையாகும். அவர்களின் சரீஅத் எல்லா காலத்தின் பிரச்சனைகளுக்கும் தீர்வு தரக்கூடிய சரீஅத் ஆகும். அன்னாரைப் பின்பற்றுவதால் அல்லாஹ்வுடைய நெருக்கம் கிடைக்கின்றது. இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு ஏதாவதொரு வகையில் துன்பம்

கொடுக்கப்படுகின்றதே அதற்கும் இந்த வசனம் பொருந்துகிறது. அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான். இவர்கள் என்ன செய்கின்றனர் என்பதை அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

எனவே உலகத்திற்கு புரிய வைக்க வேண்டியது நமது கடமையாகும். உலகுக்கு நாம் கூறவேண்டியதென்னவென்றால், நீங்கள் என்ன துன்பமிழைக்கின்றீர்களே அதற்கான தண்டனையைக் கொடுக்க இன்றும் அல்லாஹ்வுக்கு ஆற்றல் இருக்கின்றது. எனவே அல்லாஹ்வுக்கும் அல்லாஹ்வின் தூதருக்கும் துன்பமிழைப்பதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இஸ்லாத்தினுடைய போதனைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரிகளையும் உலகிற்கு எடுத்துரைக்கின்ற அதே சமயத்தில் நாம் நமது செயல்களையும் சரி செய்ய வேண்டியது வரும். ஏனெனில் நமது செயல்கள் தான் இந்த உலகத்தின் வாயை அடைக்கும். மேலும் இவைதான் உலகத்தின் வாயை அடைப்பதற்கு மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. நான் அறிக்கையில் கூறியது போன்று, அங்குள்ள ஒரு முஸ்லிம் ஆலிமைப் பற்றியும், அவர் எங்களிடம் ஒன்று சொல்கிறார்; அங்கு சென்று ஏதோ செய்கிறார் என்ற நயவஞ்சகம் செய்யும் குற்றச்சாட்டு கூறப்படுகிறது. நான் அநேகமாக அந்த அறிக்கையை படித்துக் காட்டவில்லை என நினைக்கிறேன். ஆக நாம் நமது வெளிப்புறத்தையும், சொல்லையும் செயலையும் ஒன்றாக்கி செயல் அளவிலான முன்மாதிரியை காட்ட வேண்டியது வரும்.

## கொடிகளை எரிப்பதாலோ அல்லது பொருள்களை உடைப்பதாலோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம் நிலைபெறாது

முஸ்லிம்கள் என்று கூறுபவர்களிடமும் நான் கூறுகிறேன். அஹ்மதிய்யாவா, ஷியாவா அல்லது சன்னியா அல்லது இஸ்லாத்தின் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதை நீங்கள் பார்க்காமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் நடக்கும் போது தற்காலிக ஆவேசம் கொள்வதை விட்டுவிட்டு, கொடிகளை கொளுத்துவதை விட்டு விட்டு, பொருள்களை உடைத்தெறிவதை விட்டுவிட்டு, தூதரகங்களை தாக்குவதை விட்டு விட்டு, உங்கள் செயல்களை சரிப்படுத்துங்கள்.

எதிரிகளுக்கு விரல்நீட்ட வாய்ப்பே கிடைக்கக்கூடாது. தீயிட்டுக் கொளுத்துவதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதிப்பு இவ்வளவு தான் என இவர்கள் கருதுகின்றார்களா? நவூதுபில்லாஹ். கொடியை எரிப்பதால், தூதரகங்களின் பொருள்களை எரிப்பதால் அதற்குப் பழிவாங்கி விட்டதாக நினைக்கின்றார்களா? அவ்வாறல்ல. நாமோ நெருப்பை அணைக்க வந்த நபியை ஒப்புக் கொண்டவர்களாவோம்! அவர் அன்பின் தூதராக வந்தார். அவர் சமாதான இளவரசராக இருந்தார். எனவே எவ்வகையிலும் கடுமையாக நடந்து கொள்வதற்குப் பதிலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய போதனைகளை உலகுக்கு எடுத்துக் கூறி புரிய வையுங்கள்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. ஆனால் நான் அஹ்மதிகளிடம் கூறிக் கொள்கிறேன். (முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு இந்த அறிவும். புரியும் திறனும் வருமா? வராதா? என்று தெரியவில்லை. ஆனால் உங்களில் ஒவ்வொருவரும், ஒவ்வொரு முதியவரும், ஒவ்வொரு சிறுவரும், ஒவ்வோர் இளைஞரும் ஒவ்வோர் ஆணும், ஒவ்வொரு பெண்ணும் வெளியிடப்பட்டிருக்கும் இந்த முட்டாள்தனமான கார்டூனுக்கு எதிர்நடவடிக்கையாக என்றும் அணையாத நெருப்பை மூட்டுபவர்களைச் சேர்ந்தவர்களில் தம்மை இணைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாட்டின் கொடியையோ அல்லது அதன் உடமைகளையோ எரித்து சில நிமிடங்களோ அல்லது சில மணி நேரங்களிலோ அணைந்து விடும் நெருப்பு அல்ல. பாகிஸ்தானின் ஒரு படம் காட்டப்பட்டது. பெரும் போர் புரிவதைப் போன்று. மக்கள் ஆவேசத்துடன் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். அந்தத் தீ ஐந்து நிமிடத்தில் அணைந்து விடும். நமது நெருப்பு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் நொருப்பாக இருக்க வேண்டும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பு, நேசம் என்ற நெருப்பாகும். அன்னாரின் ஒவ்வொரு முன்மாதிரிகளையும் கடைபிடிக்கின்ற, உலகத்திற்கு காட்டுகின்ற நெருப்பாகும். அத்தகைய நெருப்பு உங்களின் உள்ளங்களிலும் நெஞ்சங்களிலும் பற்றிய பிறகு பற்றிக் கொண்டே இருக்க வேண்டும். இந்த நெருப்பு துஆவாகவும் மாற வேண்டும். அதன் சுடர் எப்பொழுதும் வானம் வரை சென்று கொண்டிருக்க வேண்டும்.

## உங்களது வேதனைகளை துஆவாக மாற்றுங்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்து ஓதுங்கள்

எனவே இந்த நெருப்பதைத்தான் ஒவ்வொர் அஹ்மதியும் தமது உள்ளத்தில் மூட்ட வேண்டும். மேலும் உங்கள் வேதனையை துஆவாக மாற்ற வேண்டும். ஆனால் பின்னர் அதற்கும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் தான் காரணியாக ஆக வேண்டும். உங்கள் துஆ கபூல் ஆவதற்கு இறைவனின் அன்பை ஈர்ப்பதற்கு உலக வீண் கேளிக்கைகளிலிருந்து விலகுவதற்கு இந்த மாதிரியான குழப்பங்கள் உருவாகும் போது அதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்மை உள்ளத்தில் குடிபெயரச் செய்வதற்கு நமது இம்மைமையம் மறுமையையும் சரியாக்குவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எண்ணற்ற சலவாத்தை ஓத வேண்டும். அதிகமாக சலவாத் ஓத வேண்டும். இந்த குழப்பம் நிறைந்த காலகட்டத்தில் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்தில் மூழ்கியவாறு வைத்திருப்பதற்கு நமது சந்ததிகளை இஸ்லாம் அஹ்மதிய்யத்தில் நிலைபெறச் செய்வதற்கு ஒவ்வொர் அஹ்மதியும் அல்லாஹ்வின் இக்கட்டளைக்கு உறுதியாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ۚ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

**அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் இந்த நபியின் மீது தரூதும், சலாமும் ஓதுங்கள். ஏனென்றால் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் இந்த நபியின் மீது அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறார்கள். (சூரா அல் அஹ்ஸாப் வசனம் 57)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள். இந்த ஹதீஸுக்கு பல மேற்கோள்கள் உள்ளன. என்மீது அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் சலவாத் அனுப்புவதே எனக்கு போதுமானது. (சலவாத் ஓதுமாறு) உங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையானது உங்களை பாதுகாப்பதற்காகவாகும். (தஃப்ஸீர் துர்ரே மன்ஸூர் – தர்கீப் அஸ்ஃபஹானி; முஸ்னது தய்லமீ – தரூது சரீஃப் பக்கம் 158, தொகுப்பு: மவ்லானா முஹம்மது இஸ்மாயீல் ஹலால் பூரி – புதிய வெளியீடு)

எனவே நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இந்த ஸலவாத்தின் தேவை இருக்கிறது. இது தவிர இந்த வசனம் மற்றும் இந்த ஹதீஸின் முதல் பகுதியிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்த்தை வீழ்த்துவதற்கும், ஏளனப்படுத்துவதற்கும் இம்மக்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் அன்னார் மீது அருள் பொழிந்து கொண்டிருப்பதால் அவர்களின் சலாத்தின் துஆவினால் எதிரிகள் ஒருபோதும் வெற்றியடைய முடியாது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்து விட்டது. அருளுக்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் நடத்துவதால் இவர்களுக்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. இஸ்லாம் முன்னேறும். உலகை வெற்றி கொள்ளும். முழு உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடி பறக்க விடப்படும் இன்சா அல்லாஹ்.

நான் முன்னர் கூறியது போன்று, இக்காலகட்டதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் வாக்களிக்ப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக இது நிறைவேறும் என இறைவன் விதித்துள்ளான்.

ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் எடுத்துரைத்த ஒரு மேற்கோளில் இவ்வாறு கூறுகிறார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுவதை நானே கேட்டேன். அன்னார் கூறினார்கள். அதிகமாக சலவாத் ஓதியதன் விளைவாக இறைவன் எனக்கு இந்த தகுதியை வழங்கியிருக்கிறான். இறைவனுடைய அருள்கள் வினோதமான ஒளியின் தோற்றத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி செல்லக் கண்டேன். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் கலந்து விடுகிறது. மேலும் அது அதிலிருந்து முடிவற்ற ஓடைகளாகி வெளிப்படுகின்றது. ஒவ்வொரு உரிமையாளருக்கும் அவரது தகுதிக்கேற்ப பங்குகளாக பரிகிறது. நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாக அன்றி எந்த அருளும் மற்றவர்களுக்கு கிடைக்கவே முடியாது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். சலவாத் என்பது என்ன? அது ஒளிகளின் ஓடைகள் வெளிப்படுகின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அரியணையை

இயக்குவதேயாகும். எவர் அல்லாஹ்வின் அருளையும் கொடையையும் பெற விரும்புகிறாரோ அவர் அதிகமாக சலவாத் ஓதுவது இன்றியமையாததாகும். அதன் மூலம் அந்த அருளில் இயக்கம் உருவாகி விடும்.

**(அல் ஹகம் பத்திரிக்கை. தொகுதி 7 எண் 8, பக்கம் 7, நாள் 28 பிப்ரவரி 1903)**

நாம் காலத்தின் குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்காகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்தை உள்ளத்தில் நிலைபெறச் செய்வதற்காகவும், அன்னார் கொண்டு வந்த போதனையை உலகில் பரப்புவதற்காகவும், அன்னார் மீது சலவாத் ஓதியவாறு, அல்லாஹ்வின் பக்கம் குனிந்தவாறு அவனிடம் உதவி கேட்டவாறு அவனது கருணைக்கும் அருளுக்கும் வாரிசாகிக் கொண்டே செல்லுமாறு அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக.

★ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமானப்படுத்தும் செயல்களில் பிடிவாதமாக இருப்பதும், தொடர்ந்து அன்னாரை அவமானப்படுத்திக் கொண்டே செல்வதும் அல்லாஹ்வின் கோபத்தைத் தூண்டுவதற்கு காரணமாகும்.

★ உலகில் வந்து கொண்டிருக்கின்ற இந்த பூகம்பங்கள், வெள்ளப் பெருக்குகள், ஆபத்துகள் ஆசியா கண்டத்திற்கு மட்டும் உரியதல்ல. இறைவனின் மஸீஹ் ஐரோப்பாவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். அமெரிக்காவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே கொஞ்சம் இறைவனுக்கு அஞ்சுங்கள். இறைவனின் தன்மான உணர்வை தூண்டாதீர்கள்.

★ தன்னைப் பற்றியும் தனது அன்பிற்குரியவர்கள் பற்றியும் தன்மான உணர்வுள்ள இறைவன் தனது வல்லமை மிகு தோற்றத்துடன் வரக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளான்.

★ முஸ்லிம் நாடுகளும், முஸ்லிம்கள் என அழைக்கப்படுபவர் -களும் தமது நடவடிக்கையை சரி செய்யுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அந்தஸ்தையும், அன்னாரின் அழகையும் உலகின் முன் எடுத்துரையுங்கள்.

★ இன்று முஸ்லிம்கள் - இன்னும் சொல்லப்போனால் முழு உலகின் சரியான திசையை முடிவெடுப்பதற்காக அல்லாஹ் தனது அன்பிற்குரிய நபி (ஸல்) அவர்களின் உண்மை நேசர் (ஆகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம்) அவர்களை அனுப்பி இருக்கிறான். அவரை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். அவரைப் பின்பற்றிச் செல்லுங்கள்.

★ இஸ்லாத்தின் மேன்மையையும் மகத்துவத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களி; பரிசுத்தத்தன்மையையும் மஸீஹ் மஹ்தியின் ஜமாஅத்துதான் நிலைநிறுத்த வேண்டும்.

★ ஒவ்வொரு மார்க்கத்தின் போதனைக்கேற்ப எவர் வரவிருந்தாரோ அவர் வந்து விட்டார் என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் தமது சுற்றுப்புறத்தில் ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெளிவாக அறிவித்து விடுங்கள்.

**ஜுமுஆ குத்பா - 17.02.2006**

**இடம் : பைத்துல் ஃபுதூஹ், இங்கிலாந்து**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ. الرَّحْمٰنِ الرَّحِيمِ. مٰلِكِ يَوْمِ الدِّينِ. إِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِينُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ. صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ.

கடந்த ஜுமுஆ குத்பாவில் அதற்கு முன்பு கொடுக்கப்பட்ட இரண்டு குத்பாக்களில் கூறப்பட்ட கருத்தைப் பற்றியே நான் கூற விரும்பினேன். ஆனால் சில மேற்கத்திய செய்தித்தாள்கள் செய்த விரும்பத்தகாத, பொருத்தமற்ற செயலினால் இஸ்லாமிய உலகில் துக்கம் மற்றும் கோபத்தின் அலை வீசியது. இதற்கு மேற்கொள்ளப்பட்ட எதிர் நடவடிக்கை குறித்து கூறுவது அவசியம் என நான் கருதினேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது எதிர்நடவடிக்கைகள் எவ்வாறிருக்க வேண்டும் என அஹ்மதிகளுக்கும் தெரிய வேண்டும். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளுக்கு தெரியுமென்றாலும் நினைவூட்ட வேண்டிய தேவை ஏற்படுகிறது. மேலும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் சரியான எதிர்நடவடிக்கை எவ்வாறு இருக்கிறது என்பதை உலகம் தெரிந்து கொள்வதற்காகவும் நாம் இதனை கூறுகின்றோம்.

## மற்றவர்களின் உணர்வுகளோடு விளையாடுவது ஜனநாயகமோ, கருத்து சுதந்திரமோ அல்ல

எந்தவொரு மதத்தின் தூய ஸ்தாபகர்கள் தொடர்பாகவும் எவ்விதத்திலும் பொருத்தமற்ற கருத்துக்களை தெரிவிப்பதை எவ்விதத்திலும் கருத்து சுதந்திரம் என்று நம்மால் கூற முடியாது. நீங்கள் ஜனநாயகம் மற்றும் கருத்து சுதந்திரத்தின் சாம்பியனாக உள்ளோம் என்று கூறிக்கொண்டு மற்றவர்களின் உணர்வுகளோடு விளையாடுகிறீர்களே. இது ஜனநாயகமும் அல்ல. கருத்து சுதந்திரமுமல்ல. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எல்லை இருக்கின்றது. நல்லொழுக்கத்திற்கென்று சில அளவுகள் உள்ளன. எவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும்

நல்லொழுக்கத்தின் சில விதிமுறைகள் உள்ளனவோ அவ்வாறே பத்திரிக்கைத் துறைக்கும் நல்லொழுக்க விதிமுறைகள் உள்ளன. எப்படிப்பட்ட அரசாங்கமாக இருந்தாலும் அதற்கும் சட்ட திட்டங்கள் உள்ளன. கருத்து சுதந்திரம் என்பது மற்றவர்களது உணர்வுகளுடன் விளையாடுவது என்று ஒருபோதும் பொருளாகாது. மற்றவர்களுக்கு துன்பத்தை தருவது இதன் பொருளல்ல. மேற்கத்திய உலகம் பெருமை கொண்டாடும் கருத்து சுதந்திரம் இதுதான் என்றால், இந்த சுதந்திரம் முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு செல்லக் கூடியதல்ல. மாறாக, இது வீழ்ச்சியின் பக்கம் கொண்டு செல்லும் சுதந்திரமாகும்.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமானப்படுத்தும் செயல்களில் பிடிவாதம் பிடிப்பது இறை கோபத்தை மூட்டுவதற்கு காரணமாகும்

மேற்கத்திய உலகம் வெகுவேகமாக மார்க்கத்தை கைவிட்டுவிட்டு சுதந்திரம் என்ற பெயரில் எல்லா துறையிலும் நல்லொழுக்கத்தின் தகுதிகளை அழித்துக் கொண்டிருக்கிறது. எவ்வாறு அந்த மக்கள் அழிவை அழைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது கூட அவர்களுக்கு தெரியவில்லை. இப்போது இத்தாலியில் ஒரு அமைச்சர் ஒரு புது வி-மத்தை தூண்டிவிட்டுள்ளார். அதாவது இந்த அசிங்கமான, தரக்குறைவான கேலிச் சித்திரங்களை T. Shirts-களில் வரைந்து அதை அணியத் தொடங்கியுள்ளார்.மேலும் தன்னிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என பிறருக்கும் கூறியிருக்கிறார். அங்கு அது விற்கப்படுவதாகவும் கேள்விப்படுகிறோம். மேலும் அவர் முஸ்லிம்களுக்கான சிகிச்சை இதுவேயாகும் என்றும் கூறியுள்ளார். இது முஸ்லிம்களுக்கான சிகிச்சையா? இல்லையா? என்பது பற்றி நமக்குத் தெரியாது. ஆனால் இப்படிப்பட்ட செயல்களால் இறைவனின் கோபத்தை தூண்டுவதற்கு அவர்கள் நிச்சயமாக காரணமாகி கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுவரை முட்டாள்தனமாக நடைபெற்றதாக இருக்கட்டும். ஆனால், இப்படிப்பட்ட செயல்களை தொடர்ந்து பிடிவாதத்துடன் செய்து வருவதும் நாங்கள் செய்வது சரிதான் என்று கூறி முரண்டு பிடிப்பதும் அல்லாஹ்வின் கோபத்தை நிச்சயமாக தூண்டுகிறது.

## இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும்?

எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியது போன்று மற்ற முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கை எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், ஓர் அஹ்மதி முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்றால், இவர்களுக்கு புரிய வைப்பதுடன் இறைவனது கோபத்திற்கு ஆளாகி விடாதீர்கள் என அச்சமூட்டுங்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய உருவத்தை உலகின் முன்னால் எடுத்து வையுங்கள். மேலும் உங்கள் ஆற்றல்மிக்க, வல்லமைமிக்க இறைவன் முன்னிலையில் குனியுங்கள். அவனிடம் உதவி கேளுங்கள். இந்த மக்கள் இறைதண்டனையின் பக்கம்தான் சென்று கொண்டிருக்கின்றார்களென்றால் தன்மீதும் தனக்குப் பிரியமானவர்களின் மீதும் தன்மான உணர்வுள்ள அந்த இறைவன் தனது கோபத்தின் தோற்றங்களுடன் தன்னை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவனாவான். எல்லா ஆற்றல்களின் எஜமானனும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு கட்டுப்படத் தேவையில்லாதவனும் எல்லாவற்றின்மீதும் ஆற்றல் படைத்தவனும் வல்லமைமிக்கவனுமாகிய அந்த இறைவனின் ஆட்டு உரல் சுற்ற ஆரம்பித்து விட்டால் பிறகு மனிதன் அதுபற்றி சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. பிறகு அவனிடமிருந்து எவரும் தப்ப முடியாது.

எனவே, மேற்கில் உள்ள சில மக்கள் அல்லது சில நாடுகள் செய்கின்ற செயல்களைப் பார்க்கும் போது அஹ்மதிகள் இறைவன் முன்னிலையில் மேலும் அதிகமாக குனிய வேண்டும். இறைவனின் மஸீஹ் (இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம்) ஐரோப்பாவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அமெரிக்காவிற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகில் வந்து கொண்டிருக்கின்ற இந்த பூகம்பங்கள், இந்த புயல், இந்த ஆபத்துகள் ஆசியாவிற்கு மட்டும் உரியதல்ல. அமெரிக்காவும் இதன் ஒரு தோற்றத்தை பார்த்து விட்டது. எனவே, ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. எனவே, இறைவனுக்கு கொஞ்சமாவது அஞ்சுங்கள். மேலும் இறைவனது தன்மான உணர்வைத் தூண்டாதீர்கள். ஆனால் அத்துடன் முஸ்லிம் நாடுகளும், தங்களை முஸ்லிம் என்று கூறிக்

கொள்பவர்களும் தங்களது நிலைமையை சரி செய்து கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான தகுதியையும் அழகையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையிலுள்ள எதிர்நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என நான் கூறுகிறேன். இது தான் ஒரு நம்பிக்கையாளரின் சரியான எதிர்நடவடிக்கையாக இருக்க முடியும்.

## இஸ்லாத்தின் மகிமையையும் மகத்துவத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதத் தன்மையையும் மஸீஹ், மஹ்தியின் ஜமாஅத் தான் நிலை நிறுத்த வேண்டியிருக்கிறது

ஆனால், இன்று மேற்கொள்ளப்பட்டுவரும் சில செயல்கள் இது எவ்வாறான இஸ்லாமிய எதிர்நடவடிக்கை? தங்களது நாட்டிலுள்ளவர்களையே கொன்று விட்டார்கள். தங்களது சொத்துக்களுக்கே நெருப்பூட்டினார்கள். இஸ்லாமோ ஏனைய சமுதாயங்களின் மீதுள்ள பகைமையின் போதும் கூட நீதி, நேர்மையை கைவிட்டுவிடுவதற்கு அனுமதி தரவில்லை. அறிவுடன் செயல்பட அறிவுறுத்துகிறது. அப்படியிருக்கும் போது கடந்த சில தினங்களாக பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பவங்களும் அல்லது பிற முஸ்லிம் நாடுகளில் நடைபெற்று வரும் சம்பவங்களும் முற்றிலும் இஸ்லாமிய போதனைகளுக்கு மாற்றமானவையாகும். இந்த இஸ்லாமிய நாடுகளில் வெளிநாட்டினரின் தொழிலுக்கோ அல்லது வெளிநாட்டினரின் தூதரகங்களுக்கோ இழப்பை ஏற்படுத்துகின்ற செயலாகட்டும். அல்லது தமது மக்களுக்கே இழப்பை ஏற்படுத்துகின்ற செயலாகட்டும். இவை அனைத்துமே இஸ்லாத்திற்கு அவப்பெரைத்தான் ஏற்படுத்துமேயொழிய வேறொன்றுமில்லை. எனவே, முஸ்லிம் பொது மக்கள் தவறான இந்த ஆலிம்களையும், தலைவர்களையும் பின்பற்றிச் செல்வதற்கு பகரமாக, அவர்களுக்குப் பின்னால் சென்று தமது இம்மையையும் மறுமையையும் வீணாக்குவதற்குப் பகரமாக அறிவுடன் செயல்பட வேண்டும். இன்று முஸ்லிம்களுக்கு ஏன் முழு உலகிற்கும் சரியான திசையை காட்டுவதற்காக அல்லாஹ் தனது அன்பான நபி (ஸல்) அவர்களின் உண்மையான அன்பரை அனுப்பியுள்ளான். அவரை அடையாளங்கண்டு கொள்வதுடன்

அவரை நீங்கள் பின்பற்றி செல்ல வேண்டும். உலகத்தை சீர்திருத்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் ஏற்றுவதற்காக அந்த மஸீஹ் மஹ்தியின் ஜமாஅத்தில் நீங்கள் இணைய வேண்டும். இப்போது வேறு எந்த வழிமுறையும், வேறு எந்த வழிகாட்டியும் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைக்கேற்ப நடத்துவதற்கும் அவ்வழியில் நடத்த வைப்பதற்கும் வழிகாட்ட முடியாது. மஸீஹ், மஹ்தியின் ஜமாஅத் தான் இஸ்லாத்தின் மகிமையையும் மகத்துவத்தையும் மீண்டும் நிலைபெறச் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனிதத்தன்மையை நிலைநிறுத்த வேண்டியதிருக்கிறது. பிறரையும் அவ்வாறே நிலைநிறுத்தச் செய்ய வேண்டியதிருக்கிறது– இன்சா அல்லாஹ்.

## மஸீஹ் இறங்குவார் என்பதன் உண்மையான பொருளும், மஸீஹ் மற்றும் மஹ்தியின் சில பணிகளும், அவரின் உண்மைக்கான சில ஆதாரங்களும்

எனவே, இதுபற்றி ஒவ்வொருவரும் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்பவர்களும் சிந்தனை செய்ய வேண்டும். நாமும் அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இந்த பெயர்தாங்கி ஆலிம்களின் வறட்டு வாதங்களில் சிக்கிக் கொள்ள வேண்டாம். அதாவது, வரவேண்டிய மஸீஹ் இன்னும் வரவில்லை. அல்லது அவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் இறங்குவார். அதாவது, மஹ்தி இன்னொரு இடத்தில் தோன்றுவார் என்றெல்லாம் இவர்கள் கூறும் தவறான கருத்துக்களுக்கு ஒரு நபிமொழியை அவர்கள் புரியாததுதான் காரணமாகும். இந்த (நபிமொழி) அறிவிப்பை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள். அன்னார் கூறுகிறார்கள்:

“மர்யமின் மகன் மஸீஹ் விண்ணிலிருந்து இறங்குவார் என்றும் டமாஸ்கஸின் கிழக்கே வெள்ளை மினாராவிற்கு அருகில் தான் அவர் இறங்குவார் என்றும், இரண்டு மலக்குகளின் தோள்களில் அவர்களது கைகள் இருக்கும் என்றும் நபிமொழிகள் மிகத் தெளிவான சொற்களில் கூறும்போது அப்படியான தெளிவான விசயத்தை எப்படி மறுக்க முடியும்? என கேட்கப்பட்டால்” அதாவது இவ்வாறான தெளிவான

வெளிப்படையான விசயத்தை எவ்வாறு மறுக்க முடியும் என இம்மக்கள் கேட்கின்றனர்.

இதற்கு பதிலளித்தவாறு அன்னார் கூறுகிறார்கள்: “இதற்கான பதில் என்னவென்றால், விண்ணிலிருந்து இறங்குவது என்பதற்கு உண்மையாகவே பூத உடலுடன் இறங்குதல் என்று பொருளல்ல. இன்னும் சொல்லப்போனால், சஹீஹான நபிமொழிகளில் வானம் என்ற சொல் கூட இடம் பெறவில்லை. நுஸுல் (இறங்குதல்) என்ற சொல் பொதுவானதாகும். எவர் ஓரிடத்திலிருந்து நடந்து சென்று இன்னொரிடத்தில் தங்குவதையும் இந்த இடத்தில் இறங்குகிறார் என்றே கூறுகிறோம். உதாரணமாக, அந்த இடத்தில் படை இறங்கியது என்று கூறுகின்றோம். அதற்கு அந்தப்படை வானத்திலிருந்து இறங்கியது என்றா நாம் புரிந்து கொள்கின்றோம்? இதைத் தவிர தெளிவாக அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வானத்திலிருந்து இறங்கியதாகத்தான் கூறுகின்றான். அவ்வாறே இரும்பையும் நாம் வானத்திலிருந்து இறக்கினோம் என்று இன்னோரிடத்தில் கூறுகின்றான். எனவே, இந்த வகையில் வானத்திலிருந்து இறங்குதல் என்பது மக்கள் புரிந்து வைத்திருப்பது போன்று தனிப்பட்ட ஒருவகையில் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது”.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின், தொகுதி 3 பக்கம் 132,133)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஹதீஸுகள் இந்த விளக்கங்களினால் நிரம்பி காணப்படுகின்றன. மக்களுக்கு சுயமாக இந்த அளவு அறிவும் இருப்பதில்லை. மேலும் ஆலிம்கள் தவறாக வழிகாட்டி விடுகின்றனர்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இதனால் தான் யூதர்களுக்கு தவறு ஏற்பட்டது. அதனால் அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை”.

இந்த எல்லா நீண்ட விசயங்களையும், விளக்கங்களையும் சுருக்கமாக இப்போது கூற இயலாதுதான். இப்போது சூழ்நிலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன. அஹ்மதிகளும் இவ்விசயங்களை தமது சுற்றுப்புறத்தில் தெளிவாக எடுத்து வைக்க வேண்டும். அதன் மூலம் எந்த அளவு எத்துணை தூய உள்ளங்கள் தப்பித்துக் கொள்ள முடியுமோ தப்பித்துக் கொள்ளட்டும். எந்த அளவு நல்லவர்கள் தப்பித்துக் கொள்ள முடியுமோ தப்பித்துக் கொள்ளட்டும். ஒவ்வொரு மார்க்கத்திலும் உள்ள முன்னறிவிப்பிற்கேற்ப, தோன்ற வேண்டிய ஒருவர் வந்து விட்டார் என்ற செய்தியை அஹ்மதிகள் தத்தமது இடங்களில் உள்ள எல்லா மதங்களை சார்ந்தவர்களுக்கும் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இப்போது நான் அபூதாவூது தனது ஸஹீஹில் எழுதியுள்ள அந்த நபிமொழியை வாசகர்களுக்கு எடுத்து கூறுவதுடன் அதற்குப் பொருந்தக் கூடியவர் பற்றி அவர்களுக்கு கவனமூட்டுகின்றேன். அபூதாவூதின் ஸஹீஹில் இடம்பெற்றுள்ள இந்த முன்னறிவிப்பில் ஹர்ராஸு மாவரா அன்னஹர் என்ற வாசகம் வருகிறது. அதாவது ஹாரிஸ் என்ற பெயரில் சமர்க்கந்திலிருந்து வெளிப்படுவார். அவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது குடும்பத்தினருக்கு வலுவூட்டுவார். அவருக்கு உதவி ஒத்தாசை செய்ய வேண்டியது ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் கடமையாகும் என்று வந்துள்ளது. இந்த முன்னறிவிப்பும் முஸ்லிம்களிலிருந்து தோன்றி முஸ்லிம்களுக்கு இமாமாக இருக்க வேண்டிய மஸீஹின் வருகை தொடர்பான முன்னறிவிப்பும் ஒரே கருத்தைக் கொண்ட இரு முன்னறிவிப்புகளாகும் என்றும், குறிப்பிடப்பட்டுள்ள அந்த நபர் இந்த எளியவன் தான் என்றும் இறையறிவிப்பின் அடிப்படையில் எனக்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. மஸீஹின் வருகை தொடர்பான முன்னறிவிப்பில் அவருக்கான சிறப்பான அடையாளங்கள் உண்மையில் இரண்டு தான். ஒன்று, மஸீஹ் வரும்போது முஸ்லிம்களின் உட்புற நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதை பார்த்து அவர் தனது சரியான போதனைகள் மூலம் அதை சரிசெய்து விடுவார்."

நான் ஏற்கனவே கடந்த குத்பாக்களில் இதுபற்றி கூறிவிட்டேன். முஸ்லிம்களின் நிலை வீழ்ச்சியடைந்து விட்டதையும் ஒரு சீர்திருத்தவாதியின் அவசியமுள்ளதையும் இவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் கருவூலங்களை வாரி வழங்குவார் என்பதன் கருத்து

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“அந்த மஸீஹ் தனது தூய போதனைகளால் சரி செய்து விடுவார். மேலும் அவர்களின் (முஸ்லிம்களின்) ஆன்மீக வீழ்ச்சியையும், உட்புறமான வறுமையையும் முற்றிலும் அகற்றி அறிவின் கருவூலகங்களையும் உண்மையான ஞானங்களையும் இறை ஞானங்களையும் அவர்கள் முன் வைப்பார்.”

அதாவது இந்த ஆன்மீக கருவூலங்களை வழங்குவார். மக்களுக்கு முன்னால் ஆன்மீக ஞானத்தை தெளிவுபடுத்துவார். “எதுவரையென்றால், இந்த செல்வங்களை பெறுவதனால் அம்மக்கள் சோர்வடைந்து விடுவார்கள். அவர்களில் உண்மையை தேடும் எவரும் ஆன்மீகமான முறையில் ஏழையாகவும் ஆதரவற்றவராகவும் இருக்க மாட்டார். உண்மையை அறிவதற்கான பசியையும், தாகத்தையும் கொண்ட மக்கள் இருப்பார்களோ அவர்களுக்கு உண்மையின் தூய்மையான உணவும் இறைஞானத்தின் சுவைமிக்க பானமும் வழங்கப்படும்.”

அதவாது இந்த உண்மையின் தூய உணவு அவர்களுக்கு கிடைக்கும். சரியான இஸ்லாமிய போதனைகள் அவர்களுக்கு கிடைக்கும். மஸீஹ் மவ்வூதின் மூலமாகவே இந்த இறைஞானத்தின் சுவைமிக்க பானம் அவர்களுக்கு அருந்த வழங்கப்படும். இவர்கள் இறைஞானத்தின் பானத்தை அருந்தக் கூடியவர்களாக இருந்திருப்பார்கள் என்றால் ஆக்கமற்ற ஏன் அழிவை ஏற்படுத்தக்கூடிய எதிர்நடவடிக்கையில் இப்போது இறங்குவதற்குப் பகரமாக ஆக்கப்பூர்வமான எதிர்நடவடிக்கையை செய்திருப்பார்கள். மேலும் இறைவன் முன் குனிகின்றவர்களாக ஆகியிருப்பார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"மேலும் உண்மையான ஞானங்கள் என்ற முத்துக்களால் இவர்களது பைகள் நிரப்பப்படும்."

இஸ்லாத்தின் உண்மையான அறிவு மிக விலை உயர்ந்த ஒரு கருவூலமாககும். அவை முத்துக்களை போன்றதாகும். அதைக்கொண்டு அவர்களின் பைகளை நிரப்பி விடுவார். தொடர்ந்து அன்னார் கூறுகிறார்கள். மேலும் திருக்குர்ஆனின் சாராம்சமும், தூய போதனைகளும் அடங்கிய நறுமணமிக்க வாசனை திரவியங்களின் ஒரு குப்பி அவர்களுக்கு வழங்கப்படும்." (திருக்குர்ஆனின் நறுமணம் அவர்களுக்கு வழங்கப்படும்).

## சிலுவையை முறிப்பார்; பன்றியைக் கொல்வார் என்பதன் விளக்கம்

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

இரண்டாவது சிறப்பு அடையாளமாக கூறப்பட்டிருப்பதாவது, அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது அவர் சிலுவையை முறிப்பார்; பன்றிகளை கொல்வார். ஒற்றைக் கண் தஜ்ஜாலைக் கொல்வார். எந்த காஃபிர் வரை அவரது மூச்சுச் காற்று சென்றடையுமோ அந்த காஃபிர் உடனடியாக இறந்துவிடுவார் என்பதாகும். ஆகவே, உண்மையில் இந்த அடையாளத்திற்கு ஆன்மீகமான முறையில் கொள்ளப்பட்டிருக்கின்ற கருத்து என்னவென்றால், மஸீஹ் உலகில் வந்து சிலுவை மார்க்கத்தின் மகிமையை தனது கால்களின் கீழ் வீழ்த்தி அதை நசுக்கி விடுவார். பன்றிகளின் வெட்கங்கெட்ட நிலைகளையும் (அதுவும் ஒரு விலங்கேயாகும்) அசுத்தங்களை தின்னும் நிலையையும் அடைந்துள்ள மக்களை தனது ஆதாரங்கள் எனும் வாளால் அவர் வெட்டி வீழ்த்தி விடுவார். மேலும் உலகின் கண்களை மட்டும் வைத்துக் கொண்டு மார்க்க கண்களை முற்றிலும் இழந்த நிலையில் அதில் ஒரு கோரமான டென்ட் (Tent) வெளிப்பட்டிருக்கும்."

அதாவது கண்ணில் கட்டி தோன்றியிருக்கும் மக்களை "தெளிவான வாதங்களின் வெட்டும் வாள் கொண்டு" (அதாவது வெட்டுகின்ற ஆதாரங்கள் எனும் வாளினால்) "குற்றவாளி என நிரூபித்து நிராகரிக்கின்ற அவர்களை கொன்று விடுவார்."

ஆக, இவைதான் அந்த ஆதாரங்களாகும். இவற்றின் மூலமாகத்தான் வெட்ட வேண்டும். இவற்றின் மூலமாகத்தான் அவர்களின் பொய்யான வாதங்களையும் பொய்யர்களையும் முடிவுக்கு கொண்டு வர முடியும்.

"ஒற்றை கண்ணுடைய இவர்களை மட்டுமல்லாமல் முஹம்மதின் மார்க்கத்தை மிகவும் இழிவான பார்வையுடன் பார்க்கின்ற ஒவ்வொரு காஃபிரையும்" அதாவது எவரெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை ஏளனத்தோடு பார்க்கிறாரோ "அவர் மஸீஹிய ஆதாரங்கள் எனும் கம்பீரமான மூச்சுக்காற்றால் ஆன்மீக ரீதியாக கொல்லப்பட்டு விடுவார்." அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆதாரங்களினால் அவரை கொல்வார். "சுருக்கமாக, இந்த எல்லா சொற்களுமே உருவமாக கூறப்பட்டவையே. இந்த எளியவனிடத்தில் இவ்விசயம் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது. ஒருவர் இதனை புரிந்து கொண்டாலும்சரி; புரிந்து கொள்ளாவிட்டாலும் சரி; ஆனால் இறுதியில் இம்மக்கள் சிறிது காலம் காத்திருந்த பிறகு தமது அடிப்படையற்ற நம்பிக்கைகளிலிருந்து முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில் முற்றிலும் அறியாமையில் வீழ்ந்த பிறகு ஒருநாள் இவர்கள் எல்லாரும் இதன் பக்கம் திரும்புவார்கள்."

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின், தொகுதி 3
பக்கம் 141 – 143 வரையுள்ள அடிக்குறிப்பு)

எனவே, இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கிறித்தவத்தை சவால் விடுத்தார்கள். மிக வேகமாக பரவிக் கொண்டிருந்த அவர்கள் தான் தடைசெய்தார்கள். அக்காலத்தில் இந்தியாவில் ஆயிரக்கணக்கான,இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களாகிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்தக் கிறிஸ்தவ தாக்குதலை தடுத்தது மட்டுமல்லாமல் இஸ்லாத்தின் மகிமையை

மீண்டும் நிலைநாட்டினார்கள். இவ்வாறே ஆப்பிரிக்காவிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் கிறிஸ்தவத்தின் எதிர்பாராத தாக்குதலை தடுத்து நிறுத்தி இஸ்லாத்தின் அழகிய உருவத்தை அவர்களுக்கு காட்டியது. ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களை அது அஹ்மதி முஸ்லிம்களாக மாற்றியது. எனவே,இவை தான் (ஈஸா) மஸீஹின் சாதனைகளாக இருந்தன. அவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்து காட்டினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ்வுடைய அருளால் இன்று வரை அவர்கள் தந்த போதனைகள் மற்றும் ஆதாரங்களுடன் மக்களின் உள்ளங்களை வென்றவாறு இலக்குகளை கடந்து கொண்டிருக்கின்றது. இனிமேலும் கடந்து சென்று கொண்டிருக்கும். இன்சா அல்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று ஒருநாள் இவர்கள் அவநம்பிக்கையடைந்து திரும்புவார்கள்.

ஆக. இதுவே இவர்களுடைய பொய்யையும் மோசடியையும் எவ்வாறு அழிப்பது என்பதன் விளக்கமாகும். இதுவே பன்றியை கொல்லுதல், சிலுவையை முறித்தல், தஜ்ஜாலை எதிர்த்தல் என்பதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்த விளக்கமாகும். நான் கூறியது போன்று, இன்றும்கூட அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் ஒவ்வோர் இடத்திலும் கிறித்தவத்தை எதிர்த்து போட்டியிடுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் ஆசியாவிலிருந்து ஒளிபரப்பாகும் ஒரு தொலைக்காட்சியில் அது ஜியோ அல்லது ARY அல்லது வேறு ஏதேனும் TV யாக இருக்கலாம். அதில் அல்லாமா இஸ்ரார் சாஹிப் என்பவர் உரையாற்றும் போது முஸ்லிம் ஆலிம்கள் அறிவிலிகளாக உள்ளனர் என்றும் மார்க்க அறிவோ திருக்குர்ஆன் அறிவோ பைபிள் பற்றிய அறிவோ அவர்களுக்கு முற்றிலும் இல்லை என்றும் கூறிவிட்டு மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் காதியானி அறிவில் சிறந்த மனிதராக இருந்தார். பைபிள் பற்றிய அறிவும் அவருக்கு இருந்தது. மற்ற மதங்கள் தொடர்பான அறிவும் இருந்தது. அதன் காரணமாகத்தான் அன்று அவர் கிறிஸ்தவத்தை எதிர்த்து நின்றார். மேலும் அவர்களை வாயடைக்கச் செய்து விட்டார் என்ற கருத்தைக் கூறியுள்ளார். அவருடைய சொற்பொழிவின் கருத்து ஏறக்குறைய இதேபோன்றிருந்தது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்கள்தான் (அன்னாரே கூறியது போன்று) ஆதாரங்கள் மூலமாகவும், உறுதியான சான்றுகள் மூலமாகவும் அதனை மறுத்தார் என இவர் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அக்காலத்தில் கிறிஸ்தவத்தின் தாக்குதலை தடுத்து நிறுத்தி முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதிலிருந்து பாதுகாத்தவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி தான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இதற்குப் பிறகு அவர் தனது தலைகீழான பல விளக்கங்களை கொடுத்துள்ளார். இவர் மஸீஹாக இருக்க முடியாது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கெதிராகவும் கொஞ்சம் பேசியுள்ளார். எவ்வாறிருப்பினும் கிறிஸ்தவர்களுக்கெதிராக ஒருவர் நின்று, அதன் போதனைகளை ஆதாரங்கள் கொண்டு ஒருவர் மறுத்திருப்பார் என்றால் அது ஒரு வீரர்தான். அவர் பெயர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி என்பது இன்று வரை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இன்று இந்த மக்கள் இதை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று அன்னாரால் எடுத்து வைக்கப்பட்ட இந்த மஸீஹின் ஆதாரங்கள் தான் தஜ்ஜாலை கொன்று விட்டது என்பதையும் அதனால் அவர்கள் தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பதையும் அவர்கள் ஒருநாள் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும்.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் முஹம்மதிய்ய உம்மத்திலிருந்தே வரவிருந்தார்

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“மர்யமின் மகன் மஸீஹ் விண்ணிலிருந்து மலக்குகளின் தோள்மீது கை வைத்தவாறு இறங்குவார் என்ற நபிமொழிக்கு தவறான வெளிப்படையான கருத்தை கொடுப்பதன் காரணமாக முஸ்லிம்கள் இதுவரை மஸீஹிற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். இது தவறு என்பதை மேலும் தெளிவாக நிரூபிப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபிமொழியின் மூலமாகவே அதற்கு விளக்கம் அளித்திருக்கின்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்.

“இந்த உம்மத்திற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இதே உம்மத்தைச் சார்ந்த ஒருநபர் தான் என்பதற்கான பல்வேறு ஆதாரங்களில் ஒன்று, புகாரியிலும் முஸ்லிமிலும் உள்ள ஒரு நபிமொழியாகும். அதில் இமாமுகும் மின்கும் உங்களிலிருந்து தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார் என்ற சொற்களும் அம்மகும் மின்கும் உங்களிலிருந்தே உங்கள் இமாமாக இருப்பார் என்றும் எழுதப்பட்டுள்ளது. இதற்கு அவர் உங்களது இமாமாக இருப்பதுடன் அவர் உங்களிலிருந்தே தோன்றுவார் என்பதும் தெளிவாகி விட்டது. ஏனென்றால், இந்த நபிமொழி வரவேண்டிய ஈஸாவுடன் தொடர்புடையதாகும். அவரை புகழும்வண்ணம் இந்த ஹதீஸில் அவர் தொடர்பாக ஹகம் மற்றும் அத்ல் (நீதியுடன் தீர்ப்பு வழங்குவார்) என்ற சொல் அவரது பண்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது இந்த சொற்றொடருக்கு முன்பு இருக்கிறது. எனவே, இமாம் என்ற சொல்லும் அவரைத் தான் குறிக்கும். இந்த இடத்தில் மின்கும் (உங்களிலிருந்து) என்ற சொல் சஹாபாக்களை குறிப்பிடுகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால், அவர்களை நோக்கித் தான் இது கூறப்பட்டதென்றாலும், அவர்களில் எவருமே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என வாதம் செய்யவில்லை என்பது வெளிப்படை. எனவே, மின்கும் (உங்களிலிருந்து) என்ற சொல் இறைவனது அறிவில் சஹாபாக்களின் இடத்தில் இருக்கின்ற ஒரு நபரைத்தான் குறிக்கும்.” அதாவது அல்லாஹ்வை பொருத்தவரையில் அவர் சஹாபாக்களின் இடத்தில் இருப்பவர் ஆவார். “வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் (மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் அவரை எழுப்புவான். (சூரா அல் ஜுமுஆ வசனம் 4) என்ற வசனத்தில் அந்த நபியை சஹாபாக்களின் இடத்தில் உள்ளவராக கூறப்பட்டுள்ளது. ஏனென்றால், இந்த வசனத்தில் அந்த நபர் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் ஆன்மீகத்திலிருந்து மார்க்க பயிற்சி பெற்றவர் என்பது கூறப்பட்டிருக்கின்றது. இந்த பொருளின் அடிப்படையிலேயே அவர் சஹாபாக்களை சார்ந்தவராகின்றார். இந்த ஆயத்திற்கு விளக்கமாக வரும் நபிமொழியில் லவ் கானல் ஈமானு முஅல்லகன் பிஸ்ஸுரய்யா லனாலஹு ரஜுலும் மின் ஃபாரிஸ் (ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை

சென்று விட்டாலும் பாரசீக வம்சத்திலிருந்து ஒருவர் அதனை மீண்டும் கொண்டு வருவார்) என்று கூறப்பட்டுள்ளது. மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் மஹ்தியின் தனிப்பட்ட இந்த பண்பு அந்த பாரசீக நபருடன் தொடர்புபடுத்தி கூறப்பட்டுள்ளது. ஈமானும், தவ்ஹீதும் இல்லாமலாகி பூமி அநீதியால் நிறைந்துவிடும்போது அதனை நீதியால் மீண்டும் நிரப்புவதற்காக அவர் வருவதால் இதே நபர்தான் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இருக்கின்றார். அந்த நபர் நான்தான். (துஹ்ஃபா கோல்டவிய்யா, ரூஹானி கஸாயின், தொகுதி 17 பக்கம் 114,115)

## மஸீஹ், மஹ்தி என்பது ஒரே நபரின் இரு பெயர்களாகும். அவர் மார்க்கப் போரை நிறுத்துவார்

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இக்கருத்தை மேலும் இவ்வாறு விளக்கிக் கூறுகின்றார்கள்:

“லா மஹ்திய்ய இல்லா ஈஸா (மஹ்தியும் ஈஸாவும் ஒருவரே) என்ற நபிமொழி இப்னு மாஜாவில் இதே பெயரிலே பிரபலம் ஆகும். மேலும் ஹாகிமின் நூலான முஸ்தத்ரக்கில் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிவிப்பினை முஹம்மத் பின் காலித் அல்ஜனதி அவர்கள் அப்பான் பின் சாலிஹிடமிருந்தும், அப்பான் பின் சாலிஹ் அவர்கள் அதனை ஹஸன் பஸரிடமிருந்தும், ஹஸன் பஸரி அவர்கள் அதனை ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்தும், ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்தும் அறிவிப்பு செய்துள்ளார்கள். இந்த ஹதீஸின் பொருள் என்னவென்றால் ஈஸாவின் பண்புகளையும், இயல்பையும், வழிமுறையையும் ஒத்தவராக வருகின்ற அந்த நபரை தவிர வேறு எந்த மஹ்தியும் வரப்போவதில்லை. அதாவது அவரே வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இருப்பார். மஹ்தியாகவும் இருப்பார். அவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பண்பு, இயல்பு மற்றும் போதனையின் வழிமுறையில் வருவார். அதாவது அவர் தீமையை எதிர்க்க சண்டையிடமாட்டார். தூய முன்மாதிரியின் மூலமாகவும் விண்ணின் அடையாளங்கள் மூலமாகவும் நேர்வழியை பரப்புவார். இந்த நபிமொழிக்கு ஆதரவாக ஹஸ்ரத் இமாம்

புகாரி (ரஹ்) அவர்கள் தமது ஸஹீஹ் புகாரியில் இடம்பெறச் செய்துள்ள இன்னொரு நபிமொழியில் யழவுல் ஹர்ப் என்ற சொற்கள் வந்துள்ளன. அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற இன்னொரு பெயருடைய அந்த மஹ்தி மார்க்க சண்டைகளை முற்றிலும் நிறுத்தி விடுவார். மார்க்கத்திற்காக சண்டையிடாதீர்கள் என்ற வழிகாட்டலை அவர் போதிப்பார். மாறாக, மார்க்கத்தை உண்மையின் ஒளியை கொண்டும் நல்லொழுக்கத்தின் அற்புதங்கள் மூலமாகவும் இறைநெருக்கத்தின் அடையாளங்கள் மூலமாகவும் பரப்புங்கள் என்று அவர் போதிப்பார். எனவே, நான் உண்மையாக கூறிக் கொள்கிறேன். எனவே எவர் இப்போது மார்க்கத்திற்காக சண்டையிடுகின்றாரோ அல்லது அப்படி சண்டை இடுகின்ற எவருக்காவது உதவி செய்கின்றாரோ அல்லது வெளிப்படையாகவோ அந்தரங்கமாகவோ இதுபோன்ற ஆலோசனைகளை கூறுவாரோ அல்லது உள்ளத்தில் அப்படிப்பட்ட ஆசைகளை வைத்திருப்பாரோ அவர் இறைவனுக்கும் தூதருக்கும் கட்டுப்படாதவராவார் என நான் உண்மையாகவே கூறுகிறேன். (அதாவது முஸ்லிம்கள் மார்க்கத்தின் பெயரால் சண்டையிட்டால்) அவர்கள் தங்களது போதனைகள், எல்லைகள் மற்றும் கடமைகளை விட்டு வெளியேறி விட்டார்கள்.'' (ஹகீகத்துல் மஹ்தி, ரூஹானி கஸாயின், தொகுதி 14 பக்கம் 431,432)

பாருங்கள்! இன்று முஸ்லிம்களில் நிலைமை இதற்கு சான்றாக இருக்கின்றது. இவர்கள் செய்யும் இந்த போர்கள் இறைகட்டளைக்கேற்ப இருக்குமென்றால் வ கான ஹக்கன் அலைனா நஸ்ருல் முஃமினீன் அதாவது நம்பிக்கையாளர்களுக்கு உதவி செய்ய வேண்டியது நமது கடமையாகும் (சூரா ரூம் வசனம் 48) என்று அல்லாஹ் கூறியிருப்பதற்கேற்ப இவர்களுக்கு அதில் உதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனால், அல்லாஹ்வின் உதவி கிடைக்காததால் இவர்கள் சிந்திக்க வேண்டும். எனவே, போர்கள் செய்வதில் உங்களுக்கு அதிக ஆர்வம் இருக்கிறதென்றால் அப்படிப்பட்ட போர்களை இஸ்லாத்தின் பெயரால் செய்யாதீர்கள்.

இந்த காலத்தில் முஸ்லிம்கள் மற்ற சமுதாயங்களிடம் தோல்வியை தழுவுவதும் கூட வரவேண்டிய மஸீஹ் வந்துவிட்டார். இறைவனிடமிருந்துள்ள செயலளவிலான ஒரு சாட்சியாகும். எனவே யழவுல் ஹர்ப் (அவர் போரை நிறுத்துவார்) என்பதற்கேற்ப மார்க்க

சண்டைகள் இப்போது முடிவடைந்து விட்டன. ஜிஹாது செய்ய வேண்டுமென்றால் ஆதாரங்கள் மூலம், சான்றுகள் மூலம் நீங்கள் செய்யலாம். நான் கூறியது போன்று முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பெயரால் செய்யும் போர்களின் விளைவு அவர்களுக்கு எதிராக இருப்பது (இது உண்மையான ஜிஹாது அல்ல என்பதற்கு) அல்லாஹ்வின் செயல் அளவிலான சாட்சியாக இருக்கிறது. இது பார்க்கின்ற ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிகின்றது. அல்லாஹ்வோ அவர்கள் முஃமின்களாக இருக்கும் பட்சத்தில் முஃமீன்களுக்கு உதவி செய்வதாக வாக்குறுதியளித்துள்ளான். எனவே இரண்டு விசயங்கள் தான் உள்ளன. ஒன்று, இந்த முஸ்லிம்கள் முஃமினீன்களாக இல்லை அல்லது போர் செய்யும் இந்த நேரம் தவறானதாகும். அந்த காலம் முடிந்து விட்டது. ஆனால் நினைவில் கொள்ளுங்கள்! இந்த இரண்டு வி-யங்களுமே இவர்களிடம் இருக்கின்றது. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளை ஏற்றுக் கொள்ளாமல் ஒருவர் முஃமீனாக இருக்க முடியாது. மஸீஹ் மற்றும் மஹ்தியின் வாதத்திற்குப் பிறகு அவர் கூறுவதைக் கேட்காமல் அல்லாஹ்வின் உதவிக்கு உரியவர்களாகவும் ஆக முடியாது. எனவே இக்காலத்தில் தன்னை மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் வாதிக்கும் அவர் நிச்சயமாக உண்மையாளராக இருக்கின்றார்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், தாம் இறைவன் புறமிருந்து வந்ததாக ஆணையிட்டுக் கூறிய வாக்குமூலம்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தனது உண்மைக்கு ஆதாரமாக ஒரு மிகப்பெரும் வாதத்தை எடுத்துக் கூறினார்கள். அதனை ஒரு பொய்யரால் ஒருபோதும் கூற முடியாது. அன்னார் கூறினார்கள்:

“எந்த இறைவன் கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். அவனே என்னை அனுப்பியுள்ளான். அவனே எனக்கு நபி என்று பெயர் வைத்துள்ளான். அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பெயரால் அழைத்தான். அவனே எனது உண்மைக்காக பெரும் பெரும் அடையாளங்களை

வெளிப்படுத்தினான். அவற்றின் எண்ணிக்கை மூன்று லட்சத்தை எட்டி விட்டது. அவற்றிலிருந்து முன்மாதிரியாக சிலவற்றை இயன்றவரை இந்த நூலில் எழுதியுள்ளேன். இறைவனின் அற்புதமான செயல்களும் தெளிவான அடையாளங்களும் ஆயிரக்கணக்கில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை எனது உண்மைக்கு சாட்சி பகரவில்லையென்றால் அவன் என்னுடன் உரையாடுவதை நான் எவருக்கும் வெளிப்படுத்தாமல் இருந்திருப்பேன். மேலும் அது அவனது வார்த்தை தான் என்பதையும் உறுதியாக என்னால் சொல்லர முடியாமல் இருந்திருக்கும். ஆனால், அவன் தனது சொற்களுக்கு சான்று தரும் வகையில் எத்தகைய செயல்களை வெளிப்படுத்தினான் என்றால் அவை அவனது தெளிவான, ஒளிமயமான முகத்தைக் காட்டுவதற்கு கண்ணாடியாக பயன்பட்டது.” (ஹகீகத்துல் வஹி எனும் நூலின் பிற் சேர்க்கை, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 503)

அல்லாஹ்வின் பெயரால் வாதம் செய்யக்கூடிய ஒருவர் அவர் தனது வாதத்தில் உண்மையாளர் இல்லையென்றால் அல்லாஹ் அவருடன் எவ்வாறு நடந்து கொள்வான்? பொய் நபியைப் பற்றி அல்லாஹ் கூறுவதை நீங்களே பாருங்கள்.

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ﴿٤٥﴾ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ﴿٤٦﴾

அதாவது அவர் எந்த சொல்லையேனும் பொய்யாக எம்மீது இட்டுக்காட்டி கூறியிருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். (சூரா அல் ஹாக்க வசனம் 45, 46)

**தொடர்ந்து கூறுகின்றான்:**

ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ﴿٤٧﴾

அவருடைய உயிர்நாடியை துண்டித்திருப்போம்.(சூரா அல் ஹாக்க வசனம் 47)

நான் நபியாக இருக்கின்றேன். எனக்கு எல்லா இறை உதவிகளும் கிடைக்கின்றன என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த வாதத்திற்கு பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உயிர்நாடியை துண்டித்திருக்கின்றானா? அல்லது

وَلَقَدْ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ رُسُلًا اِلٰى قَوْمِهِمْ فَجَآءُوْهُمْ بِالْبَيِّنٰتِ فَانْتَقَمْنَا مِنَ الَّذِيْنَ اَجْرَمُوْا ؕ وَكَانَ حَقًّا عَلَيْنَا نَصْرُ الْمُؤْمِنِيْنَ ۝٤٨ **(சூரா ரூம் வசனம் 48)**

அதாவது நம்பிக்கையாளர்களுக்கு உதவி செய்வதை நமது கடமையாக்கியுள்ளோம் என்ற தனது வாக்குறுதிக்கேற்ப அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் தோற்றுவித்த ஜமாஅத்திற்கும் உதவி செய்து கொண்டிருக்கின்றானா? ஒரு குக்கிராமத்திலிருந்து எழுந்த ஒரு ஓசை இன்று முழுமையான மகிமையுடன் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி விட்டது. இன்று 181 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைபெற்று விட்டது. இது 2006 ஆம் ஆண்டின் கணக்கின் படியாகும். 2013 ஆம் ஆண்டில் இது 204 நாடுகளில் பரவி விட்டது. இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், ஆப்ரிக்காவிலும் மிக தொலைவிலுள்ள காடுகளிலும் வெப்பம் மிகுதியாக இருக்கும் பாலைவனங்களிலும் தீவுகளிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் உள்ளனர். இப்படிப்பட்ட எல்லா இறை உதவிகளும் அவர்களது உண்மையை ஏற்றுக் கொள்ளப் போதுமானதாக இல்லையா? இந்த நபர் பொய்யராக இருந்தால் அல்லாஹ் தனத சட்டத்திற்கேற்ப இவரை ஏன் பிடிக்கவில்லை? சுயமாக இட்டுக்கட்டிக் கூறிய சுட்டிக்காட்டப்பட்ட பிறகும் ஏன் அவரை அழித்து ஒழிக்கவில்லை. இது சிந்திக்க வேண்டிய இடமாகும். சிந்தனை செய்யுங்கள். அறிவுடன் செயல்படுங்கள். முஸ்லிம்கயிடம் நான் கூறுகிறேன். நீங்கள் உங்கள் இம்மையையும் மறுமையையும் ஏன் மோசமாக்கி கொள்கின்றீர்கள்? பொய்யரது நிலை எவ்வாறானது என்றால், கடந்த சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தானில் ஒருவர் தன்னை மஹ்தி என்று வாதித்தார். சிறிது நேரம் அவர்களுக்குள் Firing நடந்த பிறகு அவரை கைது செய்து இப்போது அவரை சிறையில் அடைத்து விட்டனர். எனவே இப்படிப்பட்டவர்களது முடிவு உடனடியாக அவர்களுக்கு முன்னால் தெரிந்து விட்டது. இதற்கு முன்னரும் இவ்வாறு பல நடந்துள்ளன.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு வானத்தின் சான்று

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்கு ஆதாரமாக வானத்தின் சாட்சியும் ஒன்று உள்ளது.

அதைப்பற்றி இதற்கு முன்னரும் நான் கூறியிருந்தேன். அதாவது சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படுவது ஆகும். இது எப்படிப்பட்ட அடையாளம் என்றால் இதில் எந்த மனிதனின் முயற்சிக்கும் இடமேயில்லை. இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்னர் எவ்வளவு துல்லியமாக நமக்கு விளக்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். இன்று விஞ்ஞானம் முன்னேற்றமடைந்துள்ள காலகட்டத்தில் அண்மையில் நடைபெறும் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகக் கூட துல்லியமாக முன்னறிவிப்பு செய்ய இயலாது. அதாவது ஒரு ரமலான் மாதத்தில் இந்த தேதியில் சூரியனுக்கும், இந்த தேதியில் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படும் என்று கூற இயலாது. நபிமொழியில் இவ்வாறு வருகிறது.

إِنَّ لِمَهْدِيِّنَا آيَتَيْنِ لَمْ تَكُوْنَا مُنْذُ خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ - تَنْكَسِفُ الْقَمَرُ
لِأَوَّلِ لَيْلَةٍ مِّنْ رَمَضَانَ وَتَنْكَسِفُ الشَّمْسُ فِي النِّصْفِ مِنْهُ

"நம்முடைய மஹ்தியின் உண்மைக்கு இரண்டு அடையாளங்கள் இருக்கின்றன. இந்த உண்மையின் இரு அடையாளங்களும் உலகம் படைக்கப்பட்டதிலிருந்து எவருக்காவும் வெளிப்படவில்லை. ஒரு ரமலான் மாதத்தில் சந்திர கிரகணத்திற்காக கணிக்கப்பட்ட இரவுகளில் முதலாவது இரவில் சந்திர கிரகணமும் சூரிய கிரகணத்திற்காக கணிக்கப்பட்ட நாட்களில் மத்திய நாளில் சூரிய கிரகணமும் ஏற்படும்." (சுனன் தாரகுத்னீ, கிதாபுல் ஈதைன், பாபு சிஃபது சலாத்தில் குஸூஃப்)

1894 ஆம் ஆண்டு இந்த கிரகணங்கள் ஏற்பட்டது. ரமலான் மாதத்தில் 13,14,15 ஆம் தேதிகளில் 13 ஆம் தேதி சந்திரனுக்கு கிரகணம் ஏற்பட்டது. அதே ரமலான் மாதத்தில் 27,28,29 ஆகிய தேதிகளில் 28 ஆம் தேதி சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டது. இது அன்னாரின் உண்மைக்கு மிகத் தெளிவான சான்றாக இருந்தது.

அப்போது என்னைத்தவிர வேறு எவரும் வாதிக்கவில்லை என மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸில் கமர் என்ற சொல்லை வைத்துக் கொண்டு மவ்லவிமார்கள் வறட்டு வாதங்களை செய்கின்றார்கள். இவர்களில் சிலரது கருத்துப்படி கமர் என்ற சொல்

இடண்டாவது இரவில் தோன்றும் சந்திரனை குறிக்கின்றது. மேலும் சிலரது கருத்துப்படி மூன்றாவது இரவில் தோன்றும் சந்திரனை குறிக்கின்றது. இறை உதவியின் இந்த அடையாளம் வெளிப்படுவதற்கு முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் தவிர வேறு எவராவது வாதம் செய்திருக்கிறார்கள் என்றால் இவர்களில் எவராவது காட்டட்டும். அவ்வாறு வாதம் செய்தவர் ஒருவர் மட்டும் இருக்கின்றார். அது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) காதியானி அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகத் தெளிவாக கூறுகின்றார்கள். எண்ணற்ற அடையாளங்கள் நிறைவேறியுள்ளன. எனவே, முன்னறிவிக்கப்பட்ட அந்த நபர் நான் இல்லையென்றால் வேறொருவரை நீங்கள் காட்டுங்கள். ஏனென்றால் காலமோ இதன் தேவையை வலியுறுத்துகின்றது. ஆனால், இவர்களால் காட்ட முடியாது. எனவே, இந்த வாதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் உண்மையாளராக இருக்கின்றார்கள். ஏனென்றால், விண்ணிலும், மண்ணிலும் வெளிப்பட்ட இறை அடையாளங்கள் அவர்களது உண்மைக்கு சாட்சி பகர்கின்றன. ஒரு நபியின் அளவுகோலாக அல்லாஹ்வால் கூறப்பட்டது அன்னாருக்கு ஆதரவாக இருக்கின்றது. இதற்கு முன்பு வாழ்ந்த ஜமாஅத்தைச் சாராத மற்றவர்கள் கூட அன்னார் தூய இயல்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும், அன்னாரது கடந்த காலமும் தூய்மையானதாக இருந்தது என்றும், அன்னாரது இளமைக்காலமும் தூய்மையானதாக இருந்தது என்றும், ஞானமிக்கவராக இருந்தார் என்றும், அன்னாரை விட மேலாக யாரும் இஸ்லாத்திற்கு தொண்டாற்றவில்லை என்றும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவற்றை மற்றவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கண்ட பிறகும் அவர்களது அறிவில் திரையிடப்பட்டுள்ளதென்றால் அல்லாஹ்வே இவர்களை பாதுகாக்கட்டும். ஏனென்றால், ஒருவரை ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியம்கூட இறைவனின் அருளினால்தான் கிடைக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இந்த எளியவன் உண்மையாளன் இல்லை என்றால் வேறு எவர்தான் இந்த எளியவனைப் போன்று இந்த 14 ஆம் நூற்றாண்டின்

ஆரம்பத்தில் வந்து தாம் சீர்திருத்தவாதியாக தோன்றியிருப்பதாக வாதம் செய்துள்ளார்? எனக் கூறுங்கள். இந்த எளியவன் நின்றதைப் போன்று இல்ஹாமிய வாதத்துடன் எவராவது எல்லா எதிரிகளுக்கு முன்னால் நிற்கின்றாரா? தஃபக்கரூ வதநத்தமு வத்தகுல்லாஹ வலா தஃலு'' (அதாவது சிந்தனை செய்யுங்கள். வெட்கப்படுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். வெட்கங்கெட்ட செயல்களில் ஏன் முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள்).

"இந்த எளியவன் மஸீஹ் மவ்வூது என்ற வாதத்தில் தவறிழைத்துள்ளேனென்றால் உங்களது எண்ணத்திற்கேற்ப வரவேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இதே நாட்களில் விண்ணிலிருந்து இறங்கி வர நீங்கள் முயற்சி செய்யுங்கள். ஏனென்றால், நான் இப்போது உங்கள் முன்னால் இருக்கின்றேன். ஆனால் எவருக்காக நீங்கள் காத்துக் கொண்டு இருக்கின்றீர்களோ அவர் உங்கள் முன்பு இல்லை. எனவே அவர் இப்போது விண்ணிலிருந்து இறங்கி வந்தால்தான் எனது வாதம் பொய்யாக முடியும். அப்போது தான் நான் குற்றவாளியாக இருக்க முடியும்?'' (அக்காலத்தில் அன்னார் எல்லோர் முன்னாலும் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்கள்) "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மர்யமின் மகன் மஸீஹ் சீக்கிரம் விண்ணிலிருந்து இறங்குவதை காண துஆ செய்யுங்கள். நீங்கள் உண்மையில் இருக்கிறார்கள் என்றால் உங்களது இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படும். ஏனென்றால், பொய்வாதிக்கு எதிராக உண்மையாளர் செய்யும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும்.'' (அதாவது பொய்யருக்கு எதிராக உண்மையாளரின் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டு விடுகிறது) "ஆனால், அந்த துஆ ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் தவறிழைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். மஸீஹ் வந்து விட்டார். ஆனால், நீங்கள் அவரை அடையாளங்கண்டு கொள்ளவில்லை. இப்போது யூகங்களின் அடிப்படையிலான உங்கள் இந்த நம்பிக்கை ஒருபோதும் நிறைவேறாது. இந்த காலமும் கடந்து விடும். இவர்களில் எவரும் மஸீஹ் இறங்குவதை பார்க்க மாட்டார்.'' **(இஸாலா அவ்ஹாம், முதல் பாகம் ரூஹானி கஸாயின் தொகுதி 3, பக்கம் 179)**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

"எனவேதான் இவர்கள் மார்க்கத்திற்கும், உண்மைக்கும் எதிரிகளாக இருக்கின்றனர் என்று நான் கூறுகின்றேன். இப்போதுகூட இவர்களில் ஒரு குழு தங்களின் உள்ளங்களை சீர்திருத்தியவாறு என்னிடம் வருவதாயிருந்தால் அவர்களது வீணான, தேவையற்ற சந்தேகங்களுக்கு பதில்கூட நான் இப்போதும் தர தயாராக இருக்கின்றேன். ஒரு பெரும்படையை போன்று எந்த அளவுக்கு பல முன்னறிவிப்புகளை எனது உண்மைக்கு சாட்சியாக இறைவன் வெளிப்படுத்தியுள்ளான் என்பதை நான் அவர்களுக்கு காட்டுவேன். அதன் மூலம் பகல் வெளிச்சம் உதயமாகுவது போன்று உண்மை வெளிப்படும்."

## அல்லாஹ் அன்னாரின் அன்பை உள்ளங்களில் வைப்பான்; எல்லா பிரிவினரையும் விட அன்னாரின் பிரிவை மேலோங்கச் செய்வான்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றுக்கேற்ப எவராவது வர விரும்பினால், நூறு வருடத்திற்குப் பிறகு இன்றும் உண்மையைக் காண வர விரும்பினால் வரலாம். உள்ளங்களை சரி செய்தவாறு வர வேண்டும் என்பது தான் நிபந்தனையாக இருக்கிறது. அவ்வாறு வருபவர்கள் இப்போதும்கூட உண்மையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இந்த அறிவற்ற மவ்லவிகள் தெரிந்து கொண்டே கண்களை மூடிக்கொண்டால் மூடிக் கொள்ளட்டும். அதனால் உண்மைக்கு என்ன இழப்பு ஏற்படப் போகின்றது? ஆனால், அந்த காலம் வரப்போகிறது. இன்னும் சொல்லப் போனால் அது மிக அருகில் இருக்கின்றது. அப்போது ஃபிர்அவ்னின் இயல்பைக் கொண்ட இந்த முன்னறிவிப்புகளைப் பற்றி பலரும் சிந்திப்பதனால் காரணமாக மூழ்கிவிடாமல் காப்பாற்றப்படுவார்கள். நான் தாக்குதல் மேல் தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பேன். எதுவரையென்றால் உமது உண்மையை மக்களது உள்ளங்களில் பதியச் செய்வேன் என இறைவன் கூறுகின்றான். எனவே மவ்லவிமார்களே!

உங்களுக்கு இறைவனுடன் சண்டையிடும் ஆற்றல் உள்ளதென்றால் சண்டையிடுங்கள். எனக்கு முன்னர் ஏழை மனிதரான மர்யமின் மகன் ஈஸாவிற்கு யூதர்கள் எப்படிப்பட்ட துன்பங்களை தந்தார்கள்? தங்களது எண்ணத்திற்கேற்ப எப்படி அவரை சிலுவையில் அறைந்தார்கள்? ஆனால், இறைவன் அவர்களை சிலுவையின் மரணமடைவதிலிருந்து காப்பாற்றினான். ஒருகாலத்தில் அவர்களை சூழ்ச்சி செய்பவர் என்றும், பொய்யர் என்றும் மக்கள் கருதினர். அதற்கு பிறகு ஒரு காலம் வந்தது. மக்களின் உள்ளங்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு எவ்வளவு உயர்வான இடம் கொடுக்கப்பட்டதென்றால் இப்போது நாற்பது கோடி மக்கள் அவர்களை இறைவன் என்று நம்புகின்றனர். ஒரு சாதாரண மனிதரை கடவுளாக்கி இந்த மக்கள் நிராகரிப்பில் வீழ்ந்து விட்டாலும் இவ்வாறான நிலை யூதர்களுக்கு தரப்பட்ட பதிலாகும். “அதாவது அல்லாஹ்வின் சார்பாக யூதர்களுக்கு பதிலளிக்கப்பட்டது”. எந்த நபரை அவர்கள் தங்கள் கால்களுக்கு கீழ் நசுக்கிவிட விரும்பினார்களோ அந்த மர்யமின் மகனான இயேசுவை இப்போது நாற்பது கோடி மக்கள் சிரம்பணியுமளவுக்கு அவர் மகிமையைப் பெற்றார். மேலும் அரசர்களின் தலைகள் அவர்களது பெயரை கேட்டதும் குனிந்து விடுகின்றன. மர்யமின் மகனான இயேசுவை போல இறைவனுக்கு இணைவைத்தலில் முன்னேற்றம் ஏற்பட நான் ஒரு காரணமாக ஆகிவிடக்கூடாது என்று நான் துஆ செய்துள்ளேன். எனினும் இறைவன் அவ்வாறே செய்வான் என்று நான் நம்புகிறேன். ஆனால், இறைவன் எனக்கு மாபெரும் மகத்துவத்தை வழங்குவதாக மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளான். என்னுடைய அன்பை உள்ளங்களில் பதியச் செய்வதாகவும் என்னுடைய இயக்கத்தை முழு உலகிலும் பரவச் செய்வதாகவும் எல்லாப் பிரிவுகளின் மீதும் எனது பிரிவை வெற்றியடையச் செய்வதாகவும் அவன் என்னிடம் கூறியுள்ளான். எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் எந்த அளவு அறிவிலும் ஞானத்திலும் சிறப்பை பெறுவார்கள் என்றால் தங்களது உண்மையின் ஒளியைக் கொண்டும் ஆதாரங்கள், அடையாளங்கள் மூலமாகவும் எல்லாரையும் வாயடைக்கச் செய்துவிடுவார்கள்.” அல்லாஹ்வின் அருளால் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் இந்த உண்மை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

“ஒவ்வொரு சமுதாயமும் இந்த நீரூற்றிலிருந்துதான் நீர் அருந்தும். இந்த ஜமாஅத் மிக விரிவாக வளர்ச்சியடையும், செழிப்படையும். எதுவரையென்றால், பூமியை அது சூழ்ந்து விடும். பல தடைகளும் ஏற்படும். மேலும் சோதனைகள் வரும். ஆனால், இறைவன் அவை அனைத்தையும் இடையிலிருந்து அகற்றி விடுவான். தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். இறைவன் என்னை நோக்கி நான் உமக்கு அருளுக்குமேல் அருள் செய்வேன். எதுவரையென்றால் அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள் என்று கூறியுள்ளார்கள்.

எனவே, கேட்பவர்களே! இவ்விசயங்களை நினைவில் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை உங்களது பெட்டிகளில் பத்திரமாக பாதுகாத்து வையுங்கள். இது இறைவனின் சொற்களாகும். ஒருநாள் அது நிறைவேறிவிடும். நான் என்னிடத்தில் எந்த நன்மையையும் பார்க்கவில்லை. நான் செய்ய வேண்டிய பணிகளை நான் செய்யவில்லை. நான் என்னை வெறும் தகுதியற்ற ஒரு கூலியாளானாகவே நினைக்கின்றேன். முழுக்க முழுக்க இறைவனின் அருள்தான் என்னுடன் இருக்கின்றது. அந்த இந்த ஒரு படி மண்ணை எவ்வித தகுதியும் இல்லாத நிலையிலும் ஏற்றுக் கொண்ட வல்லமைமிக்க கருணையுள்ள அந்த இறைவனுக்கே ஆயிரக்கணக்கான நன்றிகள் உரித்தாகட்டும்.”

**(தஜல்லியாத்தே இலாஹிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 408-410)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்த வாதம் அல்லது இந்த முன்னறிவிப்பு ஒவ்வொரு நாளும் நிறைவேறுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் இது எல்லா மார்க்கங்களுக்கும், சமுதாயங்களுக்கும் சிந்திக்க வேண்டிய இடமாகும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதிக்கேற்ப அவர்களின் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கிறது. நான் கூறியது போன்று ஒவ்வொரு நாளும் நாம் முன்னேற்றத்தைப் பார்க்கிறோம். எனவே முஸ்லிம்களும் சிந்திக்க வேண்டும். (அதாவது அஹ்மதியல்லாத முஸ்லிம்கள்). மஸீஹ், மஹ்தியாக வரவேண்டியவர் வந்து விட்டார். இவரது உண்மைக்கு திருக்குர்ஆன், ஹதீஸில் எண்ணற்ற சான்றுகள்

இருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டை நான் எடுத்துக் கூறினேன். இந்த காலத்தின் நிலையும் அவரை எதிர்பார்க்கின்றது. இப்போது யாருக்காக காத்திருக்கிறீர்கள். மக்களே கொஞ்சமாவது சிந்தியுங்கள். கிறிஸ்தவர்களுக்காகவும் எந்த மஸீஹ் மீண்டும் வரவிருந்தாரோ அவர் வந்து விட்டார். மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்களையும் ஒரே கையில் ஒன்றிணைப்பதற்காக எவர் வரவேண்டியிருந்ததோ அவர் வந்து விட்டார். இப்போது ஒருவர் மற்றவருடைய உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதை கற்றுக் கொடுக்க வேண்டும் என்றால் இந்த மஸீஹ், மஹ்தி தான் கற்றுத் தர வேண்டியுள்ளது. இப்போது எல்லா மதங்களின் நபிமார்களுக்கும் கண்ணியமளிப்பது எப்படி என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும் என்றால் இந்த மஸீஹ், மஹ்தி தான் கற்றுத்தர வேண்டியுள்ளது. இப்போது உலகில் அமைதியையும் அன்பையும் நேசத்தையும் பரப்ப வேண்டுமென்றால் அதை இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தான் பரப்ப வேண்டும். இப்போது மனிதயினத்தை துக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்றால் இந்த மஸீஹ் மவ்ஊது மற்றும் மஹ்தி தான் விடுவிக்க வேண்டும். இப்போது அல்லாஹ்வின் பக்கம் செல்லும் வழிகளை காட்ட வேண்டும் என்றால், அடியார்களுக்கு இறைவன் முன் குனிவதற்கான வழிமுறைகளை கற்றுக் கொடுக்க வேண்டுமென்றால் இந்த மஸீஹ் மஹ்திதான் கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே இவற்றை பெற்றுக் கொள்ள உலகம் விரும்பினால் எல்லா நபிமார்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப தோன்றிய, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அன்பரான இந்த மஸீஹ் மஹ்தியின் போதனைகளின்படி செயல்படுபவர்களாக மாற வேண்டும். அவ்வாறில்லையென்றால், இறைவனின் கோபத்தின் தோற்றங்கள் வெளிப்படுவது நமக்கு தெரிகிறது. அவற்றைப் பற்றி இறைவனிடமிருந்து செய்தி பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு தெரிவித்து விட்டார்கள். எனவே அஹ்மதிகளாகிய உங்களிடத்திலும் நான் கூறிக் கொள்கிறேன். ஒவ்வோர் அஹ்மதியும் தன்னை சீர்படுத்திக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உங்களை சீர்படுத்திக் கொள்வதுடன் உலகிற்கும் இந்த எச்சரிக்கையை தெரிவிக்க வேண்டும். அல்லாஹ் இந்த உலகவாதிகள் மீது கருணை காட்டுவானாக! மேலும் இவர்களுக்கு உண்மையை புரியும் நற்பேற்றை வழங்குவானாக!

★ பத்திரிகை சுதந்திரம், கருத்து சுதந்திரம் என்ற பெயரில் சில மேற்கத்திய நாடுகள் மற்றும் பத்திரிகைகளின் சார்பாக முஸ்லிம்களின் உணர்வுகளை புண்படுத்துகின்ற, அநீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மற்றும் அவர்களின் இரட்டை வேடத்தைக் கொண்ட ஒழுக்கம் பற்றிய தகுதிகளைப் பற்றிய குறிப்பு.

★ மேற்கத்திய உலகம் முஸ்லிம்களுக்கு எதிராக தைரியம் காட்டுவதற்கான காரணம் முஸ்லிம்களின் உட்புற நிலையும் ஆகும். இஸ்லாமிய உலகம் தனது தவறுகளின் காரணமாகவே மிகவும் பயங்கரமான நிலைமைக்குள்ளாகி இருக்கிறது.

★ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நாம் கொண்டுள்ள அன்பு, நாம் நமது துஆக்களில் முஸ்லிம் உம்மத்திற்கு அதிக இடம் கொடுக்க வேண்டியதை எதிர்பார்க்கிறது. இந்தக் காலத்தில் இமாமை அடையாளம் கண்டு கொண்ட ஒவ்வோர் அஹ்மதியும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்புணர்வின் காரணமாக மிக அதிகமாக சலவாத் ஓதுவது கடமையாகும்.

★ வளி மண்டலத்தின் ஒவ்வோர் அணுவும் சலவாத்ததினால் நறுமணம் கமழும் அளவுக்கு உண்மையான உள்ளத்துடன் வளி மண்டல்தில் சலவாத்தை பரப்புங்கள். அந்த சலவாத்தின் மூலமாக எல்லா துஆக்களும் இறைவனின் சந்நிதியை அடைந்து ஒப்புக் கொள்ளப்படும் அந்தஸ்தைப் பெற்றுவிடட்டும்.

★ (திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டலை சான்றாகக் கொண்டு சலவாத்தின் முக்கியத்துவம் மற்றும் அருள் பற்றி குறிப்பிட்டவாறு அதிகமாக சலவாத் ஓத வேண்டுமென்றும், முஸ்லிம் உம்மத்திற்காக துஆக்கள் செய்யுமாறும் சிறப்பான அறிவுரை)

**ஜுமுஆ குத்பா - 24.02.2006**

**இடம் : பைத்துல் ஃபுதூஹ், இங்கிலாந்து**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ.
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

اِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ۚ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ
وَسَلِّمُوْا تَسْلِيْمًا ﴿٥٦﴾ **(சூரா அல் அஹ்ஸாப் வசனம் 57)**

கடந்த பல குத்பாக்களில் அதாவது மேற்கத்திய பத்திரிக்கைகளும், மேற்கத்திய நாடுகளும் எழுத்து சுதந்திரம், கருத்து சுதந்திரம் என்ற பெயரில் முஸ்லிம்களின் உணர்வுகளை காயப்படுத்தி, அநீதியிழைத்து வருவது பற்றிய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்று கூறி வந்தேன். இன்றும் இதுபற்றி சுருக்கமாக கொஞ்சம் கூறுவேன். இதற்கு எதிர் நடவடிக்கையாக சில செய்தித்தாள்கள் மற்றும் சில நாடுகளுக்கெதிராக முஸ்லிம் நாடுகளில் காணப்படுகின்ற கொந்தளிப்பு பற்றி கூற விரும்புகிறேன். தனிப்பட்ட விதத்திலும், கூட்டு முயற்சியாகவும், அரசாங்க ரீதியிலும் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. மேற்கத்திய நாடுகளின் மீது நெருக்கடி கொடுக்கப்படும். அவர்கள் மன்னிப்பும் கேட்க வேண்டும்; எழுத்து சுதந்திரம், கருத்து சுந்திரம் என்ற பெயரில் நபிமார்களை நெருங்காத அளவிற்கு சட்டமும் இயற்ற வேண்டும். இச்செயலை விட்டு அவர்கள் விலகிக் கொள்ளவில்லை என்றால் உலகின் அமைதிக்கு எவ்விர உத்தரவாதமும் கிடையாது என் இஸ்லாமிய நாடுகளின் Organization (OIC) னும் கூறியுள்ளது. இந்த நாடுகளின் அல்லது இந்த Organization (அமைப்பு)களின் இந்த கண்டனம் மிக நல்ல எதிர்நடவடிக்கையாகும். இஸ்லாமிய உலகில் அல்லாஹ் அத்தகைய உறுதியை ஏற்படுத்துவானாக. இஸ்லாமிய நாடுகள் உலகத்தில் அமைதியை நிலைநாட்ட உண்மையுடனும் மன வேதனையுடனும் இது போன்ற முடிவுகளை எடுக்க வைப்பதற்கான தகுதியைப் பெறும் நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

## மேற்கத்திய நாடுகள் மற்றும் பத்திரிகைகளின் முரண்பாடான நிலை

கடந்த நாட்களில் ஈரானின் ஒரு செய்தித்தாள் அறிவிப்பு வெளியிட்டது. அதாவது இந்த செயலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அது தனது செய்தித்தாளில் போட்டி ஒன்று நடத்தும். இரண்டாம் உலகப் போரில் யூதர்களுடன் மேற்கொள்ளப்பட்ட செயலை அடிப்படையாக வைத்து அது குறித்த கார்டூன்களை வரைவதற்கான போட்டி நடைபெறும் என அறிவித்துள்ளது. இது இஸ்லாமிய எதிர்நடவடிக்கை கிடையாது. இது இஸ்லாமிய நடைமுறை அல்ல. ஆயினும் கருத்து சுதந்திரத்திற்காக முழக்கமிடும் மேற்கத்திய நாடுகள், எல்லா வித வீணான விசயங்களையும் செய்தித்தாள்களில் வெளியிடுவதற்கு எழுத்து சுதந்திரம் என்று பெயரிட்டிருக்கும் அவர்கள், தவறாகக் கொள்ளப்பட்டது போன்று தவறாகக் கொண்டிருக்கக்கூடாது. ஒன்று அவர்கள் தவறாகக் கொண்டிருக்கக்கூடாது அல்லது எந்த தவறினால் உலகில் குழப்பம் உருவாகி விட்டதோ இனி எந்தவொரு மார்க்கத்தின் தோற்றுனரைப் பற்றியோ அல்லது நபியைப் பற்றியோ அல்லது எந்தவொரு சமுதாயத்தினரைப் பற்றியோ இப்படி சிந்திப்பதை நிறுத்தி விட்டு அன்பு, நேசத்தின் சூழ்நிலையை உருவாக்குவோம் என பதிலளித்து இருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு பதில்கூறாமல் கார்டூன் வெளியாகி உலகில் குழப்பம் உருவாக காரணமாக இருந்த டென்மார்க்கின் அந்த செய்தித்தாளின் ஆசிரியர் ஈரானின் இந்த அறிவிப்புக்கு என்ன கூறியுள்ளார் என்றால், ஈரானின் செய்தித்தாளில் கார்டூன் வரைதலுக்கான போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இரண்டாம் உலகப் போரில் யூதர்கள் தொடர்பாக வரையப்பட வேண்டிய காட்டூன் ஆகும். ஒரு சமுதாயத்தின் மீது அநீதி இழைக்கப்பட்டதா, இல்லையா என்பது தொடர்பான கார்டூனாகும். அது ஒரு நபியை அவமதித்தோ, இழிவுபடுத்தியோ, வரையப்படும் கார்டூனல்ல. எவ்வாறிருப்பினும் ஆசிரியர் சாஹிப் எழுதுகிறார்: நாம் அதில் ஒருபோதும் பங்கெடுக்க மாட்டோம். மேலும் தமது வாசகர்களுக்கு ஆறுதலளித்தவாறு அவர் கூறுகிறார். நமது நல்லொழுக்கத்தின் நிலை இப்பொழுது வரை உறுதியாக உள்ளது என்பதில் நமது வாசகர்கள் நிம்மதியாக இருக்கலாம். ஹஸ்ரத் ஈஸா (அலை) அல்லது ஹாலோகாஸ்ட்–வுடைய கார்டூன்னை நாம்

வெளியிடக்கூடியவர்கள் அல்ல. ஆகவே எந்தவொரு நிலையிலும் ஈரானிய செய்தித்தாள் அல்லது மீடியாவின் இந்த தரமற்ற போட்டியில் நாம் கலந்து கொள்வோம் என்ற கேள்விக்கே இடமில்லை. ஆக இது தான் அவர்களின் நிலை. தங்களுக்கென்று ஒன்று, முஸ்லிம்களின் உணர்வுகளோடு விளையாடுவதற்கென்று ஒன்று. எவ்வாறாயினும் இது அவர்களின் வேலையாகும். அவர்கள் செய்து கொள்ளட்டும்.

## முஸ்லிம்களின் அவல நிலையின் மிக பயங்கரமான நிலைமை

இப்போது பாருங்கள். இதுவே இவர்களின் தரமாகும். கடந்த நாட்களில் இங்குள்ள ஒரு எழுத்தாளர் 17 வருடத்திற்கு முந்தைய சம்பவத்தை, விசயத்தை எழுதியுள்ளார். அவர் ஆஸ்திரேலியா சென்றார். அங்கு அவர் மீது வழக்கு தொடரப்பட்டு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இது அவர்களின் வழிமுறையாகும். தனக்கென்று வரும்போது சகித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நமது நிலை என்னவென்பதை நாமும் பார்க்க வேண்டும். மேற்கத்திய உலகில் தோன்றுகின்ற இந்த துணிவு நமது நிலையின் காரணமாக தோன்றவில்லையே? என்று பார்க்க வேண்டும். நமக்கு தென்படுகின்ற காட்சியை வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் நாடுகள் அவர்களின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன என்றும் இறுதியில் அவர்களிடமேயே திரும்ப வருவார்கள் என்றும் மேற்கத்திய உலகிற்கு தெரியும் என்பது தெளிவாக தெரிகிறது. தங்களுக்குள் சண்டையிடும்போது அவர்களிடம் உதவி கேட்கிறார்கள். இதற்கு எதிராக கண்டனம் தெரிவிக்கும் வகையில் சில ஐரோப்பிய நாடுகளில் பொருள்களின் மீது விதிக்கப்படிருக்கின்ற இந்தத் தடைகள் பற்றி சில நாட்களில் இப்பிரச்சனை தணிந்துவிடும் என்பதும் இப்போது மார்க்கெட்டில் இல்லாமல் போன கடை வீதிகளிலிருந்து அகற்றப்பட்ட அதே பொருள்கள் இந்நாடுகளில் மீண்டும் மார்க்கெட்டுக்கு வந்துவிடும் என்பதும் அவர்களுக்கு தெரியும். இப்போது மேற்கத்திய நாடுகளில் வசிக்கக்கூடிய முஸ்லிம்களும் அவ்உணவுகளை உண்கின்றனர். அப்பொருள்களை உபயோகின்றனர். டென்மார்க்கிலேயே ஏறக்குறைய இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

(எல்லாவற்றையும் விட டென்மார்க்குக்கெதிராக தான் அதிக கண்டனம் உள்ளன) அம்முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் பாகிஸ்தானியர் ஆவார்கள். அவர்களும் அப்பொருள்களை உபயோகிக்கத்தான் செய்கிறார்கள். எவ்வாறாயினும் இது தற்காலிகமான எதிர்நடவடிக்கை ஆகும். இது முற்று பெற்றுவிடும்.

இப்போது நமது நிலைமையை பார்ப்போம். அண்மையில் ஈராக்கின் உயர் நீதிமன்றத்தின் மேல்கூண்டு வெடிகுண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இதன்விளைவாக சுன்னத் ஜமாஅத்தினரின் பள்ளிவாசல்களிலும் தாக்குதல் நடத்தப்பட்டன. அதுவும் நாசமாகிக் கொண்டிருக்கின்றன. நம்மை சண்டையிட வைப்பதற்கு எதிரிகள் செய்த சூழ்ச்சியாக ஒருவேளை இருக்கலாமோ? என்று எவரும் சிந்தித்துப் பார்க்க முயற்சி செய்யவும் இல்லை. ஆராயவும் இல்லை. ஏனென்றால் இந்த வெடிகுண்டுகளும், இந்த போர்க்கருவிகளும் அந்த நாடுகளிலிருந்து தானே வாங்கப்படுகின்றன. ஆனால் இந்த முஸ்லிம்கள் இவ்வாறு சிந்திக்கவே மாட்டார்கள். ஒருபுறம் அறிவுக்குருடர்களாகி விட்டனர். கோபத்திலும் பிரிவினைப்பிரச்சையிலும் என்ன செய்கின்றோம் என்றே அவர்களுக்கு விளங்க வில்லை. இன்னோருபுறம் துரதிஷ்டவசமாக நயவஞ்சகம் காட்டக்கூடியவர்களும் எதிரிகளுடன் இணைந்து விடுகின்றனர். இதிலிருந்து எதிரி இலாபமடைகின்றான். அவர்களை சிந்திக்க விடுவதேயில்லை. எவ்வாறாயினும் ஈராக்கில் இப்போது தோன்றியுள்ள இப்புதிய சூழ்நிலை இது நமது நாட்டை சிவில்வாரின் civil war (உள்நாட்டுப்போர்) பக்கம் அழைத்துச் சென்று கெண்டிருக்கின்றது. இப்போது ஏறக்குறைய ஆரம்பித்து விட்டது. இந்த நிலைமை இப்போது கட்டுப்படுத்த இயலாது என்பதால் அங்குள்ள தலைவர்களுக்கு இப்போது பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களுடம் முஸ்லிம்கள் சண்டையிடக்கூடிய இந்த நிலைமை ஆப்கானிஸ்தானிலும் உள்ளது. பாகிஸ்தானிலும் உள்ளது. ஒவ்வொரு பிரிவும் பிற பிரிவுகளுக்கு எதிராக மிக தீவிரமான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்கின்றது. மார்க்கத்தின் பெயரால் தங்களுக்குள் ஒருவர் மற்றவரை அடித்துக் கொள்கின்றனர். ஆனால் அல்லாஹ் கூறுவது என்னவென்றால்,

وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ خٰلِدًا فِيْهَا وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِ وَلَعَنَهٗ وَاَعَدَّ لَهٗ عَذَابًا عَظِيْمًا ﴿٩٤﴾ (சூரா அந்நிஸா வசனம் 94)

அதாவது எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவரை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால் அவருக்குரிய தண்டனை நரகமாகும். அவர் அதில் நெடுங்காலம் தங்கியிருப்பார். அல்லாஹ் அவருடன் கோபங்கொண்டு தன் புறமிருந்து அவரை விலக்கி விடுவான். மேலும் அவருக்கு மாபெரும் தண்டனையை ஆயத்தப்படுத்துவான்.

## முஸ்லிம்கள் சிதறுண்டு கிடத்தல் மற்றும் பலவீனத்திற்கான உண்மையான காரணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படாமையும் மஸீஹ், மஹ்தியை மறுத்தலுமேயாகும்

பாருங்கள்! இப்போது ஒருவர் மற்றவரை அடித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிளர்ச்சி செய்யக்கூடியவர்கள், தூண்டிவிடக் கூடியவர்கள் இந்தத் தலைவர்களின் பேச்சைக் கேட்கின்றனர். இந்தத் தலைவர்களுள் பெரும்பான்மையினர் மார்க்க தலைவர்கள் ஆவார்கள். இந்த அனைத்து குழப்பங்களும் அவர்களிடமிருந்தே தோன்றுகின்றன. கொலை செய்து நன்மை சம்பாதியுங்கள். சொர்க்கத்திற்கு வாரிசாக ஆகிவிடுங்கள் என்று சண்டை நடக்கின்றது. கொலை, கொள்ளை நடக்கின்றது. ஆனால் இப்படிப்பட்டவர்களை அல்லாஹ் நரகத்தில் வீசுகிறான். அவர்களை சபிக்கிறான்.

பாகிஸ்தானிலும், வங்கதேசத்திலும், பிற நாடுகளிலும் அஹ்மதிகள் சஹீதாக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கும் இதே காரணம் தான். அதாவது சொர்க்கத்திற்கான பேராசை ஊட்டப்பட்டு நரகத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்ற வேலைகளை செய்ய வைக்கப்படுகின்றனர். எவ்வாறாயினும் நான் கூறி வந்தது போல், முஸ்லிம்களின் இந்த செயல்களால் முஸ்லிம்களின் எதிரிகள் பயனடைகின்றனர். மேலும் முஸ்லிம்களின் வலிமையை குறைத்துக் கொண்டே செல்கின்றனர். ஆனால் இந்த முஸ்லிம்களுக்கு அறிவு வருவதில்லை. இவர்களின் அறிவு மழுங்கிப் போனதற்கும், இவர்கள் துரத்தி அடிக்கப்படுவதற்கும் காரணம்

என்னவென்றால் இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவு. இப்போது ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றார்கள். இந்தப் பக்கமும் வராமல் அன்னாரது மஸீஹ் மஹ்தியை பொய்ப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு அஹ்மதியும் அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். இதற்கு முன்பும் நான் கவனமூட்டியிருந்தேன். இறைவன் இவர்களுக்கு அறிவையும், புரியும் திறனையும் வழங்குவானாக. இவர்கள் நயவஞ்சகர்கள் மற்றும் எதிரிகளின் கைபொம்மையாகி இஸ்லாத்திற்கு அவப் பெயரைத் தேடித் தராதவர்களாகவும், ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டாதவர்களாகவும் ஆவார்களாக.

இஸ்லாத்தின் எதிரிகள் எவ்வகையிலாவது இம்முஸ்லிம்களை அவமதிக்க, இழிவுபடுத்த முயலும் போது எவ்வாறாயினும் ஓர் அஹ்மதி வேதனையை உணர்கிறார். ஏனென்றால் இவர்கள் நம்முடைய நேசத்திற்குரிய நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள் அல்லது தொடர்புடையவர்கள் என வாதிக்கிறார்கள். இந்த வழி தவறிய முஸ்லிம்களில் ஒரு பெரும் கூட்டம் குறைமதியின் காரணமாக இந்த தலைவர்கள் மற்றும் ஆலிம்களின் சொல்லைக் கேட்டு இஸ்லாத்துடன் சிறிதும் தொடர்பில்லாத பொருத்தமற்ற செயல்களையும் நடவடிக்கைகளையும் செய்து விடுகின்றனர். அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொண்டு இம்மக்களை அந்த பெயர் தாங்கிய ஆலிம்களின் புதர் காட்டிலிருந்து விடுவிப்பானாக. மேலும் இவர்கள் அறியாமலோ அறிவில்லாமலோ இஸ்லாத்தின் நேசம் மேலும் மன உணர்ச்சியினால் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்பட காரணியாக ஆகாமல் இஸ்லாத்தின் அழகிய போதனையின் உண்மையை உணரக் கூடியவர்களாக ஆவார்களாக. அல்லாஹ் அவர்களுக்கு நேரிய வழியையும் காட்டுவானாக. ஏனென்றால் இவர்களின் இச்செயலினால் இஸ்லாத்தின் மீது சேற்றை வாரி இறைப்பதற்கு எதிரிகளுக்கு வாய்ப்பு கிடைத்துவிடுகின்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவமரியாதையான தாக்குதல் தொடுக்க வாய்ப்பு கிடைத்து விடுகின்றது.

ஆகவே, இன்றைய காலத்தில் ஒவ்வோர் அஹ்மதியும் துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியமுள்ளது. ஏனென்றால்

இஸ்லாமிய உலகம் தனது தவறுகளின் காரணமாக மிகவும் அபாயகரமான நிலையில் சிதறுண்டு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நமக்கு உண்மையான நேசமும், அன்பும் இருக்குமென்றால் இந்த உம்மத்திற்காகவும் நாம் மிக அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும். முன்பே நாம் கவனம் செலுத்தி வந்தது போல் இதன் பக்கம் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்.

## துஆ செய்வதற்கும் அருள்களை பெறுவதற்குமான உண்மையான வழிமுறை

நாம் துஆ எவ்வாறு செய்ய வேண்டும் என்பது பற்றி இன்று நான் கவனமூட்ட விரும்புகின்றேன். நமக்கு துஆ செய்யக்கூடிய வழிமுறைகளையும் வழகாட்டல்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கற்றுத் தந்துள்ளார்கள். இதன் மூலமாக நமது சீர்திருத்தமும் ஏற்படுகின்றது. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளையும் நாம் காண முடிகின்றது.

ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். வானத்திற்கும் பூமிக்கும் நடுவே துஆ நின்று விடுகின்றது. நீங்கள் உங்களது நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதாத வரை அதிலிருந்து (இறைவன் முன்னால் சமர்ப்பிக்கப்படுவதற்கு) மேலே எந்தவொரு பகுதியும் செல்லாது. (திர்மதி, கிதாபுஸ் ஸலாத் – மாஜாஅ ஃபீ ஃபழ்லிஸ் ஸலவாத்தி அலன் நபிய்யி என்ற பாடம்)

இது எப்படிப்பட்ட உண்மை என்றால், இது பற்றி அல்லாஹ்வும் திருக்குர்ஆனில் நமக்கு தெளிவாக கூறியுள்ளான். நான் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ ۚ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا ﴿٥٧﴾ (சூரா அஹ்ஸாப் வசனம் : 57)

நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் இந்த நபியின் மீது அருளை பொழிந்து கொண்டே இருக்கின்றனர். நம்பிக்கை

கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது சலவாத் ஓதுங்கள். அவருக்கு சலாம் அனுப்புங்கள்.

திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அதை செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. அதன்படி செயல்பட்டால் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களாகி விடுவீர்கள். அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகி விடுவீர்கள். அல்லாஹ்வின் நெருக்கம் பெற்றவர்களாகி விடுவீர்கள். நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டு சுவர்க்கத்தில் நுழைந்து விடுவீர்கள். இங்கு என்ன கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது என்றால், இது எத்தனை பெரிய மேன்மைமிகு பணி என்றால் அல்லாஹ் தன் மலக்குகளையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தியுள்ளான். மேலும் அல்லாஹ் தானும் தனது நேசத்திற்குரிய நபியின் மீது சலவாத்தும், சலாமும் அனுப்புகிறான். எனவே இது எப்படிப்பட்ட செயல் என்றால் இந்த செயலைச் செய்வதால் அல்லாஹ்வின் செயலை, அல்லாஹ்வின் பணியை பின் தொடரக்கூடியவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள். அல்லாஹ்வின் கட்டளைப்படி நாம் செயலாற்றும் போது நமக்கு அல்லாஹ் மிகப்பெரும் கூலியினை வழங்குகிறான். அப்படியிருக்கும் போது இறைவனே செய்கின்ற ஒரு வேலையை செய்வதால் எந்த அளவு வழங்குவான்! தூய்மையான முறையில் அனுப்பப்படும் இந்த சலவாத் நிச்சயமாக உம்மத்தை சீர்திருத்தக்கூடிய காரணியாகவும் அமையும். உம்மத்தை இழிவிலிருந்து காப்பாற்றக்கூடிய காரணியாகவும் அமையும். நமது சீர்திருத்தத்திற்கான காரணியாகவும் அமையும். மேலும் நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிவகையாகவும் அமையும். தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து நம்மை காப்பாற்றக்கூடிய வழிவகையாகவும் அமையும்.

சலவாத் ஓதுவதின் நன்மைகள் குறித்து ஹதீஸ்களில் பல்வேறுபட்ட அறிவிப்புகள் காணக்கிடைக்கின்றன. ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “மக்களுள் எவர் என்மீது அதிகமாக சலவாத் ஓதினாரோ அவரே மறுமை நாளில் எல்லோரையும் விட எனக்கு மிக நெருக்கமானவராக இருப்பார்.”

(திர்மதி, கிதாபுஸ் ஸலாத் – மாஜாஅ ஃபீ ஃபழ்லிஸ் ஸலாத்தி அலன் நபிய்யி என்ற பாடம்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: "எவர் தூய உள்ளத்துடன் என்மீது ஒரு முறை சலவாத் அனுப்புகிறாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை தரூது அனுப்புவான். அவருக்கு பத்து தகுதிகளை உயர்த்துவான். (அவருக்கு பத்து நன்மைகளை எழுதுவான்). மேலும் அவரது பத்து பாவங்களை மன்னிப்பான். (நஸாயி, கிதாபுஸ் ஸஹீவ், அல் ஃபழ்லு ஃபிஸ் ஸலாத்தி அலன்நபிய்யி என்ற பாடம்)

பாருங்கள்! உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. துஆ செய்யக்கூடிய, செய்யுமாறு கூறக்கூடிய பலர் நாங்கள் அதிகமாக துஆக்களும் செய்கின்றோம், சலவாத்தும் ஓதுகிறோம். தாங்களும் துஆ செய்யுங்கள். நீண்ட காலமாகி விட்டது. எங்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை எனக் கடிதங்கள் எழுதுகிறார்கள். சலவாத் எவ்வாறு ஓத வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். அன்னார் கூறுகிறார்கள். ஸாதிகம் மின் நஃப்ஸிஹீ – எவ்வாறு அனுப்ப வேண்டுமென்றால் அது தூய்மையானதாக இருக்க வேண்டும். சலவாத் ஓதும் போது ஒவ்வொருவரும் தமது உள்ளத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதாவது உலகத்தின் எத்துணை கலப்படம் அதில் உள்ளது என்றும் எத்துணை தூய்மையானதாக சலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் உள்ளது என்றும் எத்துணை தூய்மையான முறையில் சலவாத் ஓதப்படுகிறது எனவும் பார்க்க வேண்டும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

சலவாத் என்பது உறுதித் தன்மையை அடைவதற்கான ஒரு மிகப்பெரிய வழியாக உள்ளதால் அதிகமதிகமாக சலவாத் ஓதுங்கள். பழக்க வழக்கத்தின் அடிப்படையில் இல்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகையும் கருணையையும் கருத்திற் கொண்டு அன்னாரது தகுதிகள் மற்றும் பதவிகளின் முன்னேற்றத்திற்காவும் அன்னாரது வெற்றிக்காகவும் ஓதுங்கள். இதன் விளைவாக ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களின் இனிமையான ருசியான கனி உங்களுக்குக் கிடைக்கும். (ரிவீவ் ஆஃப் ரிலிஜியன்ஸ் – உருது, தொகுதி 3 நம்பர் 1 பக்கம் 115)

ஆகவே, இதுதான் தரூது அனுப்பக்கூடிய முறைகளாகும். தொடர்ந்து அன்னார் கூறுகிறார்கள்:

“(மக்களே!) அளவற்ற அருளாளனும், பேரருள் புரிபவனுமாகிய இறைவனின் பண்புகளின் தோற்றமாகிய அந்த கருணைமிகு நபியின் மீது சலவாத் ஓதுங்கள். ஏனென்றால் கருணைக்கு பிரதிபலன் கருணையே ஆகும். எந்த உள்ளத்தில் அன்னாரது கருணைகளைப் பற்றிய உணர்வு இல்லையோ அதில் ஈமானே இல்லை. அல்லது ஈமானை அழிக்க அவர் முயல்கிறார் என்று பொருள். அல்லாஹ்வே! இந்த உம்மி ரஸூலின் மீது நபியின் மீது அருளை அனுப்புவாயாக. அவர் முன்னவர்களை செழிப்பாக்கி தனது பண்பில் அவர்களை முழுவதுமாக மாற்றி, தூய மக்களோடு அவர்களை இணைத்தது போன்று பின்னவர்களையும் (ஆன்மீக) தண்ணீரால் செழிப்பாக்கினார்.” (இஃஜாஸுல் மஸீஹ் எனும் அரபி நூலின் மொழியாக்கம், ரூஹானி கஸாயின் தொகுதி 18, பக்கம் 5,6)

இவ்வாறு தூய்மையான முறையில் சலவாத் அனுப்பும் போது, அதன் மூலம் ஜமாஅத் அளவிலான நிலையும் உருவாகிவிடும் போது அது எப்படிப்பட்ட தரூதாக ஆகிவிடுகிறதென்றால் தனது தாக்கங்களை அது வெளிப்படுத்துகின்றது. சலவாத்துக்கு எவ்வித தாக்கமுமில்லை என்று கூறுபவர்களுக்கு இந்த ஹதீஸிலிருந்தும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்டி இந்த மேற்கோளிலிருந்தும் விசயம் தெளிவாகி விடவேண்டும். சலவாத் அனுப்புவதில் ஒருபோதும் வெறுப்படைந்து விடக்கூடாது. மாறாக, தமது உள்ளத்தை சீர்தூக்கிய பார்க்க வேண்டும். எவர் என்மீது சலவாத் அனுப்ப மாட்டாரோ அவர் மிகப்பெரும் கருமி என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த கருமித்தனத்தின் காரணமாக கருமித்தனத்தின் பாவத்தை தன்மீது சுமக்கின்ற அதே வேளையில் இறைவனுடைய அருள்களிலிருந்தும் இழப்பிற்குரியவராக அவர் ஆகிவிடுகின்றார். ஒரு முறை சலவாத் அனுப்புகின்றவரின் மீது அல்லாஹ் பத்து முறை அருள் பொழிகிறான் என்ற விசயத்தை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். (ஜலாவுல் இஃப்ஹாம், பக்கம் 318, நஸாயி ஹதீஸின் மேற்கோளின் அடிப்படையில்)

அல்லாஹ்வின் சாந்தியைப் பெற விரும்பினால் இவ்வாறான வியாபாரம் ஒன்று உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்குளும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில சஹாபாக்களும் எல்லா துஆக்களையும் விட்டு விட்டு சலவாத் ஓதி வந்தார்கள்.

ஒரு ரிவாயத்தில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவரிடத்தில் என்னைப் பற்றி கூறப்படும் போது அவர் என்மீது சலவாத் ஓதவில்லை என்றால் அது கோணலான இயல்பையும் நம்பிக்கையற்ற செயலையும் குறிக்கும்". (ஜலாவுல் இஃப்ஹாம், பக்கம் 327, 1897 அமிர்தரஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதுவது அடிமைகளை விடுதலை செய்வதை விடவும் அதிக சிறப்புக்குரியது. மேலும் அன்னாருடன் இருத்தல் என்பது அல்லாஹ்வின் வழியில் உயிர் கொடுப்பதை விடவும், ஜிஹாது செய்வதை விடவும் மிக உயர்ந்தது". (துஃப்ஸீர் துர்ரே மன்ஸூர், தாரீக் கதீப் வ தர்கீப் அஸ்ஃபஹானி என்பதிலிருந்து. தரூது சரீஃப் எனும் மேற்கோள், பக்கம் 160)

இன்றைய காலத்தில் பெயரளவிலான ஜிஹாதுகள் நடைபெறுகின்றன. மற்றவர்களுடனும் போர்கள் நடைபெறுகிறது. தங்களுக்குள்ளும் ஒருவர் மற்றவரது தலையை வெட்டி வருகின்றனர். இப்போது இந்த ஆலிம்களிடம் நீங்கள் அறிவில்லாத, படிப்றிவற்ற முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டி, அவர்களை தவறான வழியில் நடந்துகிறீர்களே இது எந்த இஸ்லாம் என எவராவது அவர்களிடம் கேட்கட்டும். (இந்த ஆலிம்களின் தூண்டுதலினால் பாமர முஸ்லிம்கள் இஸ்லாமிய தன்மான உணர்ச்சியை வெளிப்படுத்தியவாறு தவறான செயல்களை செய்கின்றனர்.) இஸ்லாத்தின் போதனை என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி பொருத்தமற்ற வார்த்தைகளை, வி-யங்களை நீங்கள் கேட்கும் போது அன்னாரது சிறப்புகளை எடுத்துக் கூறி அன்னார் மீது சலவாத் ஓதுவதாகும். இது உங்களுடைய ஜிஹாதை விட அதிக சிறப்புக்குரியது. துஆவின் பக்கமும்,

சலவாத்தின் பக்கமும் கவனம் செலுத்துவது உயிர் துறப்பதை விட அதிக சிறப்புக்குரியது.

இக்காலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலமாக உள்ளது. கடுமை காட்டுவதற்குப் பதிலாக துஆவிலும், சலவாத்திலும் அதிக ஈடுபாடு காட்டுங்கள். இது மேலும் அதிக தேவையுடைதாக இருக்கிறது. இதனுடன் உங்களது சீர்திருத்தத்திற்கும் முயற்சி செய்யுங்கள். எந்த அளவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நாம் நேசிக்கின்றோம் என உங்கள் உள்ளங்களை ஆராய்ந்து பாருங்கள். சிலரின் தனிப்பட்ட ஆதாயத்தின் காரணமாக நம்மையும் அந்த தீயின் பிடியில் இழுக்கின்ற தற்காலிக மன உணர்ச்சி இல்லையே என்று ஆராய வேண்டும்.

நாம் நமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் நமது சுற்றுப்புறத்திலுள்ள முஸ்லிம்களுக்கு புரிய வைக்க முடியும் என்றால் நிச்சயமாக புரிய வையுங்கள். அதாவது நீங்கள் தவறான வழிமுறையை மேற்கொள்ள வேண்டாம். அல்லாஹ்வும் அவனது தூதரும் விரும்பிய வழியை மேற்கொள்ளுங்கள். அந்த வழி நமக்கு காட்டப்பட்டுள்ளது. அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் எனது விருப்பத்தை பெற விரும்பினால், சுவர்க்கம் செல்ல விரும்பினால் என்மீது சலவாத் ஓதுங்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘எவர் என்மீது தரூது அனுப்பவில்லையோ அவர் மார்க்கமற்றவர் ஆவார்’’. (ஜலாவுல் இஃப்ஹாம், முஹம்மது பின் ஹம்தான் மரூஸி எனும் மேற்கோளின் அடிப்படையில்)

**பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்:**

‘‘அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்வதும் என்மீது சலவாத் ஓதுவதும் நெருக்கடியை விட்டு விலகுவதற்கான வழியாகும். (ஜலாவுல் இஃப்ாஹாம் ஃபஸ்லுல் மவ்தனிஸ் ஸாதிஸ் வல் இஷ்ரூன மிம் மவாதினிஸ் ஸலாத்தி அலைஹி (ஸல்) இன்தல் மாமில் ஃபக்ர வல் ஹாஜதி அவ் கவ்ஃப்)

இன்று முஸ்லிம்களின் மீது நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன. உணவு பற்றாக்குறை, சூழ்நிலை நெருக்கடி போன்றவை. மேற்கத்திய நாடுகள் தமக்கென்று ஒரு அடிப்படை கொள்கையும் முஸ்லிம் நாடுகளுக்கென்று தனி அடிப்படைக் கொள்கை வைத்துள்ளது. இதற்கு மிகச் சிறந்த தீர்வு என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாகயம் (ஸல்) அவர்கள் மீது மிக அதிகமாக சலவாத் ஓத வேண்டும். மேலும் சலவாத் ஓதுவதுடன் அல்லாஹ் இணைத்துள்ள அந்த அருள்களிலிருந்து பலன் பெற வேண்டும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. (இதன் ஒரு சிறு பகுதியை முன்பும் கூறியிருந்தேன்) இதன் விளக்கம் இன்னொரு இடத்திலும் வருகிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவர் இவ்வுலகில் என்மீது எல்லாரையும் விட அதிகமாக சலவாத் ஓதுகின்றாரோ அவர் மறுமை நாளின் போது திகிலூட்டுகின்ற ஒவ்வொரு இடத்திலும் உங்கள் எல்லாரையும் விட எனக்கு மிக நெருக்கமானவராக இருப்பார்''. (துஃப்ஸீர் துர்ரே மன்ஸூர் ஷுஅபுல் ஈமான் லில் பைஹகீ வ தாரீக் இப்னு அஸாகிர் என்ற மேற்கோளில்)

மறுமையின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இடம் கிடைக்கப்பெற்று ஒவ்வோர் அபாயகரமான இடத்திலிருந்தும் அன்னாரது ஆடை நுனியை பிடித்தவாறு தப்பி வெளியேறிவிட வேண்டும் என எவர் தான் விரும்ப மாட்டார். நிச்சயமாக ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பிக் விரும்புகிறார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும், அன்னாருடைய நெருக்கம் பெறுவதற்குமான வழிமுறையாகும். ஆகவே நம்பிக்கை கொண்டோருக்கு எல்லா நேரமும் சலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டவாறு சலவாத் ஓத வேண்டும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“எவர் ஒரு நாளில் என்மீது ஆயிரம் முறை சலவாத் ஓதுவாரோ அவர் இதே வாழ்க்கையில் சுவர்க்கத்தினுள் தனக்குரிய இடத்தை பார்த்து விடுவார்”. (ஜிலாவுல் இஃப்ஹாம் – பஹவாலா இன்னுல் காஸி வ கிதாபுஸ் ஸலாத்தி அலன் நபிய்யி லி அபீ அப்தில்லாஹில் முகத்தஸி)

ஆக, சலவாத்தின் அருளினால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் கூட சுவர்க்கமாக மாற்றி விடுகின்றது. இவ்வுலகில் சுவர்க்கத்தை உண்டாக்குகின்ற இந்த அமலும், நன்மைகளும், தூய மாற்றங்களும் தான் மறு உலகிலும் சுவர்க்கத்தின் வாரிசுகளாக நம்மை ஆக்குகின்றன.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதை இவர்கள் கேட்டுள்ளார்கள்.

“பாங்கு சொல்லக் கூடியவர் பாங்கு சொல்லுவதை நீங்கள் கேட்டால் அவர் கூறக்கூடிய சொற்களை நீங்களும் அவ்வாறே திரும்பக் கூறுங்கள். பிறகு என்மீது சலவாத் ஓதுங்கள். எவர் என்மீது சலவாத் ஓதுகின்றாரோ அல்லாஹ் அவர் மீது பத்து மடங்கு அருள்களை இறக்குகின்றான். தொடர்ந்து கூறினார்கள். அல்லாஹ்விடம் எனக்காக வஸீலாவை வேண்டுங்கள். அது அல்லாஹ்வுடைய அடியார்களுள் ஓர் அடியாருக்கு வழங்கப்படுகின்ற சுவர்க்கத்தின் பதவிகளுள் ஒரு பதவியாகும். அது நானாகத்தான் இருப்பேன் என நான் நம்புகிறேன். எவரெல்லாம் அல்லாஹிவிடம் எனக்காக வஸீலாவை வேண்டுகிறாரோ அவருக்கு பரிந்துரை ஆகுமானதாகி விடுகின்றது. (சஹீஹ் முஸ்லிம் – கிதாபுஸ் ஸலாத், இஸ்திஹ்பாபுல் கவ்லி மிஸ்லு கவ்லில் முஅஸ்ஸினி லிமன் சமிஅஹு சும்ம யுஸல்லி அலன் நபிய்யி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

ஆகவே, பாங்குக்கு பிறகு உள்ள இந்த துஆவை ஒவ்வோர் அஹ்மதியும் மனனம் செய்ய வேண்டும்; ஓத வேண்டும்.

சலவாத் ஓதுவதன் முக்கியத்துவமும், பயன்களும் இப்போது தெளிவாகிவிட்டது. பல்வேறு வகையான மக்கள் பல்வேறு வகையான தரூதுகளை உருவாக்கி இருக்கிறார்களே, எனவே எவ்வாறு தரூது

அனுப்புவது எனவும் சிலர் கேள்வி கேட்கின்றனர். இது சம்பந்தமாக ஒரு ஹதீஸில் உள்ளது.

ஹஸ்ரத் கஅப் உஜ்ரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் மீது சலாம் அனுப்பும் முறை நாங்கள் அறிந்ததே. ஆனால் தாங்கள் மீது சலவாத் எவ்வாறு அனுப்புவது என்று நாங்கள் கேட்டோம். அதற்கு

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

என்று கூறுங்கள் என்று கூறினார்கள். (ஸஹீஹ் திர்மிதி, அப்வாபுல் வித்ர், பாபு மாஜாஅ ஃபீ ஸிஃபதுஸ் ஸலாத்தி அலன் நபிய்யி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

ஆக! இதுதான் சலவாத் ஆகும். தொழுகையில் ஓதக்கூடிய சலவாத் பற்றி இன்னோர் இடத்தில் சற்று விரிவாக கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஹூது (அலை) அவர்கள் ஒருவருக்கு அறிவுரை கூறியவாறு கடிதத்தில் குறிப்பிடுகிறார்கள்:

தஹஜ்ஜுது தொழுகையிலும், வழக்கமான பிரார்த்தனையிலும் நீங்கள் மூழ்கி இருங்கள். தஹஜ்ஜுதில் மிக அதிகமான அருள்கள் உள்ளன. வேலை செய்யாமல் இருப்பது ஒன்றுக்கும் ஆகாது. வேலை செய்யாமல் இருந்தாலும், ஓய்வை நாடுதலும் மதிப்பற்ற விசயமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ۗ وَاِنَّ اللّٰهَ لَمَعَ الْمُحْسِنِيْنَ (சூரா அஹ்ஸாப் வசனம் : 57)

(அதாவது எவர்கள் நம்மை சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருளுக்குரிய நாவிலிருந்து வெளிப்பட்ட அந்த சலவாத் தான் சிறந்ததாகும். அது என்னவென்றால்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"(தீமையிலிருந்து) தவிர்ந்திருக்கூடிய ஒருவரின் நாவிலிருந்து வெளிப்படக்கூடிய சொற்களில் நிச்சயமாக சிறிதளவாவது அருள் இருக்கும். தவிர்ந்திருக்கக் கூடியவர்களின் தலைவராகவும், நபிமார்களின் தளபதியாகவும் இருக்கக் கூடியவரின் நாவிலிருந்து வெளிப்பட்ட சொற்கள் எந்த அளவு அருளுக்குரியதாக இருக்கும் என நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். சுருக்கமாக, சலவாத்தின் எல்லா வகைகளை விடவும் இந்த சலவாத்து தான் மிகவும் அருளுக்குரியதாகும்."

(துரூது சரீஃபின் பல வகைகள் உள்ளன. அவைகளில் இந்த தரூது சரீஃப்தான் மிகவும் அருளுக்குரியதாக உள்ளது). இந்த எளியவன் இதைத்தான் தொடர்ந்து ஓதி வருகிறேன். மேலும் எந்தவொரு எண்ணிக்கையையும் கணக்கில் கொள்ள வேண்டிய அவசியமில்லை. மனத்தூய்மையுடனும், நேசத்துடனும், ஈடுபாட்டுடனும், மன்றாடியவாறும் ஓத வேண்டும். மேலும் உள்ளம் உருகி, தன்னிலை மறந்து, தாக்கம் உண்டான நிலை ஏற்படும் வரையிலும், உள்ளம் திறக்கப்பட்டு சுவை கிடைக்கப் பெறும் வரையிலும் ஓதிக்கொண்டே இருத்தல் வேண்டும்.

(மக்தூபாத்தே அஹ்மத், தொகுதி 1, பக்கம் 17,18)

நாம் தொழுகையில் ஓதக்கூடிய தரூது இதுவேயாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று இதையே மிக அதிகமாக ஓதி வர வேண்டும். எண்ணிக்கையை பார்க்கக்கூடாது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

எவர் ஆயிரம் முறை ஓதுகிறாரோ என்று ஹதீஸில் வந்துள்ளது என்றால், அதற்கு எந்த அளவுக்கு அதிகமாக ஓதுகிறாரோ என்று பொருள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் சிலருக்கு எண்ணிக்கையை கூறியிருக்கிறார்கள். ஒருநாளில் எழுநூறு முறையோ அல்லது ஆயிரத்து நூறு முறையோ ஓதுமாறு ஒருவருக்கு கூறியிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய நிலைமைகளுக்கும், தகுதிகளுக்கும் ஏற்ப இக்கட்டளை மாறிக் கொண்டே இருக்கும். எவ்வாறாயினும் இந்த சலவாத்தை நாம் ஓத வேண்டும். எனவே தான்

(கிலாஃபத்) நூற்றாண்டின் துஆக்களிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாமிய துஆவாகிய, சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதிவ் வஆலி முஹம்மத் என்ற துஆவுடன் சலவாத்தும் முழுமையாக ஓதப்பட வேண்டும் என்று கூறியிருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதிய அந்த உண்மையான சலவாத்தை நாம் நமது துஆக்களுடன் நிச்சயமாக இணைக்க வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு கூறியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, எந்த அளவு ஈடுபாட்டுடன் ஓத வேண்டும் என்றால் ஒரு தனித்துவமிக்க நிலை உருவாகி விட வேண்டும். மேலும் இவ்வாறு நிகழ்ந்துவிடும் போது அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்வீர்கள்.

## வெற்றிகள் துஆக்களின் மூலமாகவே கிடைக்க முடியும்

இக்காலம் பின்னவர்களின் காலமாக இருக்கிறது. இஸ்லாத்தின் வெற்றிகளோடு தொடர்புடைய காலமாக இருக்கிறது. நாம் எல்லாரும் அறிந்தது போன்று இந்த வெற்றிகள் வாள்களாலோ, துப்பாக்கிகளாலோ, பீரங்கிகளாலோ அல்லது வெடிகுண்டுகளாலோ கிடைக்கவில்லை. இதில் மிகப்பெரும் ஆயுதம் துஆவேயாகும். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்றுகள், ஆதாரங்கள் எனும் ஆயுதமாகும். இதன் மூலமாகவே இஸ்லாம் மேலோங்கும் – இன்–ா அல்லாஹ். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், அல்லாஹ் இஸ்லாம் ஆதிக்கம் பெறும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் அருள்கள் கிடைக்கப் பெறுவதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது சலவாத் ஓதுமாறு அல்லாஹ் நமக்கு கூறிவிட்டான். அதை நாம் திருக்குர்ஆன் வசனத்தில் பார்த்து விட்டோம். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதாத வரை இந்த அனைத்தும் சாத்தியமில்லை என பல்வேறு வகையான ஹதீஸுகளில் நாம் பார்த்துவிட்டோம். சலவாத் ஓதியதன் காரணமாகவே எனக்கு இந்த தகுதி கிடைக்கப் பெற்றது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கூறியிருக்கிறார்கள். இஸ்லாத்தின் வருங்கால

வெற்றிகளுடனும் இதற்கு ஒரு முக்கிய தொடர்பு இருக்கிறது. மஸீஹ் மஹ்தி எனும் இந்த அந்தஸ்தில அன்னாரை இவ்வுலகில் அல்லாஹ் அனுப்பியது பற்றி கூறும் போது ஒரு இல்ஹாமை சுட்டிக் காட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"அந்த இல்ஹாம் என்னவென்றால், ஸல்லி அலா முஹம்மதின் வஆலி முஹம்மதின் சய்யிதி உல்தி ஆதம வ காத்தமின் நபிய்யீன் அதாவது ஆதமுடைய சந்ததிகளுக்கு தலைவராகவும், நபிமார்களுக்கு காத்தமாகவும் இருக்கக்கூடிய முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் சலவாத் ஓதுவீராக! இந்த அனைத்து உயர்வுகளும், சிறப்புகளும், அருள்களும் அவரின் மூலமாகவே கிடைக்கப் பெற்றது என்பதையும், அவரை நேசித்ததின் பிரதிபலனே ஆகும் என்பதையும் இது சுட்டிக் காட்டுகின்றது. அல்லாஹ் மிகத் தூயவன்! ஏக இறைவனின் சன்னிதியில் இந்த படைப்பினங்களின் தலைவருக்கு எத்துணை உயர்ந்த பதவிகளும், எவ்வாறான நெருக்கமும் உள்ளது. அதாவது அவரை நேசிக்கக்கூடியவர் இறைவனது நேசத்திற்குரியவராக மாறிவிடுகின்றார். அவரது தொண்டர் ஒரு உலகத்தால் தொண்டாற்றப் -படுபவராக மாற்றப்படுகிறார்". (அதாவது உலகம் அவருக்கு தொண்டு செய்யக்கூடியதாக ஆகிவிடுகிறது).... "இந்த இடத்தில் எனக்கு ஒரு விசயம் நினைவுக்கு வருகிறது. இந்த எளியவன் ஒரு இரவில் எந்த அளவு அதிகமாக தரூது சரீஃப் ஓதினேன் என்றால், அதனால் உள்ளமும் உயிரும் நறுமணமாகிவிட்டது. அதே இரவில் கனவில் நான் பார்த்தேன். தூய தண்ணீரின் தோற்றத்திலுள்ள ஒளிக் குவளைகளை (வானவர்கள்) சுமந்தவாறு இந்த எளியவனது வீட்டுக்கு கொண்டு வருகிறார்கள். முஹம்மது (ஸல்) அவர்களை நோக்கி நீர் அனுப்பிய அதே அருள்கள் தான் இவை என்று அவர்களுள் ஒருவர் கூறினார்.

மேலும் இதே போன்ற இன்னொரு புதுமையான ஒரு நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது. ஒருமுறை இல்ஹாம் ஒன்று இறங்கியது. அதன் பொருள் என்னவென்றால், உயர்மட்ட வானவர்கள் கருத்து வேற்றுமையில் இருக்கிறார்கள் என்பதாகும். அதாவது மார்க்கத்தை உயிர்ப்பிப்பதற்காக இறை எண்ணம் வேகம் பெற்றுள்ளது என்பதாகும். "புதிதாக மார்க்கத்தை உயிர்பெறச் செய்வதற்காக". ஆனால்

அதுவரை உயர்மட்ட வானவர்களிடையே உயிர்பிக்கும் அந்த நபர் குறித்த முடிவு தெளிவாக்கப்படவில்லை. “உயிர் கொடுக்கும் அந்த நபர் யாரென்று தெரியவில்லை”. எனவே அவர்கள் கருத்து வேறுபாட்டில் இருந்தார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் மக்கள் உயிர்ப்பிக்கும் ஒருவரை தேடியலைவதாக கனவில் கண்டேன். அப்போது ஒருவர் இந்த எளியவனுக்கு முன்னால் வந்து, ஹாஸா ரஜுலுன் யுஹிப்பு ரஸுலல்லாஹ் – என சுட்டிக் காட்டியவாறு கூறினார். அதாவது இவர் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிப்பவராவார். இந்த கூற்றினுடைய பொருள் என்ன வென்றால் அந்த பதவிக்கு மிகப்பெரும் நிபந்தனை, தூதரை நேசிப்பதாகும். ஆகவே அது இந்த நபரிடத்தும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டது.” (அதாவது இவரிடத்தில் உள்ளது).

“மேலும் இவ்வாறே ஆரம்பத்தில் கூறப்பட்ட இல்ஹாமில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது சலவாத் ஓதுமாறு கட்டளை உள்ளது. அதிலும் இதே இரகசியம் தான் இருக்கிறது. அதாவது இறை ஒளிகளிலிருந்து பலன் பெற வேண்டுமென்றால் அஹ்லே பைத்தின் (ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தின்) நேசத்திற்கும் அதில் மிகப்பெரும் தொடர்பு இருக்கிறது. மேலும் எவர் ஏக இறைவனின் நெருக்கமானவர்களுள் இணைகிறாரோ அவர் அந்த தூய்மையானவர்களின் வாரிசாக ஆக்கப்படுகிறார். மேலும் எல்லாவித அறிவிலும், இறை ஞானத்திலும் அவர்களுடைய வாரிசாகிறார்”. (பராஹீனே அஹ்மதிய்யா முதல் நான்கு தொகுதிகள் அடிக்குறிப்பு எண்.3 – ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 597, 598)

## இஸ்லாத்தின் இழந்து போன மகத்துவத்தை திரும்ப நிலைநாட்டுவதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்

ஆகவே, இன்று மார்க்கத்தை உயிரூட்டுவதற்காக, இஸ்லாத்தின் இழந்து விட்ட மகிமையையும் மேன்மையையும் திரும்ப கொண்டு வருவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பாதுகாத்து நிற்பதற்காக எந்த வீரரை அல்லாஹ் நியமித்துள்ளானோ

அவரை பின் தொடர்ந்து சென்றவாறு அல்லாஹ்வால் அவருக்கு கூறப்பட்ட, அவர் வழங்கிய ஆதாரங்கள் மற்றும் சான்றுகளைக் கொண்டு, அவர் வழங்கிய போதனைகளின்படி செயல்படுவதால் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி முழு அலங்காரத்துடனும், கம்பீரத்துடனும் உலகில் பறக்கும்; பறந்து கொண்டே இருக்கும். இன்சா அல்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த காலத்தின் முக்கியத்துவத்தை விளக்கியவாறும் மக்களுக்கு கவனமூட்டியவாறும் கூறுகிறார்கள். அன்னார் கூறியதன் சுருக்கம் என்னவென்றால், இஸ்லாத்தின் மீது எத்துணை கடுமையான நாட்களாக இருக்கின்றன! எனவே தான் அல்லாஹ் இழந்து விட்ட மேன்மையை மீண்டும் நிலைநாட்டுவதற்காக ஓர் இயக்கத்தை நிறுவினான். எனவே முஸ்லிம்களைப் பார்த்து கூறுகிறான். இப்பொழுது உங்களது பிடிவாதங்களை விட்டுவிடுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது நாலாபுறமும் தாக்குதல் நடத்தப்படுகின்ற இப்படிப்பட்ட நிலையிலும் அன்னார் மீது சலவாத்தை அனுப்புகின்ற அருள்களைப் பொழிகின்ற அந்த இறைவன் அன்னாரது கண்ணியத்தை நிலைபெறச் செய்வதற்கு கோபம் கொள்ளவில்லையா? என சிந்தியுங்கள்.

அந்த மேற்கோள் முழுவதுமாக இப்படி உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“இந்த காலம் எவ்வளவு அருளுக்குரிய காலமாக இருக்கிறது! கடுங்குழப்பமான இந்நாட்களில் இறைவன் தனது அருள்களால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையை வெளிப்படுத்தும் எண்ணம் கொண்டவாறு மறைவிலிருந்து இஸ்லாத்தின் உதவிக்கு ஏற்பாடு செய்துள்ளான். மேலும் ஒரு ஜமாஅத்தை நிறுவியுள்ளான். எவர்களுடைய உள்ளத்தில் இஸ்லாத்திற்காக ஒரு வேதனை இருக்குமோ, அதன் மதிப்பும் கண்ணியமும் உள்ளத்தில் இருக்குமோ அவர்களிடம் நான் கேட்கிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இந்த அளவு அவதூறுகளும் பழியுரைகளும் சுமத்தப்பட்டு, திருக்குர்ஆன் இந்த அளவு அவமதிப்பு செய்யப்பட்ட ஒரு காலம் இதற்கு முன்பு இஸ்லாத்தில் வந்துள்ளதா? என

அவர்கள் கூறட்டும். பிறகு முஸ்லிம்களின் இந்நிலையை பார்த்து எனக்கு மிகவும் பரிதாபமாகவும் மன வேதனையாகவும் உள்ளது. இந்த அவமதிப்பை உணரக்கூடிய அளவுக்கு கூட இவர்களுக்கு உணர்வு இல்லையா என்ற இந்த வேதனையில் சில நேரங்களில் நான் நிம்மதியிழந்து விடுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொஞ்சம் கூட கண்ணியமளிப்பதில் அல்லாஹ்வுக்கு விருப்பமில்லையா என்ன? இந்த அளவு அவதூறுகள் சுமத்தப்பட்ட பிறகும் இஸ்லாத்தின் எதிரிகளுடைய வாயை அடைத்து அன்னாரது மேன்மையையும் தூய்மையையும் உலகில் பறைசாற்ற வானத்தின் ஒரு ஜமாஅத்தை தோற்றுவிக்க மாட்டானா என்ன? அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்பிக் கொண்டிருக்கும் போது அவமதிப்பிற்கான இக்காலத்தில் எந்த அளவு இந்த தரூதை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது (என பாருங்கள்!) ஆகவே அல்லாஹ் இந்த ஜமாஅத்தின் வடிவில் அதை வெளிப்படுத்தியுள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 8,9 புதிய வெளியீடு)

இந்த சொற்றொடரைப் பாருங்கள்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு தொடர்புடையவர்கள் என்று தம்மை சுட்டிக் காட்டக்கூடிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இவ்வகையில் மிகப்பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக அநாகரீகமான புயல் வீசிக்கொண்டிருக்கும் இப்படிப்பட்ட நேரத்தில் அல்லாஹ்வுடைய வானவர்கள் நிச்சயமாக அன்னார்மீது சலவாத் அனுப்புவார்கள்; அனுப்பிக் கொண்டிருப்பார்கள்; அனுப்புகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசரும் காலத்தின் இமாமுமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இயக்கத்தில், ஜமாஅத்தில் இணைந்துள்ள நமது வேலை என்னவென்றால் தமது துஆக்களை தரூதாக உருமாற்றி விடுங்கள். மேலும் உண்மையான உள்ளத்துடன் சுற்றுப்புறத்திலும் இந்த சலவாத்தை எந்த அளவு கலந்து விட வேண்டும் என்றால் சுற்றுப் புறத்தின் ஒவ்வொரு அணுவும் தரூதினால் மணம் வீசட்டும். மேலும் நமது துஆக்கள் சலவாத்தின் மூலமாக

அல்லாஹ்வின் அரியணை சென்று ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதியை பெறட்டுமாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நமது அன்பு, நேசத்தின் வெளிப்பாடு இவ்வாறு இருத்தல் வேண்டும். அல்லாஹ் இந்த முஸ்லிம் சமுதாயத்திற்கும் அறிவை வழங்குவானாக. புரியும் திறனை வழங்குவானாக. அமைதி, சமாதானம் மற்றும் அன்பின் சூழ்நிலையை உலகில் மீண்டும் உருவாக்கி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தை உயர்த்துகின்ற இந்த ஆன்மீக புதல்வரின் ஜமாஅத்தில் இவர்கள் இணைவார்களாக. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! இன்று ஆயிரத்து நானூறு வருடங்கள் கழிந்த பிறகும் முஹர்ரம் மாதமாகிய இதே மாதத்தில், இதே பூமியில் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமை இரத்தம் சிந்த வைக்கிறார். ஆனால் இவர்கள் ஒருபோதும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை. மேலும் இப்பொழுது வரை இரத்தம் சிந்த வைத்துக் கொண்டே செல்கிறார்கள். இவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. இந்த செயலிருந்து விலகி இருப்பார்களாக. மேலும் தமது உள்ளத்தில் இறையச்சத்தை ஏற்படுத்துவார்களாக. மேலும் இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்படுபவர்களாக ஆவார்களாக. காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொள்ளாததன் காரணமாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளையை மறுத்ததன் காரணமாகவும் இவ்வனைத்தையும் இவர்கள் செய்து வருகிறார்கள்.

இன்று காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொண்ட ஒவ்வோர் அஹ்மதியின் மிகப் பெரும் பொறுப்பு என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பு பற்றிய உணர்வின் காரணமாக மிக அதிகமாக சலவாத் ஓதுங்கள். உங்களுக்காகவும் துஆ செய்யுங்கள். பிற முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். முஸ்லிம் சமுதாயத்தை அல்லாஹ் அழிவிலிருந்து காப்பாற்றுவானாக.

ஹஸ்ரத் நபிகள் நாகயம் (ஸல்) அவர்கள் மீது நாம் கொண்ட நேசமானது இந்த முஸ்லிம் சமுதாயத்தை நமது துஆக்களில் அதிகமாக நினைவு கூற வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. (முஸ்லிம் அல்லாத) மற்றவர்களின் எண்ணங்களும் சரியில்லை. இந்த முஸ்லிம்கள் இன்னும் என்னென்ன கஷ்டங்களிலும், சோதனைகளிலும், துயரங்களிலும் சூழப்படுவார்கள் என்றும், அவர்களுக்கெதிராக

என்னென்ன திட்டங்கள் தீட்டப்படுகின்றன எனவும் இனி என்னென்ன சந்திக்க வேண்டிது வரும் எனவும் தெரியவில்லை. அல்லாஹ் கருணை காட்டுவானாக.

எப்போதும் நம்மை அல்லாஹ் நேரான வழியில் நடத்துவானாக. அல்லாஹ்வுக்கு நன்றி கூறக்கூடிய அடியார்களாக நாம் ஆவோமாக. இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பை அவன் நமக்கு வழங்கியதற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏற்றுக் கொண்ட பிறகு அதற்கான உரிமையை செலுத்துவதற்கும் வாய்ப்பளிப்பானாக. மேலும் எப்போதும் அவனது விருப்பத்திற்குரிய வழியில் நம்மை நடத்துவானாக!

★ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜிஹாது பற்றிய கட்டளையை ரத்து செய்தார்கள் என்றும், இஸ்லாமிய கட்டளைகயை மாற்றினார்கள் என்றும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் அன்னாரின் உறுதிமொழியை முடித்து விட்டார்கள் என்றும் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் முற்றிலும் அபாண்டமும் மிக இழிவானதும் ஆகும்.

★ நம் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை, அபாண்டங்களை கூறுபவர்களை விட இலட்சக்கணக்கான மடங்கு நமது உள்ளங்களில் அல்லாஹ்வின் அருளினால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு இருக்கிறது.

★ டென்மார்க் செய்தித்தாளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அவமரியாதையான கேலிப்படங்களை வெளியிட்டதை சான்றாகக் கொண்டு ஜன்ங் நாளிதழ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்டிகு எதிராக முற்றிலும் பொய்யான, உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிபட்டிருப்பது வெறும் தீங்கும் விசயத்தனமும் ஆகும்.

★ இப்படிப்பட்ட பொய் செய்தியை பரப்புபவர்களைப் பற்றி அவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்றே நான் கூறுகிறேன். அல்லாஹ் இப்போது இந்த தீய இயல்புடையவர்களை படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக.

**ஜுமுஆ குத்பா - 03.03.2006**

**இடம் : பைத்துல் ஃபுதூஹ், இங்கிலாந்து**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

## ஜன்ங் என்ற பத்திரிகை இலண்டனில் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி பொய்யான அடிப்படையற்ற செய்தியை வெளியிட்டிருப்பது வெறும் விசமத்தனமும் தீமையைத் தூண்டுவதும் ஆகும்

இலண்டனிலிருந்து வெளியாகும் ஜன்ங் எனும் செய்தித்தாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகளோடு கொஞ்சம் கூட தொடர்பில்லாத ஒரு செய்தியை நேற்று வெளியிட்டுள்ளது. வெறும் விசமத்தனத்தினால் இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அது நமது கொள்கைளுக்கு மட்டும் எதிரானதன்று; மாறாக, அதில் கூறப்பட்ட சம்பவத்திற்கும் உண்மைக்கும் எந்த தொடர்பும் கிடையாது. எந்தவித அடிப்படையிலும் கிடையாது. இங்கே வெளியிடப்பட்டதை மேற்கோளாகக் காட்டி பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் இச்செய்தி வெளியிடப்பட்டிருக்கலாம். நேற்று வெளியாகவில்லை என்றால் இன்று வெளியாகி இருக்கலாம். ஏனென்றால் இந்த செய்தித்தாள் தனது விற்பனையை அதிகரிக்கச் செய்வதற்காக இதுபோன்ற செய்திகளை வெளியிடுவதற்கு மிகவும் அவசரப்படுகின்றன. Circulation (விற்பனை பிரதிகள்) ஐ அதிகரிக்கச் செய்வதற்காக கீழ்த்தரமாக நடந்து கொள்ளவும், மூடைமூடையாய் பொய்களை வெளியிடவும் பழகி விட்டன. இவர்களுடைய பாகிஸ்தான் பதிப்பு பற்றி நம் அனைவருக்கும் தெரியும். தினந்தோறும் நம்மைப்பற்றி பயனற்ற விவாதங்கள் செய்து கொண்டு பொய் பேசி வருவதை நாம் அறிவோம்.

கடந்த நாட்களில் டென்மார்க்கின் ஒரு செய்தித்தாளில் வீணான, விரும்பத்தகாத கேலி உருவப் படங்கள் வரையப்பட்டு பிற நாடுகளிலும் வரையப்பட்டு அதன் காரணமாக முஸ்லிம்களிடத்தில் கடுந்துக்கமும், கடும் கோபமும் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. தர்ணாக்கள் நடத்தப்படுகின்றன. ஊர்வலங்கள் நடக்கின்றன. ஆகவே எவ்வாறாயினும், கோபத்தின் எந்த விதமான வெளிப்பாடாக இருந்தாலும் அதை நிலைகுலைய விடாமல் பாதுகாக்கக்கூடிய ஒருவர் இல்லையென்றால், இந்த நீரோட்டத்தை தடுப்பவர் ஒருவர் இல்லை என்றால், இதற்கு சரியான திசையை காட்டுபவர் இல்லை என்றால், பிறகு இவ்வாறு தான் எதிர்நடவடிக்கைகள் வெளிப்படும். ஏனென்றால் முஸ்லிம்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், தொழுபவர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், நற்செயல்களை செய்பவர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் இறைத்தூதரின் கண்ணியம் பற்றி கேள்வி எழும் போது மிக்க தன்மானம் கொண்டவர்களாகவும், உயிரை விடுவதற்கும் தயாராகி விடுகின்றார்கள். ஜுமுஆ நாளில் அநேக இடங்களில் மீண்டும் ஊர்வலம் நடத்துவதற்கும், தர்ணாக்கள் நடத்துவதற்கும் மேலும் இவ்வாறான எதிர் நடவடிக்கைகளுக்கான திட்டம் உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இச்செய்தியை வெளியிடுவது, அதுவும் குறிப்பாக நேற்று வியாழக்கிழமையில் வெளியிட்டது ஆகிய இவையெல்லாம் அஹ்மதிகளுக்கெதிராக சூழ்நிலையை உண்டாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மிகவும் அநீதியான, குழப்பத்தை உருவாக்கக்கூடிய முயற்சியாகும். ஏனென்றால் இந்த செய்தியைக் கொண்டு குறைமதியுடைய முஸ்லிம்களை தூண்டிவிட்டு அஹ்மதிகளை அநீதியின் இலக்காக ஆக்க வேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளப் -பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவை அஹ்மதிகளுக்கு எதிராக அறிவற்ற, குறைமதியுடைய முஸ்லிம்களை தூண்டுவதில் எந்த வாய்ப்பும் கை நழுவ விடக்கூடாது என்ற அவர்களின் முயற்சிகளாகும்.

உங்களுள் பலர் இச்செய்தியை வாசித்திருப்பீர்கள். ஆனால் எல்லாரும் வாசித்திருக்க மாட்டார்கள். எனவே இச்செய்தியை நான் வாசித்துக் காட்டுகிறேன். (டென்மார்க்கின் தலைநகரமான) Copenhagen – ஐ (கோபன் ஹேகன்) மேற்கோள் காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களின் ரிப்போர்டர் டாக்டர் ஜாவீத் கனோல் சாஹிப் ஆவார்கள். அவர் கூறுகிறார்: "டென்மார்கினுடைய இரகசிய அமைப்பின் ஒரு பொறுப்பான அதிகாரி தனது பெயர், பொறுப்பு மற்றும் துறையை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கார்டூன் Issue (விவகாரம்) குறித்து பேசும் போது ஜங் செய்தித்தாளிடம் கூறிய விசயம் என்னவென்றால், 2005 செப்டம்பரில் காதியானிகளின் ஆண்டு மாநாடு டென்மார்க்கில் நடைபெற்றது. அதில் காதியானிகளின் மேலிட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். அப்போது காதியானிகளின் ஒரு குழு டேனிஷ் அமைச்சர் ஒருவரை சந்தித்து ஜிஹாது என்ற தலைப்பில் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது அவர்கள் தான் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் சொந்தக்காரர் ஆவார்கள் எனக்கூறியிருக்கிறார்கள்."

இதுவரை சரிதான். குறிப்பாக நாங்கள் மட்டும் தான் என்று அமைச்சராகிய அவரிடம் நாம் கூறவில்லை; என்றாலும் அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் இஸ்லாத்தின் உண்மை போதனை என்பதே நமது வாதமாகும்.

தொடர்ந்து அவர் எழுதுகிறார்: "அவர்களின் நபி மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் ஜிஹாதை ரத்து செய்துவிட்டார்".

சரிதான். ஆனால் நிபந்தனைகளோடு ரத்து செய்து இருக்கிறார்கள்.

தொடர்ந்து அவர் எழுதுகிறார்: "மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்கள் இஸ்லாமிய கட்டளைகளை (நவூதுபில்லாஹ்) மாற்றிவிட்டார்".

இது முழுக்க முழுக்க அவதூறு மற்றும் குற்றச்சாட்டாகும். எனவே (அடுத்து அவரது விசமத்தை பாருங்கள்). "முஹம்மது (ஸல்) அவர்களின் போதனைகளும், அன்னாரது காலமும் முடிந்து விட்டது".

நவூதுபில்லாஹ்! தொடர்ந்து செய்தித்தாளில் எழுதப்பட்ட விசயம் என்னவென்றால், "முஹம்மது (ஸல்) அவர்களை பின்பற்றக் கூடியோர் சவூதி அரேபியாவில் மட்டுமே உள்ளனர் என்ற காதியானிகளின்

உறுதியான நினைவூட்டலுக்குப் பிறகு செப்டம்பர் 30 ஆம் தேதி டேனிஷ் பத்திரிக்கையானது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக 12 காட்டூன்களை வெளியிட்டுள்ளது. ஜிஹாதிய கொள்கை மீது தாக்குதல் நடத்துவதே அதன் மையக் கருத்தாக இருந்தது. டேனிஷ் உயர் அதிகாரி கூறியதென்னவென்றால், ஜனவரியின் தொடக்கம் வரை காதியானிகளின் கூற்று உண்மை என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஏனென்றால் ஜனவரி வரை சவூதி அரேபியாவைத்தவிர வேறெந்த இஸ்லாமிய நாடும் முறையாக எங்கள் மீது கண்டனம் தெரிவிக்கவில்லை. OIC யின் மௌனம் எங்களது நம்பிக்கையை உறுதி செய்து கொண்டிருந்தது. அந்த பொறுப்பான அதிகாரி அந்த சந்திப்பினுடைய வீடியோ டேப்பையும் இந்த பிரதிநிதிக்கு போட்டுக் காட்டினார். அதில் டேனிஷ், உருது மற்றும் ஆங்கில மொழிகளில் பேசியது ரெக்கார்ட் ஆகியுள்ளது''.

**(ஜங் எனும் நாளிதழ் – இலண்டன், 2 மார்ச் 2006 பக்கம் 1,3)**

அதாவது மூன்று மொழிகளிலும் அவருடன் பேசப்பட்டது.

பொய்களுக்கு எந்த காலும் இருப்பதில்லை. எந்த அளவு ஆதாரமற்ற செய்தி என்றால் இதை அளவிட இயலாது. இந்த டாக்டர் ஜாவீத் கனோல் சாஹிப் ஜங் (செய்தித்தாளி)–ன் ஒரு முக்கிய பிரதிநிதியாக இருப்பார் போலும். இவர் டென்மார்க்கில் இருக்கிறார் என்றே கருதப்பட்டது. ஆனால் இவர் இத்தாலியில் இருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது. அங்கிருந்து ஜன்ங் மற்றும் ஜியோவுக்கான பிரதிநிதித்துவம் செய்கிறார். டென்மார்க்கை மேற்கோள் காட்டி எந்தவொரு செய்தித்தாளுக்கும் சட்ட ரீதியாக இவர் இச்செய்தியை கொடுக்க முடியாது என எனக்கு இப்பொழுது தெரிய வந்துள்ளது.

முதல் விசயம் என்னவென்றால், செப்டம்பர் மாதத்தில் ஜமாஅத்தின் மாநாடு நடந்துள்ளதாக குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடந்த வருடத்திற்கான மாநாடு செப்டம்பரில் அங்கு நடக்கவே இல்லை. நான் சென்றதன் காரணமாக ஸ்கேண்டி நேவியன் (Scandinavian) நாடுகளின் ஒன்று சேர்ந்த மாநாடு நடைபெற்றது. மேலும் அது சுவீடனில் நடைபெற்றது. நாம் என்ன

பேசினோம், என்ன பேசவில்லை என எல்லாரும் MTA-வில் அதை கண்டார்கள்.

நான் டென்மார்க் சென்றிருந்த போது ஒரு ஹோட்டலில் ரிசப்சன் (Reception - வரவேற்பு) நடைபெற்றது. அதில் பத்திரிக்கை பிரதிநிதிகள் சிலரும், பிரஸி(Press)னுடைய பிரதிநிதிகளும் வந்திருந்தனர். மேலும் படித்த சில நண்பர்களும் அதில் வந்திருந்தனர். அரசாங்க அதிகாரிகளும் வந்திருந்தனர். ஒரு பெண் அமைச்சரும் வந்திருந்தார்கள். மேலும் அங்கு திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்று ஆகியவற்றை சான்றாகக் கொண்டு இஸ்லாத்தின் அழகிய, அமைதியை விரும்பக்கூடிய போதனை பற்றி பேச்சு நடந்தது. அங்கு கூறப்பட்ட அனைத்துமே தெளிவாகவும், வெளிப்படையாகவும் இருந்தது. ஒளிந்திருந்து எதுவும் பேசப்படவில்லை. மேலும் செய்தித்தாள்கள் அங்கு அதை வெளியிடவும் செய்தன. இன்னும் சொல்லப் போனால், அவர்களின் TV நிகழ்ச்சியிலும் கொஞ்சம் ஒளிபரப்பானது. மேலும் தனிப்பட்ட எந்தவொரு சந்திப்பும் நடக்கவில்லை. ரிசப்-னில் நான் பேசிய சொற்பொழிவு மட்டும் தான். MTA –வில் அது ஒளிபரப்பாகி இருக்கும் என நான் நினைக்கிறேன். இல்லையென்றால் இனி ஒளிபரப்பு செய்து விடுங்கள்.

இந்த எழுத்தாளர் கூறியிருப்பது போன்று மக்களைப் பற்றி அங்கு பேசப்படும் போது இந்த சில மக்கள் தான் இஸ்லாத்திற்கு அவப்பெயர் உண்டாக்குகின்றனர். ஏனென்றால் முஸ்லிம்களுள் பெரும்பான்மையினர் இதுபோன்ற ஜிஹாதையும், தீவிரவாதத்தையும் விரும்புவதில்லை என சொற்பொழிவில் ஒருவேளை கூறப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் நம்மைக் குறித்து மிகப்பெரும் பொய் கூறப்பட்டுள்ளது. மிகப்பெரும் பொய்யரும் கூட இதுபோன்ற விசயங்களை கூறுவதற்கு கொஞ்சம் யோசிப்பார். ஏனென்றால் தற்காலத்தில் எல்லா விசயங்களும் ரெக்கார்ட் செய்யப்படுகிறது. உருது, ஆங்கிலம் மற்றும் டேனிஷ் மொழியில் வீடியோ டேப் இருப்பதாகவும் இந்த எழுத்தாளர் கூறியுள்ளார். இவர் உண்மையாளர் என்றால் இந்த டேப்புகளை காட்டட்டும். நமக்கும் காட்டட்டும். யார் பேசுகிறார், என்ன பேசுகிறார் என்று தெரிந்து விடும்.

## இந்த பொய் செய்தியை வெளியிட்டிருப்பவர்களுக்கு, இது முற்றிலும் பொய்; பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்றே நான் பதில் கூறுகிறேன்

எவ்வாறாயினும் இந்த பொய்யான செய்தியை பரப்பியவர்களுக்கு முதலில் நான் கூறிக் கொள்வது என்னவென்றால், இது முழுக்க முழுக்க பொய்யாகும். லஃனதுல்லாஹி அலல் காஸிபீன் – பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக. நீங்கள் உண்மையாளர்களாயின் நீங்களும் இதே வார்த்தையை திருப்பிக் கூறுங்கள். ஆனால் அல்லாஹ்வின் அச்சம் கடுகளவாவது உங்களிடம் இருக்கும் என்றால் நீங்கள் ஒருபோதும் திருப்பிக் கூறமாட்டீர்கள். பொதுவாக இவர்களிடத்தில் இறை அச்சம் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் இவர்கள் திருப்பிக் கூறவில்லை என்றாலும் இந்த அளவு கடுமையான பொய் கூறியதன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த துஆவின் கீழ் இவர்கள் வந்து விட்டார்கள். எவ்வாறாயினும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கெதிராக இதுபோன்ற தூற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் கடந்த காலத்திலும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தங்களது எண்ணப்படி நமது முதுகில் கத்தியை பாய்ச்சுவதற்கு முயற்சி செய்யும்போதெல்லாம் அல்லாஹ் அவர்களுக்கு தோல்வியைக் காட்டுகிறான். மேலும் முன்பைவிட அதிகமாக அவனது அருளை கொண்டு வருகின்ற தனது நேசத்தை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது வெளிப்படுத்துகின்றான்.

## கேலிச் சித்திரத்திற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர் நடவடிக்கையும், முயற்சியும்

இந்த கார்டூன்களின் குழப்பம் தலைதூக்கிய போது எல்லாரையும் விட முதன் முதலில் அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் இந்த விசயத்தை கையில் எடுத்தது. மேலும் அந்த செய்தித்தாளை அதிலிருந்து விலக்கி வைக்க முயற்சி செய்தது. இது பற்றி நான் முன்பும் கூறியிருக்கிறேன். பிறகு டிசம்பர் மற்றும் ஜனவரியில் நாம் மீண்டும் அந்த செய்தித்தாள்களுக்கு கடிதம் எழுதி இருந்தோம். மேலும் நமது

உணர்வுகளை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தோம். அந்த நாட்களில் நான் காதியானில் இருந்தேன். நமது முபல்லிக் அங்கு (டென்மார்க்கில்) செய்தித்தாள்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். செய்தித்தாளில் நமது முபல்லிக் உடைய நேர்காணல் (Interview) வெளியாகியிருந்தது. இந்த சம்பவம் குறித்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிர் நடவடிக்கை என்ன? என்பதையும், இவர்கள் பொருட்களை உடைப்பதற்குப் பதிலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை தமது வாழ்க்கையின் மூலமாக எடுத்து வைக்க விரும்புகின்றனர் என்றும் கூறிவிட்டு இந்த செய்தித்தாள் தொடர்ந்து கூறுகிறது: இமாம் சாஹிபுக்கு (அதாவது இன்டர்வியூ கொடுத்த இமாம் சாஹிபுக்கு) இந்த கார்டூன்களால் வேதனை ஏற்படவில்லை என்று இதற்கு பொருளல்ல. மாறாக கார்டூன்கள் ஏற்படுத்திய காயத்தில் அவரது உள்ளம் நொறுங்கிப்போய் உள்ளது. இந்த வேதனையானது இந்த காட்டூன்களைப் பற்றி உடனடியாக ஒரு கட்டுரையை எழுத வேண்டும் என்பதன் பக்கம் அவரை தூண்டியது. ஆகவே அவர் அந்த கட்டுரையை எழுதினார். அங்கு டென்மார்க்கின் செய்தித்தாளில் அது வெளியாகியுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அந்த நேசம் தான் ஜமாஅத்திலும் நேசத்தின் நெருப்பை கொளுத்து விட்டெறிய செய்துள்ளது. இதன் காரணமாக ஐரோப்பாவில் கிறிஸ்தவத்திலிருந்து உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்திற்கு வரக்கூடிய ஐரோப்பிய குடிமக்களும் இந்த நேசத்தில் மூழ்கியுள்ளனர்.

ஆகவே, டென்மார்கின் நமது அஹ்மதி முஸ்லிம் அப்துஸ் ஸலாம் மேட்ஸன் சாஹிபுடைய நேர்காணல் (இன்டர்வியூ) Venster Bladet என்ற செய்தித்தாளில் பிப்ரவரி 16 ஆம் தேதி 2006 அன்று வெளியானது. அது ஒரு நீண்ட நேர்காணல் (இன்டர்வியூ) ஆகும். அதிலிருந்து சில பகுதிகளை நான் படித்துக் காட்டுகிறேன்.

அதன் மொழியாக்கம் என்னவென்றால், மேட்ஸன் சாஹிப் மேலும் கூறினார்: டென்மார்க்கின் பிரதமர் முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களோடு பேசியிருக்க வேண்டும். ஏனென்றால் மக்கள் இந்த கேலி

சித்திரங்களை பார்த்து கோபமடைகின்றனர். பிரதமர் முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களோடு பேசியிருந்தால் இவ்விவகாரம் எந்த அளவு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் இதற்கு என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கும் எனவும் தெரிந்திருக்கும். இந்த கேலி சித்திரங்களின் வெளியீட்டால் என்ன எதிர்விளைவு ஏற்படும் என நான் உணர்ந்திருந்தேனோ அதே எதிர்விளைவு தான் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும், ஒவ்வொரு துறையிலும் எல்லா முஸ்லிம்களுக்கும் முன்மாதிரியாக விளங்குகிறார்கள். இப்படிப்பட்ட ஒருவர் மீது அவதூறான தாக்குதல் தொடுக்கப்படும் போது அது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் துன்பத்தை தரக்கூடிய விசயமாக இருக்கிறது. அதனால் முஸ்லிம்கள் வேதனைப் படுகிறார்கள்.

அப்துஸ் ஸலாம் மேட்ஸன் சாஹிப் கூறுகிறார்: இந்த கேலிச் சித்திரத்தை வெளியிட்டதில் அங்குள்ள யூலண்ட் போஸ்டன் (Uland Posten) எனும் செய்தித்தாளுக்கு என்ன கிடைத்தது? (பத்திரிக்கையாளர்) தொடர்ந்து எழுதுகிறார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கேலிச் சித்தரங்கள் வெளியிட்டதில் மேட்ஸன் சாஹிபுக்கும் மிகுந்த வேதனை ஏற்பட்டுள்ளது. மேலும் மேட்ஸன் சாஹிப் கூறியது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தோற்றம் எப்படி இருந்தது, எவ்வாறு இருந்தது என்பது குறித்து மிகவும் விளக்கமாக தகவல்கள் கிடைக்கின்றன. மேலும் அவர்கள் தொடர்ந்து எழுதுவதென்னவென்றால், இது ஓர் அசுத்தமான குழந்தைத் தனமான செயலாகும்.

பிறகு அவர் எழுதியிருப்பது என்னவென்றால் (அதாவது மேட்ஸன் சாஹிப்), டென்மார்க்கில் அவமதிப்புக்கெதிரான சட்டம் உள்ளது. இதனுடைய அவசியம் இல்லை என முதலில் நான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது குழப்பம் நடக்காமல் இருப்பதற்கு, குழப்பத்தை தடுத்து நிறுத்துவதறக்கு இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என கருதுகின்றேன். அவர் தொடர்ந்து எழுதுகிறார்: மற்றபடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அவதூறு சுமத்துவது இறைவனுடன் தொடர்புடைய விவகாரமாகும். அவனே இதற்கு தண்டனை

வழங்குவான். ஆக, பாருங்கள். ஓர் ஐரோப்பிய அஹ்மதி முஸ்லிமுக்கு எத்துணை உறுதியான ஈமான் இருக்கிறது!

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பான வன்மையான செயலுக்கு நம்முடைய எதிர்நடவடிக்கையாக இருந்தது.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த பேரன்பு

எவர்கள் நம்மீது நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது எந்த நேசமும் இல்லை ஆகிய இதுபோன்ற அவதூறும், குற்றச்சாட்டும் சுமத்துகிறார்களோ அவர்களை விட இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மடங்கு அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நேசம் அல்லாஹ்வின் அருளினால் நமது உள்ளங்களில் உள்ளது. இவையெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய போதனையின் காரணமாக, நமது உள்ளங்களில் இருக்கின்றன. அதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அந்தஸ்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட உயர்ந்தது என எந்த அஹ்மதியும் ஒருபோதும் நினைத்து பார்க்க மாட்டார். நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்ட நேசத்தின் நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் இக்கவிதையை படிக்கும் போது அன்னாரது கண்கள் கண்ணீர் வடிந்தன. அந்த கவிதை என்னவென்றால்,

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِیْ فَعَمِیَ عَلَیْکَ النَّاظِرُ
مَنْ شَاءَ بَعْدَکَ فَلْیَمُتْ فَعَلَیْکَ کُنْتُ اُحَاذِرُ

(தீவானே ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி))

நீர் எனது கண்களின் கருவிழியாக இருந்தீர். நீர் மரணமடைந்ததற்கு பிறகு அது குருடாகிவிட்டது. உமக்கு பிறகு யார் வேண்டுமானாலும் மரணிக்கட்டும். எனக்கோ உமது மரணத்தை பற்றிய அச்சம் மட்டுமே இருந்தது. இக்கவிதை என்னால் கூறப்பட்டதாக

இருந்திருந்தால் (எவ்வளவு நன்றாக இருக்கும்) என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். இப்படிப்பட்ட நபர் குறித்து இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட தன்னை பெரியவராக கருதுகிறார் என்றோ அல்லது இவரை ஏற்றுக் கொண்டவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட இவருக்கு அதிக அந்தஸ்து கொடுக்கிறார்கள் என்றோ கூறுவது மிகவும் கீழ்த்தரமான அவதூறாகும். நவூதுபில்லாஹ். எங்களுக்கோ ஒவ்வோர் அடியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசத்தில் மூழ்கியிருக்கும் காட்சி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் தென்படுகிறது. ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"அந்த ஒளியில் நான் அர்ப்பணம். அதற்காகவே நான் உருவானேன். நான் ஒன்றுமில்லை. எல்லாம் அவரே. இதுவே தீர்ப்பாகும்". (காதியான் கே ஆரியா அவர் ஹம் – ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 456)

எவர் தன்னுடைய அனைத்தையும் இந்த ஒளிக்காக அர்பணிக்கிறாரோ அவரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து இப்போது இல்லை எனவும் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியினுடைய அந்தஸ்து மிக உயர்ந்து விட்டது எனவும் அஹ்மதிகளைப் பொருத்த வரை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி (அலை) அவர்கள் இறுதி நபி ஆவார்கள் எனவும் அன்னார் இறுது நபியாவார்கள் என்பது எங்களது கொள்கையாகும் எனவும் அதனால் இப்பொழுது நாங்கள் செய்தித்தாள்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கிறோம். நவூதுபில்லாஹ், நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கார்டூன்களை உருவாக்குங்கள் என நாங்கள் கூறியிருப்பதாக கூறப்பட்டுள்ளது. நவூதுபில்லாஹ். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன், லஃனதுல்லாஹி அலல் காஸிபீன். டென்மார்க்கில் சில நூறு எண்ணிக்கையில் உள்ள எங்களுடைய அனுமதிக்காகத் தான் (கார்டூன் வெளியிட்ட) அவர்கள் காத்திருந்தார்கள் என்றும் நாங்கள் கூறியதற்கிணங்க காட்டூன் வெளியிடப்பட்டது என்றும் கூறுவது மிகவும் குழந்தைத் தனமான

விசயமாகும். இந்த உருது செய்தித்தாள் செய்தியை சேகரிக்கும் போது முன்னாலும் பின்னாலும் சிந்திக்க வேண்டும்.

## முஸ்லிம் அரசாங்கங்கள், பயனை நோக்கமாகக் கொண்ட முல்லாக்கள், விசமிகளின் வலையில் விழக்கூடாது

அப்பாவியான டென்மார்கினுடைய அரசின் அறிவு இந்த அளவு மழுங்கிவிடவில்லை போலும். ஆனால் இச்செய்தியை எழுதியவர்கள் இதை வெளியிட்டவர்கள் எவ்வாறாயினும் அறிவற்றவர்கள். அவர்களுடைய உள்ளங்களில் குழப்பத்தைத் தவிர வேறொன்றும் தென்படுவதில்லை. இந்த செய்தியினுடைய நோக்கம் முஸ்லிம்களை கிளர்ச்சியடையச் செய்து, தூண்டி விடுவதைத் தவிர வேறெதுவும் இருப்பதாக தென்படவில்லை. அதாவது இதனால் முஸ்லிம்கள் ஆவேசமடைந்து விடுவார்கள். எனவே பங்களாதேஷ், இந்தோனேஷியா, பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகளில் எங்கெல்லாம் அஹ்மதிகளுக்கெதிராக சூழ்நிலை உள்ளதோ அங்கே மேலும் குழப்பத்தை உருவாக்க இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஆதாயம் தேடும் சில முதலாளிகள் இந்நாடுகளில் அரசாங்கத்திற் கெதிராக கிளர்ச்சியை உருவாக்க இந்த சாக்குபோக்கில் இந்த தூண்டுதலை உருவாக்கியிருக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. ஏனென்றால் அஹ்மதிகளுக்கெதிராக ஆரம்பிக்கப்படுகின்ற இயக்கங்கள் இறுதியில் அரசாங்கத்திற்கெதிராக திரும்பி விடுவதைத்தான் பொதுவாக நாம் இன்று வரை பார்த்து வருகிறோம். எனவே இந்த நாடுகளின் அரசாங்கங்களும் சிந்திக்க வேண்டும். ஆதாயம் தேடக்கூடிய இந்த முல்லாக்கள் அதற்கு காரணமாக இருப்பவர்களின் வலையில் சிக்கி விடக்கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு கவிதை படித்துக் காட்டப்பட்டது. எங்களைப் பொருத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து என்னவென்பதை அதைக் கண்டு ஓரளவுக்கு கணித்திருப்பீர்கள். மேலும் ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் இருக்கக்கூடிய அந்தஸ்தை அவரே அறிவார். இது தொடர்பாக நான் ஏற்கனவே குத்பாக்கள் கொடுத்து விட்டேன். வேதனையை நாங்கள் வெளிப்படுத்தி விட்டோம். மேலும் வெளிப்படுத்தி வருகிறோம். முழு உலகிலும் எங்கள் சார்பாக கண்டன அறிக்கைகளும் வெளிவந்து விட்டன.

Press Release-ம் வெளிவந்து விட்டன. மேலும் இந்த எல்லா அறிக்கைகளையும் நாங்கள் பிறருக்கு காட்ட வேண்டும் என்பதற்காகவோ, மற்றவர்களுக்காகவோ, முஸ்லிம்களுக்கு பயந்தோ, அஞ்சியோ வெளியிடவில்லை. மாறாக இது எங்களுடைய ஈமானின் ஒரு பகுதியாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு தொடர்பை முறித்துக் கொண்ட பிறகு நமது வாழ்க்கைக்கு எந்த மதிப்புமில்லை. இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை நான் படித்துக் காட்டுகிறேன். அதன் மூலமாக விசயத்தை மேலும் தெளிவாக்குகிறேன்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளின் இரத்தினச் சுருக்கம்

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:**

“லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்பதே நமது மார்க்கத்தின் சுருக்கமும் சாராம்சமும் ஆகும். இவ்வுலக வாழ்வில் நாம் கொண்டுள்ளதும் இவ்வுலகிலிருந்தும் நாம் பிரியும் வரை இறையருளால் நம்முடனிருப்பதுமான கொள்கை என்னவெனில் (அதாவது அதே ஈமானுடனே நாம் இந்த உலகை விட்டு செல்வோம்) எங்களின் தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீனும், கைருல் முர்ஸலீனும் ஆவார்கள். அவர்களின் கைகளால் மார்க்கம் முழுமை பெற்று விட்டது. எந்த இறையருளின் மூலமாக மனிதன் நேர்வழியை மேற்கொண்டு இறைவன் வரை சென்றடைய முடியுமோ அது தனது நிறைவான அந்தஸ்தை எட்டிவிட்டது (இஸாலா அவ்ஹாம் - ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 169,170)

ஆக, இது தான் நமது ஈமானின் பகுதியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இந்த போதனையை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே எவருடைய ஈமான் இவ்வாறானதாக இருக்குமோ அவரைப் பற்றி இந்த வழிவகையின்றி இறைவனை அடைய முடியும் என்றோ, அவருக்கு நுபுவ்வத் கிடைத்தது என்றோ அவர் நம்புவதாக எவ்வாறு கூற முடியும்? மேலும் அன்னார் கூறுகிறார்கள்:

“இஸ்லாமிய மார்க்கம் மட்டுமே நேரான பாதையாகும். மேலும் இப்பொழுது வானத்தின் கீழ் ஒரு நபி மட்டுமே உள்ளார். ஒரு வேதம் மட்டுமே உள்ளது. அதாவது ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்). அவர்கள் அனைத்து நபிமார்களை விடவும் உயர்ந்தவரும் சிறந்தவரும் ஆவார்கள். மேலும் அனைத்து தூதர்களை விட நிறைவானவரும் முழுமையானவரும் ஆவார்கள். மேலும் நபிமார்களுள் காத்தமாகவும், மக்களுள் சிறந்தவராகவும் இருக்கிறார்கள். அவரைப் பின்பற்றுவதால் இறைவன் கிடைத்து விடுகிறான். மேலும் இருளின் திரைகள் விலகி இவ்வுலகிலேயே உண்மையான இரட்சிப்பின் அறிகுறிகள் தெளிவாக தெரிய ஆரம்பிக்கின்றன. மேலும் உண்மையான முழுமையான நேர்வழிகளையும், தாக்கங்களையும் உள்ளடக்கிய திருக்குர்ஆனின் மூலமாக உண்மையான அறிவுகளும் இறை ஞானங்களும் கிடைக்கப் பெறுகின்றன. மேலும் மனித கறைகளிலிருந்து உள்ளம் தூய்மை அடைகிறது. மேலும் மனிதன் அறிவீனம், கவனமின்மை மற்றும் ஐயங்களின் திரைகளிலிருந்து இரட்சிப்பு பெற்று ஹக்குல் யகீன் (உண்மையான நம்பிக்கை) என்ற அந்தஸ்து வரை சென்றடைந்து விடுகின்றான்”. (பராஹீனே அஹ்மதிய்யா – முதல் நான்கு தொகுதிகள், அடிக்குறிப்பு எண் 3, ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 557,558)

அதாவது இனி என்னவெல்லாம் கிடைக்க முடியுமோ அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைக்கும். மேலும் அன்னாரின் மீதே நபித்துவம் முழுமையடைகிறது. அன்னாரின் போதனைகள் மூலமாகவே இருள்கள் விலகி ஒளி கிடைக்கும். மேலும் அன்னார் கொண்டு வந்த போதனையின் மூலமாகவே இறை நெருக்கமும், உண்மையான இரட்சிப்பும் கிடைக்கும். மேலும் அதன் மூலமாகவே உள்ளத்தில் கறைகள் நீங்கும்.

### ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“நம்முடைய நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதற்காக ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாகத் தோன்றி மறைந்து போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தார்கள். இந்தப் பெருமையில் நமது நபி (ஸல்) அவர்களுடன் வேறு எந்த நபிக்கும்

பங்கில்லை. அன்னார் முழு உலகையும் இருள் சூழந்ததாகக் கண்டார்கள். பின்னர் அன்னாரின் வருகையால் அந்த இருள் ஒளியாக மாறியது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த சமுதயாத்தில் தோன்றினார்களோ அச்சமுதாயம் முழுவதும் இணை வைத்தலெனும் ஆடையை களைந்து ஓரிறைக் கொள்கை எனும் ஆடையை அணியும் வரை அவர்கள் இவ்வுலகை விட்டு செல்லவில்லை. அது மட்டுமின்றி அம்மக்கள் நம்பிக்கையின் மிக உயர்ந்த நிலையை எட்டினர். மேலும் உலகில் எப்பகுதியிலும் காண முடியாத ஈடு இணையற்ற முறையில், உண்மை, நன்றியுணர்வு, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த செயல்கள் அவர்கள் மூலமாக வெளிப்பட்டன. இப்படிப்பட்ட மாபெரும் வெற்றியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த இறைத்தூதரும் பெறவில்லை. இது ஒன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். அதாவது காலம் மிகவும் மோசமான இருளில் மூழ்கியிருந்த நேரத்தில் இயல்பாகவே ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் அவர்கள் தோன்றினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட நேரத்தில் இவ்வுலகை விட்டுச் சென்றார்கள் என்றால் இலட்சக்கணக்கான மக்கள் இணை வைத்தலையும், சிலை வணக்கத்தையும் விட்டுவிட்டு ஓரிறை கொள்கையையும், நேரிய வழியையும் கடைபிடிக்க ஆரம்பித்து விட்டனர். மேலும் உண்மையில் இந்த முழுமையான சீர்திருத்தம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே உரியதாக இருந்தது. அதாவது காட்டு விலங்குகளின் குணங்களையும், மிருக இயல்புகளையும் உடையவர்களாயிருந்த சமுதாயத்திற்கு மனித நன்னெறிகளை கற்றுக் கொடுத்தார்கள்''.

(அதாவது விலங்குகளைப் போன்று வாழ்க்கை நடத்தி வந்த காட்டு மிராண்டித்தனமான சமுதாயத்திற்கு மனித பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள்).

''இன்னொரு வகையில் கூறுவதென்றால், விலங்குகளை மனிதராக்கினார்கள். (அதாவது காட்டு விலங்கை மனிதராக்கினார்கள்).

“பிறகு மனிதர்களை கல்வி அறிவு பெற்ற மனிதர்களாக்கினார்கள். பிறகு கல்வியறிவு பெற்ற மனிதர்களை இறை அடியார்களாக மாற்றி ஆன்மீகத் தன்மையை அவர்களுக்கு ஊதினார்கள். அதன் மூலம் உண்மையான இறைவனுடன் அம்மக்களுக்கு தொடர்பை ஏற்படுத்தித் தந்தார்கள். இறைவழியில் அவர்கள் ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டனர். எறும்புகளைப் போன்று கால்களில் நசுக்கப்பட்டனர். இருந்த போதிலும் அவர்கள் தங்கள் ஈமானை விட்டுவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு சோதனையிலும் முன்னேறிச் சென்றனர். எனவே ஆன்மீகத்தை நிலைநாட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது ஆதமாக விளங்கினார்கள். மாறாக உண்மையான ஆதம் அவர்களாகவே இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மனிதச் சிறப்புகள் அனைத்தும் முழுமை பெற்றன நல்ல ஆற்றல்கள் அனைத்தும் தத்தமது பணியில் ஈடுபட்டன. மேலும் மனித இயல்பின் எந்தக் கிளையும் கனிதராமல் இருக்கவில்லை. மேலும் அவர்களுடைய கத்மே நுபுவ்வத் என்பது காலத்தின் இறுதி என்ற காரணத்தினால் மட்டும் அன்னார் மீது ஏற்படவில்லை. மாறாக, நபித்துவத்தின் அனைத்து சிறப்புகளும் அன்னாருடன் முற்றுப் பெற்று விட்டன என்ற காரணத்தினாலும் ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைப் பண்புகளின் முழுமையான தோற்றமாக இருந்ததால் அவர்களுடைய சரீஅத் கம்பீரமிக்கதாகவும், மென்மையானதாகவும் இருவித பண்புகள் கொண்டதாகவும் விளங்கிற்று. அன்னாரின் முஹம்மது அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ற இரு பெயர்களும் இந்த நோக்கத்திற்காகவேயாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பொது நபித்துவத்தின் எப்பகுதியிலும் குறையிருந்ததில்லை. மாறாக அது ஆரம்பத்திலிருந்தே முழு உலகிற்கும் உரியதாக விளங்கியது. (லெக்சர் சியால்கோட், ரூஹானி கஸாயின் – தொகுதி 20, பக்கம் 206,207)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்கள் இன்று வரை நிலைபெற்றுள்ளது என்பதே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களுள் காத்தமாக இருக்கிறார்கள். அதாவது நம்முடைய நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு புரிய சரீஅத்தோ, புதிய வேதமோ, புதிய கட்டளைகளோ வராது”.

(மிர்ஸா குலாம் அஹ்மத் புதிய சரீஅத்தை கொண்டு வந்தார் எனவும் அவரை அஹ்மதிகள் உயர்வாக கருதுகின்றனர் எனவும் இவர்கள் கூறுகிறார்கள்).

“இதே வேதமும் இதே கட்டளைகளும் தான் இருக்கும். என்னுடைய நூலில் என்னைக் குறித்து நபி என்றும் ரஸூல் என்றும் காணப்படுகிறது என்றால் எந்தவொரு புதிய சரீஅத்தோ, புதிய கட்டளைகளோ கற்றுக் கொடுக்கப்படும் என்று ஒருபோதும் அதற்குப் உட்பொருள் அல்ல. உண்மையான அவசியமுள்ள நேரத்தில் அல்லாஹ் ஒருவரை நியமிக்கும் போது தன்னுடன் உரையாடுகின்ற சிறப்பை அவருக்கு வழங்குகிறான் என்பதே அதன் கருத்து ஆகும்”. (அதாவது அவருடன் பேசுகிறான்). “மறைவான விசயங்களை அவருக்கு வழங்குகின்றான். இந்த பொருளில் நபி என்ற சொல் அவருக்கு கூறப்படுகிறது”.

(அதாவது அல்லாஹ் எவருடன் அதிகமாக பேசினாலும் உரையாடினாலும் அவருக்கு நபி என்ற சொல் வழங்கப்படுகிறது).

“மேலும் நியமிக்கப்பட்ட அவர் நபி எனும் பட்டம் பெறுகிறார். அவருக்கு புதிய சரீஅத்தை வழங்குகிறான் என்றோ அல்லது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சரீஅத்தை நவூதுபில்லாஹ் ரத்து செய்கிறார் என்றோ அதற்குப் பொருளல்ல”. (இந்த அவதூறை நம்மீது சுமத்துகிறார்கள்). “மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே உண்மையாயகவும், முழுமையாகவும் பின்பற்றியதன் காரணமாகத்தான் இவை அனைத்தும் அவருக்கு கிடைக்கப் பெற்றது. அது அல்லாமல் கிடைக்கவே முடியாது”. (அல்ஹகம் ஜனவரி 10, 1904 பக்கம் 2)

நான் அனைத்தையும் அவரிடமிருந்தே பெறுகிறேன். அவரின்றி ஒன்றும் கிடைக்கவே முடியாது என வாதம் செய்பவர் இரண்டு சொற்களில்

பிரித்து கூறுகிறார். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான நேசர் ஆவார் என்று அவரை ஏற்றுக் கொண்டவர்களும் உறுதியாக நம்பும் போது முஸ்லிம்களிடத்தில் நிம்மதியின்மையை உருவாக்கவே இது போன்ற இட்டுக்கட்டப்பட்ட, பொய்யான விசயங்களை இம்மக்கள் எப்பொழுதும் பேசி வருகின்றனர். குழப்பத்தை உருவாக்குவதைத் தவிர சைத்தானிய ஆற்றல்களும் (அதாவது எப்பொழுதும் சைத்தான் கூடவே இருக்கின்றான்). பொறாமை எனும் நெருப்பும் அவர்களை எரித்துக் கொண்டே இருக்கின்றன. ஜமாஅத்தின்டி முன்னேற்றத்தை இவர்களால் காண முடியவில்லை. ஜமாஅத்தின் முன்னேற்றம் அவர்களின் கண்களில் உறுத்திக் கொண்டே இருக்கிறது. இவர்கள் எந்த அளவு கீழ்த்தரமான செயல்களை செய்தாலும் சரியே! ஏனென்றால் முன்பும் இவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். இனிமேலும் இவர்கள் செய்து கொண்டே இருக்கலாம். இதுபோன்ற மக்கள் பிறந்து கொண்டே இருப்பார்கள். சைய்த்தான் எப்பொழுதும் இருந்து கொண்டே இருப்பான். இவர்களின் கீழ்த்தரமான செயல்களால் இந்த முன்னேற்றம் நின்று விடாது. இன்சா அல்லாஹ்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

“மனிதனுக்கு அருளப்பெற்ற – அதாவது முழுமையான மனிதனுக்கு அருளப்பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களில் இருக்கவில்லை; நட்சத்திரங்களில் இருக்கவில்லை. சந்திரனில் இருக்கவில்லை. சூரியனில் இருக்கவில்லை. மேலும் பூமியிலுள்ள கடல்கள், ஆறுகள் இவைகளிலும் இருக்கவில்லை. அது மாணிக்கம், நீலமணி, மரகதம், வைரம், முத்து ஆகியவற்றுள்ளும் இருந்ததில்லை. அதாவது பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை.” (பூமியின் பொருள்களிலும் இருக்கவில்லை. வானத்திலும் இருக்கவில்லை). “அது மனிதனிடமே இருந்தது. அதாவது

முழுமையான மனிதனிடம். அதன் முழுமை, முடிவு, உயர்வு, மேன்மை எல்லாம் ஒருங்கே கொண்ட நம் தலைவரும், எஜமானரும், தூதர்களின் தலைவரும், உயிரினங்களில் உயர்ந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே ஆவார்கள். எனவே அவ்வொளி அவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவரின் குணயியல்புகளைச் சறிதேனும் கொண்டவர்களுக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப வழங்கப்பட்டது.'' (அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் எந்த அளவு ஈமான் இருந்ததோ அதற்கேற்ப கொடுக்கப்பட்டது). "மேலும் அமானிதம் என்பது முழுமையான மனிதனுடைய எல்லா ஆற்றல்களும், அறிவும், நேசமும், கண்ணியமும், கம்பீரமும், இறைவன் முழுமையான மனிதனுக்கு வழங்கிய ஆன்மீக பௌதீக அருள்கள் அனைத்தும் ஆகும்.'' (அதாவது மனிதனின் அனைத்து பாகங்களுமான அறிவு, ஞானம் மற்றும் இதர புலன்கள், இவை உயர்ந்த ஆற்றலில், உயர் தகுதியில் முழுமையான மனிதனுக்கு கிடைத்தது). மேலும் முழுமையான மனிதன் இந்த வசனத்திற்கேற்ப அதாவது

(சூரா அந்நிஸா வசனம் 59) إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَىٰ أَهْلِهَا

(அதாவது அமானிதங்களை உரியவர்களிடம் ஒப்படையுங்கள் என்று இறைவன் உங்களுக்கு கட்டளையிடுகிறான் என்ற வசனத்திற் கேற்ப முழுமையான மனிதன்) "இந்த எல்லா அமானிதங்களையும் இறைவனிடத்தில் திரும்ப கொடுத்து விடுகின்றார். அதாவது அவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்டு, அவன் வழியில் அர்ப்பணமாகிறார்...... மேலும் இச்சிறப்பு உயர்வாகவும், முழுமையாகவும், நிறைவாகவும் நம் தலைவரும், நம் எஜமானரும், நம் வழிகாட்டியும், கல்வி கற்காத நபியும், உண்மையானவரும், உண்மையாளர் என உறுதி செய்யப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமே இருந்தது.'' (ஆயினா கமாலாத்தே இஸ்லாம் – ரூஹானி கஸாயின், தொகுதி 5, பக்கம் 160 – 162)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அன்பராக தம்மைத் தாமே நினைக்கின்ற இம்மக்கள், நவூதுபில்லாஹ் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அன்னாரை விட உயர்வாக கருதுகிறோம் என நம்மீது அவதூறு சுமத்துகிறார்கள். சுய இலாபத்தை

தவிர வேறொன்றும் இவர்களுடைய நோக்கம் கிடையாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மை குறித்து கூறிய இச்சொற்களில் இலட்சத்தில் ஒரு பங்காவது இவர்களின் உலமாக்கள் ஒருவருடைய நாவிலிருந்தும் வெளிப்பட்டதாக இவர்கள் காட்ட முடியுமா? நீங்கள் யாரை பொய்யர் என்று கூறுகிறீர்களோ அந்த உண்மை நேசரின் அருளுக்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறிய வார்த்தைகள் தான் இது. அவருடைய ஒவ்வொரு அசைவும் அமைதியும் அவருடைய தலைவரும், கட்டுப்பட தகுந்தவருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றக் கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்து வைத்த இந்த அழகிய அறிவுள்ள ஞானங்கள் உங்களது நூல்களில் இருந்தால் காட்டுங்கள்.

மேலும் எப்பொழுதும் இதுவே ஜமாஅத்தின் போதனையாக உள்ளது. இதன்படியும் ஜமாஅத் செல்கிறது. நாம் சட்டத்திற்குட்பட்டவாறு பொறுத்துக் கொள்கிறோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“இதுவே நமது மார்க்கத்தின் சுருக்கம் ஆகும். ஆனால் தேவையின்றி இறையச்சமில்லாமலம் நமது மேன்மை வாய்ந்த நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை தகாத வார்த்தைகளால் நினைவு கூறி அன்னார் மீது அசுத்தமான பழிகளை சுமத்தி, தகாத வார்த்தைகளளை கூறுவதை விட்டு விடாத மக்களுடன் நாம் எப்படி சமாதானம் செய்து கொள்ள முடியும்? நான் உண்மையாகவே கூறுகிறேன். எங்களால் கொடிய நிலத்திலுள்ள பாம்புகளுடனும், பாலை வனங்களிலுள்ள ஓநாய்களுடனும் சமாதானம் செய்து கொள்ள முடியும். ஆனால் எங்கள் உயிரினும், தாய் தந்தையை விட மேலான அன்பிற்குரிய நபி மீது அசுத்தமான தாக்குதல்களை நடத்துபவர்களிடம் நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது. இறைவன் எங்களுக்கு இஸ்லாத்திலேயே இறப்பைக் கொடுக்கட்டும். ஆனால் ஈமானை இழக்கக்கூடிய அப்படிப்பட்ட செயலை நாங்கள் செய்ய விரும்ப மாட்டோம்.”

(பய்காமே சுலஹ் – ரூஹானி கஸாயின், தொகுதி 23, பக்கம் 459)

இதுவே நமது போதனையாகும். இது ஹஸ்ரத் மஹீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய போதனையாகும். இதுவே நமது உள்ளங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நேசத்தின் கொளுந்துவிட்டெரியும் நெருப்பாகும். மேலும் இதற்கான சரியான அறிவை, ஞானத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கினார்கள். செய்தித்தாள்கள் மற்றும் டென்மார்க்கின் அரசுக்கு நவூதுபில்லாஹ் (நபி (ஸல்) பற்றிய) கேலிச் சித்திரங்களை உருவாக்குவதற்கு அஹ்மதிகள் ஊக்கம் செய்தார்கள் என்றும் பிறகு அவர்கள் (நபி (ஸல்) பற்றிய) கேலிச் சித்திரங்களை வெளியிட்டார்கள் என்றும் இவ்வாறு இதன் பிறகும் கூறினால் அவர்கள் மீது அல்லாஹ்வின் சாபத்தை தவிர எதையும் இட முடியாது.

## வாளின் மூலமாக போர் புரிதல் என்பதன் உண்மை நிலை

இரண்டாவது விசயம் என்னவென்றால் ஜிஹாதை ரத்து செய்து விட்டார் என்று கூறப்பட்டது ஆகும். ஆனால் அவர் முதல் விசயமாக எழுதியிருப்பதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ் நாம் நபியாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் அல்லது அன்னாரின் போதனை இப்போது ரத்தாகிவிட்டது என்பதாகும். இது (மறுத்துரைப்பதற்கு) மிக முக்கியமான விசயமாகும். இரண்டாவது விசயமாக ஜிஹாது ரத்தாகி விட்டது என்று அவர் எழுதியிருக்கிறார். இக்காலத்தில் ஜிஹாது ரத்தாகி விட்டது பற்றி கூறப்படுகின்ற விளக்கமும், சில முஸ்லிம் அமைப்புகள் தினந்தோறும் செய்கின்ற செயல்களும் ஜிஹாது அல்ல. இஸ்லாத்தின் போதனைக்கு முற்றிலும் மாற்றமானது என முஸ்லிம் தலைவர்கள் கடந்த நாட்களில் ஜிஹாது குறித்து கவலை தெரிவித்துள்ளனர். இந்த தலைவர்களின் மீது பாரம் போடப்பட்ட போது இவர்கள் எந்த சக்தியை சார்ந்துள்ளார்களோ, மேலுமம் எவர்களிடமிருந்து வாங்கி உண்கிறார்களோ அவர்கள் இந்த தலைவர்கள் மீது அழுத்தம் கொடுத்த போது இவ்வாறு கூறியிருக்கிறார்கள். இவர்களின் அறிக்கை செய்தித்தாள்களில் அச்சாகியுள்ளது. இக்காலத்தில் இந்த சூழ்நிலையில் ஜிஹாது தடை செய்யப்பட்டுவிட்டது என்பது இஸ்லாமிய போதனைக்கு ஏற்பவே உள்ளது என்று முதல் நாளிலிருந்தே இந்த நிலைப்பாட்டில், கொள்கையில் அஹ்மதிய்யா ஜமாஅத் இருக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"நம்முடைய நபி (ஸல்) மற்றும் அன்னாரது கண்ணியமிக்க சஹாபாக்களின் போர்கள் நிராகரிப்பவர்களிடமிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக இருந்தது. அல்லது அமைதியை நிலை நாட்டுவதற்காக இருந்தது. மேலும் எவர்கள் வாளினால் மார்க்கத்தை தடுக்க விரும்புகிறார்களோ அவர்களை வாளினால் பின்னால் நகர்த்துவதற்காக இருந்தது. ஆனால் இப்போது எதிரிகளில் மார்க்கத்திற்காக யார் வாளெடுக்கிறார்? முஸ்லிமாக மாறக்கூடியவர்களை எவர் தடுக்கிறார்? பள்ளிவாளில் தொழவும், பாங்கு சொல்லவும் எவர் தடுக்கிறார்?"

**(தூர்யாக்குல் குலூப் – ரூஹானி கஸாயின் தொகுதி 15, பக்கம் 159,160)**

அதாவது பாங்கு கூறுவதை யார் தடுக்கிறார் என்பதாகும். பாகிஸ்தானில் அஹ்மதிகளை மட்டும் தான் தடுத்து வருகின்றனர். ஆனால் எவ்வாறிருப்பினும் நாங்கள் மௌனமாக இருக்கிறோம். நாங்கள் எவ்வித கூச்சலும் போடவில்லையே. பாங்கு கூறாமல் தொழுது வருகிறோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

சஹீஹ் புகாரியில் (கிதாபுல் அன்பியா, நுஸூலு ஈஸப்னி மர்யம் எனும் பாடம்) "வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சிறப்பை கூறும் விதத்தில் தெளிவான ஹதீஸ் உள்ளது. அதாவது யழவுல் ஹர்ப். மஸீஹ் மவ்வூது சண்டையிடமாட்டார். திருக்குர்ஆனுக்குப் பிறகு மிகச்சரியான நூல் சஹீஹ் புகாரி என நீங்கள் ஒருபுறம் கூறுகிறீர்கள். மறுபுறம் சஹீஹ் புகாரிக்கு எதிரான, அதன் ஹதீஸுக்கு முற்றிலும் நேரெதிரான ஹதீஸுகளை நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். இது எத்துணை வியப்பான விசயமாக உள்ளது".

(தூர்யாக்குல் குலூப் – ரூஹானி கஸாயின் தொகுதி 15, பக்கம் 159)

ஆகவே இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கையாகும். மேலும் திருக்குர்ஆன் ஹதீஸுக்கு ஏற்ப இது உள்ளது. மேலும் நாங்கள் முரசு கொட்டி பகிரங்கமாக அறிவிப்பது என்னவென்றால், இவர்கள் ஜிஹாது ஜிஹாது என்று கூறித் திரிகிறார்கள். இதற்கு பின்னால் தீவிர வாதத்தை தவிர வேறொன்றும் இல்லை. இது ஜிஹாது அல்ல. மேலும் இஸ்லாமிய போதனைக்கு முற்றிலும் மாற்றமானது என்று நாங்கள் கூறுகிறோம். முன்பும் கூறி வந்திருக்கிறோம்.

தற்போது நேற்றுதான் கராய்ச்சியில் ஒரு தற்கொலை தாக்குதல் நடந்தது. இவர்கள் தான் இஸ்லாத்தற்கு அவப்பெயர் ஏற்படுத்துகின்றனர். பிறகு இப்படிப்பட்ட தாக்குதலில் தமது நாட்டின் அப்பாவி மக்களின் உயிர்களையும் இவர்கள் எடுத்து விடுகிறார்கள். இவர்கள் தவறான செயல்களைச் செய்து இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையை மறுப்பவர்களாக இவர்களே ஆகி விடுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகுக்கு எட்ட வைக்கும் ஜிஹாதை இன்று அஹ்மதிகள் செய்து வருகின்றனர். இஸ்லாத்தின் தூதுச் செய்தியை இவ்வாறு உலகின் மூலை முடுக்கெல்லாம் எட்ட வைப்பவராக அவர்களில் யார் இருக்கிறார்கள்? ஆயினும் உங்களுடைய இந்த தீவிர வாதத்திலும், இஸ்லாத்தற்கு அவப்பெயர் உண்டாக்கும் இந்த ஜிஹாதிய முயற்சிகளிலும் அஹ்மதிகள் இதற்கு முன்பும் இணைந்தது கிடையாது. இனிமேலும் இணைய மாட்டார்கள். எவ்வாறாயினும் இது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அவப்பெயர் உண்டாக்குவதற்கான இழிவான முயற்சிகளாகும்; இவை ஏற்கெனவே நடைபெற்று வந்திருக்கின்றன.

## உண்மையான நோக்கங்கள் முன்னால் வருவதற்காக ஜமாஅத்திற்கு எதிரான பொய்க் கூற்றுகள், கீழ்த்தரமான சூழ்ச்சிகள் பற்றி முழுமையாக ஆய்வு செய்யப்படும்

நான் அந்த செய்தித்தாள்களுக்கும் கூறிக் கொள்கிறேன். சட்டம் ஆட்சி செய்யாத நாடு அல்ல இது என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளட்டும். பாகிஸ்தானைப் போன்று முல்லாக்களின் விருப்பம் இருந்தாலோ அல்லது அவர்களின் விருப்பம் இருந்தாலோ சட்டத்தின்படி செயல்படுத்தப்படும், நீதி வழங்கப்படாது என்பதல்ல. எவ்வாறாயினும் ஓரளவுக்கு இவர்களிடத்தில் நீதி உள்ளது. நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை ரத்தாகி விட்டது என்ற அஹ்மதிகளின் உறுதியூட்டலுக்குப் பிறகு இந்த கார்டூன்களை நாங்கள் வெளியிட்டோம் என டென்மார்க்கின் அதிகாரி கூறியதாக அவரை மேற்கோள் காட்டி இச்செய்தி தரப்பட்டுள்ளது. நாங்கள் இது சம்பந்தமான அனைத்து விபரங்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். மேலும்

ரிப்போர்ட்டுகளை வரவழைத்துள்ளோம். டென்மார்கினுடைய அரசும் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளது என அங்குள்ள அரசின் மீதும் இதன் மூலம் குற்றச்சாட்டு நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் அங்குள்ள பிரதமர் கூப்பாடு போட்டு கூறிவிட்டார். இது செய்தித்தாள்களின் வேலையாகும். நாங்கள் இதை விரும்பவில்லை. ஆனால் பத்திரிகை சுதந்திரத்தின் காரணமாக நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது என பலமுறை அறிக்கை வெளியிட்டுள்ளார். பத்திரிகை என்பதில் என்ன சுதந்திரம் என்பது ஒரு தனி விவகாரமாகும். ஆனால் எவ்வாறாயினும் அவர்கள் மறுக்கிறார்கள். செய்தித்தாளோ இல்லை; இல்லை. அரசும் இதில் இணைந்துள்ளது என கூறிவருகிறது. ஆகவே டென்மார்க்கின் அரசும் இச்செய்திக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை பெற்றுள்ளது. தற்போது முஸ்லிம் உலகில் டென்மார்க்கிற்கு எதிராக நெருப்பு மூட்டப்பட்டுள்ளது. இவர்களை மேற்கோள் காட்டி இந்த செய்தித்தாள் தனது பிதற்றல்களை செய்தியாக வெளியிட்டுள்ளது. இவ்வி–யமோ எரிகின்ற நெருப்பில் மேலும் எண்ணெய் ஊற்றுவதாகவும், ஊதி வருவதாகவும் உள்ளது. நாம் டென்மார்க்கின் மேல்மட்ட Security Agency (பாதுகாப்பு நிறுவனம்)உடன் நாம் தொடர்பு கொண்ட போது அவர் இதை மறுத்தவாறு இது போன்று ஒருபோதும் நடக்கவில்லை என்றும், இது குறித்த செய்தி எங்களிடம் கிடையாது என்றும் தெளிவாக கூறிவிட்டார். எவ்வாறாயினும் அவர்கள் இவ்வாறு கூறிவிட்டார்கள். நாம் மேலும் இது சம்பந்தமாக ஆராய்வோம். இதனால் விசயங்கள் மேலும் தெளிவாகிவிடும். அதனுடைய வீடியோ டேப் எங்களிடமுள்ளது என அவர்கள் செய்தித்தாளில் இச்செய்தியை எழுதியுள்ளனர். ஆனால் நாம் அவர்களை தொடர்பு கொண்டு கேட்ட போது வீடியோ டேப் இல்லை. ஆடியோ டேப் என கூறுகிறார்கள். நான் கூறியது போல் பொய்யிக்கு எந்தக் காலும் இருப்பதில்லை. இவர்கள் தங்களது வாக்குமூலத்தை மாற்றிக் கொண்டே இருப்பார்கள். மேலும் இதுவே பாகிஸ்தானிய செய்தித்தாள்களுக்கும் அல்லது பாகிஸ்தானிய தாக்கம் உள்ள இந்த செய்தித்தாளுக்கும் உள்ள நிலையாகும்.

ஆனால் எவ்வாறாயினும் விசயம் இத்தோடு இங்கு முடிவடைவதில்லை என நான் கூறிக் கொள்கிறேன். நம்மீது மிக

வெறுக்கத்தக்க அவதூறு சுமத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அஹ்மதிகளுக்கெதிராக சதி செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள சட்டம் நமக்கு எதுவரை அனுமதியளிக்கிறதோ அதன் எல்லை வரை இன்சா அல்லாஹ் நாம் இதை கொண்டு செல்வோம். இதன் காரணமாக முஸ்லிம்களுள், குறைந்தபட்சம் நல்லியல்பு கொண்டவர்களுக்கு இந்த பெயர் தாங்கி படித்த மக்களின் ஒழுக்கத்தின் தரம் தெரிய வரும். நான் ஏற்கனவே கூறியது போன்று நம்மீது எப்பொழுதும் வெறுக்கத்தக்க இந்த அவதூறுகள் கூறப்பட்டு வருகின்றன. ஆனால் நாம் எப்பொழுதும் பொறுமையுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த வழிகாட்டலை, இந்த போதனையை நம்முன்னால் வைத்து விடுகின்றோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“நம்முடைய ஜமாஅத்தும் இந்நிலையில் நேரான பாதையில் சென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக, உண்மையாக பின்பற்றி வந்தால், திருக்குர்ஆனின் தூய போதனையை நாம் நமது நடைமுறைச் சட்டமாக மாற்றினால், மேலும் இவ்விசயங்களை சொல்லினால் மட்டுமின்றி நமது செயலாலும் நிலையாலும் நாம் நிரூபித்துக் காட்டினால், அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் நம்முடன் இருக்கும் என்பதை நான் நன்றாக அறிவேன். மேலும் இவ்வழிமுறையை நாம் மேற்கொண்டால் முழு உலகமும் சேர்ந்து நம்மை அழிக்க நினைத்தாலும் நாம் அழிய மாட்டோம் என்பதை நிச்சயமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இறைவன் நம்முடன் இருப்பான்.” (இன்சா அல்லாஹ்)”. (அல்ஹகம், 24 செப்டம்பர், 1904, பக்கம் 4)

இந்த அறிவுரைகளின்படி எப்பொழுதும் செயல்படும் வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டே செல்வானாக. மேலும் எப்பொழுதும் அல்லாஹ் நம்முடன் இருப்பானாக. மேலும் இப்போது இந்த தீய இயல்புள்ளவர்களை படிப்பினைக்கான அடையாளமாக ஆக்குவானாக.

★ இன்றைய ஜிஹாது இயக்கங்கள் ஆகுமான காரணங்கள் இன்றியும், ஆகுமான அதிகாரங்களின்றியும் தமது போர் முழக்கங்களினாலும் செயல்களினாலும், மாற்று மதத்தினர்கள் மிகவும் கண்ணிக் குறைவாகவும் வெட்கமில்லாமலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த தன்மையின் மீது முட்டாள்தனமான தாக்குதல் செய்வதற்கு வாய்ப்பினை வழங்கி விட்டார்கள்.

★ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணையின் வடிவமாகத் திகழ்ந்தார்கள். அன்னாரின் நெஞ்சில் எத்தகைய உள்ளம் துடித்துக் கொண்டிருந்ததென்றால், அன்னார் நிறைவேற்றிய அந்த உயரிய தகுதியை விட அதிகமாக எந்தவொரு கருணை உள்ளமும் நிறைவேற்ற முடியாது.

★ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையிலிருந்து கருத்து சுதந்திரம், மார்க்க சுதந்திரம், மத நல்லிணக்கம் ஆகியவை பற்றிய மிகவும் அழகிய, உள்ளத்தை தொடும் சம்பவங்கள்.

**ஜுமுஆ குத்பா - 10.03.2006**

**இடம் : பைத்துல் ஃபுதூஹ், இங்கிலாந்து**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَ رَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

## சில முஸ்லிம் பிரிவுகளின் இஸ்லாத்திற்கு எதிரான செயல் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தை தாக்குவதற்கு ஆதராவகவும் ஒத்தாசையாகவும் ஆகி விடுகிறது

கடுமையும், கொலையும், அழிவையும் தவிர வேறு எதுவும் இல்லாத ஒரு மார்க்கத்தை தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்கள் என அன்னாரின் மீது முஸ்லிம் அல்லாதவர்கள் குற்றம் சாட்டுகின்றனர் நவூதுபில்லாஹ். மேலும் இஸ்லாத்தில் மார்க்க நல்லிணக்கம், சகிப்புத்தன்மை, சுதந்திரம் என்ற சிந்தனையே கிடையாது. இந்த போதனையின் தாக்கங்கள் தான் இன்று வரை முஸ்லிம்களின் இயல்பின் ஒரு பகுதியாகி விட்டது என்று குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக நான் முன்பும் பலமுறை கூறியிருக்கிறேன். துரதிஷ்டவசமாக முஸ்லிம்களிலேயே சில பிரிவினர், கூட்டத்தினர் இந்த கருத்தை உருவாக்குவதிலும் நிலைநாட்டுவதிலும் ஒத்துழைக்கின்றனர். மேலும் துரதிஷ்டவசமாக முஸ்லிம்களின் இந்தக் கொள்கையும் செயலும் முஸ்லிம் அல்லாத உலகத்தில் – குறிப்பாக மேற்கத்திய உலகில் நமது அன்பிற்குரிய எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி வீணான, முட்டாள்தனமான, நாகரிகமற்ற, அசுத்தமான கருத்துகளை வெளியிடுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது. சில பிரிவினர் மற்றும் கூட்டத்தாரின் செயல் இஸ்லாமிய போதனைக்கும், நல்லொழுக்க நெறிமுறைகளுக்கும் முற்றிலும் மாற்றமாக உள்ளதை நாம் ஏற்கனவே அறிவோம். இஸ்லாத்தின் போதனை எப்படிப்பட்ட அழகிய போதனை என்றால் காழ்ப்புணர்ச்சியிலிருந்து தூய்மையாக இருக்கின்ற

ஒவ்வொருவரும் இதன் அழகிலும், நேர்த்தியிலும் கவரப்படாமல் இருக்க மாட்டார்.

## முஸ்லிம் அல்லாதவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வது பற்றி இஸ்லாத்தின் போதனை

திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் இஸ்லாத்தின் இந்த அழகிய போதனை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதில் முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல், அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல், அவர்களுடன் நீதியுடன் நடந்து கொள்ளுதல், அவர்களின் மார்க்கத்தின் மீது எவ்வித பலவந்தமும் செய்யாதிருத்தல், மார்க்க விசயத்தில் எந்தவிதமான கடுமையும் காட்டாதிருத்தல் ஆகிய பல கட்டளைகள் முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி முஸ்லிமல்லாதவர்களுக்காக உள்ளன. ஆயினும் சில குறிப்பிட்ட சூழ்நிலையில் போர் செய்வதற்கும் அனுமதி இருக்கிறது. ஆனால் அது எதிரிகள் முதலில் உங்களிடம் போர் செய்யத் துவங்கினால் தான். உடன்படிக்கையை மீறினால் தான். நீதியை கொலை செய்தால் தான். அநீதியில் எல்லை தாண்டினாலோ அல்லது அநியாயம் செய்தால் தான். ஆனால் அப்போதும் எந்தவொரு நாட்டின் ஒரு கூட்டத்திற்கோ அல்லது ஜமாஅத்திற்கோ போர் செய்ய முடிவெடுப்பதற்கு உரிமையில்லை. மாறாக, என்ன செய்ய வேண்டும் எனவும் இந்த கொடுமையை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது என்றும் தீர்மானிக்க வேண்டிய உரிமை அரசாங்கத்திற்குத் தான் இருக்கிறது. அவ்வாறில்லாமல் ஒவ்வொரு ஜிஹாதிய இயக்கங்களும் எழுந்து இந்த வேலையை செய்ய ஆரம்பித்து விடக்கூடாது.

## மக்கத்து நிராகரிப்பவர்கள், இஸ்லாத்தின் எதிரிகளின் வரம்பு மீறல்கள், கொடுமையிழைத்தலுக்கு எதிரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்திலும், போருக்கான குறிப்பிட்ட சூழ்நிலைகள் (எதிரிகளால்) உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றால் கட்டாயத்திற்குள்ளாகி முஸ்லிம்கள் பதிலுக்குப் போர்கள் செய்ய வேண்டிதாயிற்று. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று, இன்று

ஜிஹாதிய இயக்கங்கள் எவ்வித தகுந்த காரணங்களின்றி, தகுந்த அதிகாரம் இல்லாமல் தமது போர்க்கோசங்களாலும் தமது செயல்களாலும் மாற்று மதத்தினருக்கு ஆட்சேபணை செய்ய சந்தர்ப்பம் கொடுத்து விட்டார்கள். அதனால் அவர்களுக்கு எந்த அளவு தைரியம் வந்து விட்டது என்றால் அவர்கள் மிகவும் பிடிவாதத்துடன் வெட்கமில்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தத்தன்மையின் மீது முட்டாள்தனமான தாக்குதல்களை செய்தார்கள்; செய்து வருகின்றார்கள். ஆனால் கருணையின் உருவமாகத் திழந்த மனிதத்துவத்திற்கு நன்மைகள் செய்த, மனித உரிமைகளைப் பாதுகாத்த உத்தமரின் நிலை எப்படி இருந்ததென்றால் அவர்கள் போரின் நிலைமையிலும் எதிரிகளுக்கு வசதிகளைத் தேடிந்தரும் எந்தவொரு சந்தர்ப்த்தையும் கைநழுவ விட்டதில்லை. அன்னார் கருணையின் வடிவமாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கு அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் சாட்சியாக இருக்கின்றன. கருணைக்காக அவர்களது உள்ளம் துடித்தது போல வேறு எவருடைய உள்ளமும் துடித்ததில்லை. பாதுகாப்பான சூழ்நிலையிலும், போரிலும், வீட்டிலும், வெளியிலுல், அன்றாட வாழ்க்கை விவகாரங்களிலும் மற்ற மார்க்கத்தினர்களுடன் செய்த உடன்படிக்கைகளிலும் அவர்கள் கருத்து சுதந்திரம், மார்க்க சுதந்திரம், மார்க்க நல்லிணக்கம் ஆகியவற்றின் உயர் தகுதியை நிலைநாட்டுவதற்கான முன்மாதிரியை நிலைநாட்டிச் சென்றுள்ளார்கள். பிறகு மகத்தான வெற்றிவாகை சூடியவாறு மக்காவில் நுழையும் போது வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயத்தை மன்னித்து கருணை காட்டியது மட்டுமல்லாமல் அவர்களுக்கு முழு மார்க்க சுதந்திரத்தையும் வழங்கினார்கள். மேலும் (சூரா அல் பக்கரா வசனம் 257) لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ மார்க்கத்தில் பலவந்தமில்லை என்ற திருக்குர்ஆனின் கட்டளையின் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். மார்க்கம் என்பது உங்கள் உள்ளம் சம்பந்தப்பட்ட விவகாரமாகும். நீங்கள் உண்மையான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு, உலகத்தையும் மறுமையையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களின் மன்னிப்பிற்கான வழிவகையைத் தேடிக் கொள்ளுங்கள் என்பது தான் என் ஆசை. ஆனால் அதிலும் எந்த பலவந்தமும் இல்லை. இவ்வாறு மார்க்க சுதந்திரம்,

மதநல்லிணக்கம் தொடர்பான எண்ணற்ற உதாரணங்களால் அன்னாரின் வாழ்க்கை நிறைந்து காணப்படுகின்றது. அவற்றில் சிலவற்றை நான் கூறுகிறேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நுபுவ்வத் வாதத்திற்குப் பிறகு மக்காவில் வாழ்ந்த 13 ஆண்டுகால வாழ்க்கை எவ்வளவு கடுமையாகவும், துன்பத்திற்குரியதாகவும் இருந்தது என்பதை யார் அறியமாட்டார்? அன்னாரும் அவர்களுடைய தோழர்களும் எவ்வளவு துக்கங்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டார்கள். நண்பகலில் பாலைவனத்திலுள்ள சுடுமணலில் படுக்க வைக்கப்பட்டார்கள். நெஞ்சின் மீது கொதிக்கின்ற பாராங்கல் வைக்கப்பட்டது. சவுக்கால அடிக்கப்பட்டார்கள். பெண்களின் இரு கால்களையும் இரண்டாகக் கிழித்து அவர்கள் கொல்லப்பட்டனர். சஹீதாக்கப்பட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. சில நேரத்தில் ஒட்டகத்தின் குடல் அன்னார் சஜ்தாவில் இருக்கும் போது இடுப்பின் மீது வைக்கப்பட்டது. அதன் சுமையின் காரணமாக அவர்களால் எழ முடியாமல் இருந்தது. தாயிஃப் பயணத்தில் சிறுவர்கள் அன்னாரின் மீது கல்மாரி பொழிந்தனர். மிகவும் கடுமையான, மோசமான வார்த்தைகளை கூறி வந்தனர். நிராகரிப்பவர்களின் தலைவர்கள் சிறுவர்களை தூண்டிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவு காயமுற்றார்கள் என்றால் தலை முதல் பாதம் வரை இரத்தமாக இருந்தது. மேலிருந்து வடிந்து கொண்டிருந்த இரத்தம் காலணிக்கும் வந்துவிட்டது. அபூதாலிப் கணவாயில் நடந்த சம்பவம் என்னவென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அவர்களின் குடும்பத்தாரும், அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டவர்களும் பல ஆண்டுகளாக முற்றுகையிடப்பட்டனர். உண்பதற்கு, குடிப்பதற்கு எதுவும் இருந்ததில்லை. குழந்தைகளும் பசி, தாகத்தால் துடித்தனர். இந்த சூழ்நிலையில் ஒரு நபித்தோழர் இருட்டில் தரையில் மிருதுவான ஒரு பொருளை உணர்ந்தார். சாப்பிடக்கூடிய ஒரு பொருள் என நினைத்து அவர் அதை வாயில் போட்டு விட்டார். அந்த அளவுக்கு அவர்களுக்கு பசி கடுமையாக இருந்தது. இந்த அளவுக்கு மோசமான நிலை ஏற்பட்ட போது இதனால் கட்டாயத்திற்குள்ளாகி மக்காவை விட்டு இடம் பெயர்ந்து செல்ல நேர்ந்தது. ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு

வந்தனர். எதிரிகள் அங்கேயும் விட்டு வைக்கவில்லை. அங்கேயும் வந்து அவர்களை தாக்கினர். மதீனாவில் வாழ்ந்து வந்த யூதர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட முயற்சி செய்தனர். நான் சுருக்கமாகக் கூறிய இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்த அளவுக்கு கொடுமை செய்த பிறகு போர் செய்யும் நிலை ஏற்பட்டு விட்டால் அநியாயத்திற்குள்ளானவர்களுக்கும் பதிலடி கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்து விட்டால் அந்த அநியாயத்திற்கு பதிலடியும் அநியாயத்தின் மூலமாகக் கொடுக்கத்தான் அவர்கள் முயற்சி செய்வார்கள். போரில் எல்லாம் ஆகுமானது என்று கூறுகிறார்கள். ஆனால் நமது நபி கரீம் (ஸல்) அவர்கள் போரிலும் மென்மையான உள்ளத்தையும், கருணையின் உயர்ந்த தகுதியையும் நிலைநாட்டியிருக்கின்றார்கள். மக்காவிலிருந்து வந்து கொஞ்ச காலம் தான் ஆனது. எல்லா காயங்களும் இன்னும் (ஆறாமல்) புதிதாகவே இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, தனக்கு ஏற்பட்ட துன்பங்களை விட தம் தேழர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றிய உணர்வு அதிகமாக இருந்தது. ஆயினும், அவர்கள் இஸ்லாமிய போதனையையும், சட்டங்களையும் வரைமுறைகளையும் முறிக்கவில்லை. அன்னாரின் இயல்பு மற்றும் போதனைகளின் ஒரு பகுதியாக இருந்த நல்லொழுக்கத்தை அவர்கள் கைவிடவில்லை. பாருங்கள். இன்று சில மேற்கத்திய நாடுகள் யாரிடம் போர் செய்கின்றார்களோ அவர்களுடன் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்! அதற்கு மாற்றமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பாருங்கள். வரலாற்றில் ரிவாயத்தில் அதுபற்றிய குறிப்பு இவ்வாறு காணப்படுகிறது.

பத்ர் போரின் போது இஸ்லாமியப் படை எங்கு கூடாரமிட்டு இருந்ததோ அது ஒரு நல்ல இடமாக இருக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் ஹூபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், கூடாரமிடுவதற்காக தாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் இந்த இடம் இறையறிவிப்பின் அடிப்படையில் தேர்ந்தெடுத்ததா? தாங்களிடம் அல்லாஹ் கூறினானா? அல்லது தாங்கள் இந்த இடத்தை விரும்பினீர்களா? என்று கேட்டார். இராணுவ திட்டத்தின் அடிப்படையில் இது நல்ல இடம் என்று தாங்கள் கருதுகிறீர்களா? என்று கேட்டார். அதற்கு

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், போரின் உத்தியை அடிப்படையாகக் கொண்டு இது சிறந்த இடம், உயரமாக உள்ளது என்று நானாகத் தேர்ந்தெடுத்தது தான் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள், அப்படியானால் இது பொருத்தமான இடமல்ல. நீங்கள் இங்கிருந்து மக்களை அழைத்துச் சென்று நீரூற்றை கைப்பற்றிக் கொள்ளுங்கள். அங்கு ஓர் நீர் தடாகத்தை தயார் செய்து விட்டு போர் செய்வோம் என்று கூறினார். ஏனெனில் இந்நிலையில் நாம் தண்ணீர் குடிக்கலாம்; எதிரிகளுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்காது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சரி. உமது கருத்தை ஏற்றுக் கொள்கிறோம். நாம் அங்கு செல்வோம் என்றார்கள். அதன்படி நபித்தோழர்கள் அங்கு சென்று கூடாரமிட்டனர். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு குரைஷிகளைச் சேர்ந்த சிலர் அந்த நீர்த்தடாகத்தில் நீர் அருந்துவதற்காக வந்தனர். நபித்தோழர்கள் அவர்களைத் தடுக்க முயற்சி செய்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தடுக்காதீர்கள். அவர்களை தண்ணீர் எடுக்க விடுங்கள் என்று கூறினார்கள்''.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லிஇப்னி ஹிசாம், தொகுதி 2, பக்கம் 284, கஸ்வா பத்ருல் குப்ரா மஷ்வரத்துல் ஹுபாப் அலர்ரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

## இஸ்லாம் வாளின் கடுமையினால் அல்ல. மாறாக, அழகிய நல்லொழுக்கம், இஸ்லாத்திலுள்ள மன, மார்க்க சுதந்திரம் ஆகிய போதனையினால் பரவியது

இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த முன்மாதிரி! எதிரிகள் கொஞ்ச காலத்திற்கு முன்பு முஸ்லிம்களின் குழந்தைகளுக்கு கூட உணவையும் தண்ணீரையும் தடுத்து வைத்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் அந்த நீரூற்று இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை மன்னித்தவாறு தண்ணீருக்காக நீரூற்று வரை வந்த எதிரிகளின் படைவீரர்களை தண்ணீர் எடுப்பதிலிருந்து தடுக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு தண்ணீர் அருந்த விடாமல் தடுப்பது இஸ்லாத்தின் பார்வையில் மிகவும் ஒழுக்கத்திற்கு புறம்பான செயலாகும்.

இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் பரப்பப்பட்டது என்பது தான் இஸ்லாத்தின் மீது செய்யும் மிகப்பெரிய ஆட்சேபணையாகும். தண்ணீர் எடுக்க வந்த அந்த மக்களிடம் பலவந்தம் காட்டியிருக்கலாம். தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறியிருக்கலாம். இவ்வாறு காஃபிர்கள் பல போர்களில் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு பலவந்தம் செய்யவில்லை. அப்போது முஸ்லிம்களிடம் (எதிரிகளை எதிர்ப்பதற்கு) முழுமையான ஆற்றல் இருந்ததில்லை. பலவீனமானவர்களாக இருந்தார்கள். எனவே போரிலிருந்து தப்பிப்பதற்கான இந்த நன்னை செய்ய முயற்சி செய்யப்பட்டுள்ளது என்று இங்கு யாராவது கூறலாம். ஆனால் அது தவறாகும். மக்கத்து காஃபிர்கள் முஸ்லிம்களின் இரத்தத்தைக் குடிக்கத் துடிக்கின்றனர் என்பதும் முஸ்லிம்களின் முகத்தை பார்த்தலே அவர்களின் கண்கள் சிவந்து விடும் என்பதும் முஸ்லிம்களின் ஒவ்வொரு குழந்தைக்கும் தெரிந்திருந்தது. எனவே அவர்களை மகிழ்விப்பதற்காக இது செய்யப்படவில்லை; அதுவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை மகிழ்விப்பதற்காக ஒரு செயலைச் செய்வார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர்கள் முழுக்க முழுக்க அருட்கொடையின் உருவமாகத் திகழ்ந்ததன் காரணமாகவும், மனிதர்களின் மதிப்பை கவனத்திற் கொண்டதன் காரணமாகவும் இவ்வாறு பரிவுடன் நடந்து கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் தான் இந்த மதிப்பை அடையாளம் கண்டு கொள்வது குறித்து போதிக்க வந்தார்கள்.

அடுத்து இஸ்லாத்தின் எதிரியின் சம்பவத்தைப் பாருங்கள். அவரை கொல்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தது மட்டுமல்லாமல் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்து கொண்டு அவர் தனது மார்க்கத்தில் நிலைபெற்றிருப்பதற்கு அனுமதி வழங்கினார்கள். அந்த சம்பவம் இவ்வாறு வருகிறது.

அபூஜஹ்லின் மகன் இக்ரிமா தன் தந்தையைப் போன்று வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் செய்து வந்தான். மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்கள் அனைவரையும் மன்னித்து விட்டதாகவும், பாதுகாப்பு அளிப்பதாகவும் அறிவித்த போதிலும் இக்ரிமா ஒரு படைப் பிரிவினை தாக்கினான். மேலும், புனிதத்தலத்தில் இரத்தம் சிந்துவதற்கு காரணமானான். அவர் தனது போர் செய்த குற்றத்திற்காகத்தான் கொலைத் தண்டனைக்குரியவராக அறிவிக்கப்பட்டார். ஆனால் (மக்காவின் வெற்றியாகிய) அப்போது முஸ்லிம்களுக்கு முன்னால் அப்போது எவராலும் நிற்க முடியவில்லை. எனவே மக்கா வெற்றிக்குப் பிறகு தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர் யமனை நோக்கி ஓடினார். அவருடைய மனைவி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தன் கணவருக்காக மன்னிப்பை வேண்டினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் பரிவுகாட்டியவாறு இக்ரிமாவை மன்னித்து விட்டார்கள். அவர் தனது கணவரை அழைத்து வரச் சென்ற போது இக்ரிமாவுக்கு அந்த மன்னிப்பின் மீது நம்பிக்கையே வரவில்லை. நான் இவ்வளவு கொடுமைகள் செய்திருக்கின்றேன். இத்தனை முஸ்லிம்களை கொன்று விட்டேன். கடைசி நாள் வரை நான் போர் செய்து கொண்டிருந்தேன். என்னை எப்படி மன்னித்திருப்பார்கள் என அவர் எண்ணினார். எப்படியிருந்த போதிலும் இக்ரிமாவின் மனைவி அவருக்கு நம்பிக்கையூட்டி அவரை திரும்ப அழைத்து வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவைக்கு வந்து தன்னை மன்னித்தது உண்மைதானா என்று விசாரிக்க விரும்பினார். இக்ரிமான திரும்பி வந்ததனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவருடன் வியக்கத்தக்க முறையில் கருணையுடன் நன்றாக நடந்து கொண்டார்கள். இக்ரிமா எதிரி சமுதாயத்தின் தலைவர். எனவே இவருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்ற முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் கண்ணியத்திற்காக எழுந்து நின்றார்கள். இக்ரிமா கேட்டதற்கு, ஆம். நான் உண்மையிலேயே உம்மை மன்னித்து விட்டேன் என்று கூறினார்கள்.

(முஅத்தா இமாம் மாலிக் – கிதாபுன் நிக்காஹ் – நிகாஹுல் முஷ்ரிகி இஸா அஸ்லமத் ஸவ்ஜதுஹு கப்லஹு)

நான் என் மார்க்கத்தையே கடைபிடித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் தாங்கள் என்னை மன்னிப்பீர்களா? என்று இக்ரிமா மீண்டும் கேட்டார். அதாவது நான் முஸ்லிமாக மாறவில்லை. இந்த ஷிர்க்கின்

நிலையில் இருக்கும் போதும் நீங்கள் என்னை மன்னிப்பீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். அப்போது இஸ்லாத்திற்காக இக்ரிமாவின் மனம் திறந்தது. தன்னையுமறியாமல், முஹம்மதே! நிச்சயமாக தாங்கள் எல்லையற்ற சகிப்புத்தன்மை கொண்டவரும், கண்ணியத்திற்குரியவரும், உறவுகளைப் பேணுபவரும் ஆவீர்கள் என்று கூறினார். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கருணையின் இந்த அற்புதத்தையும் கண்டு இக்ரிமா முஸ்லிமாகி விட்டார்.

(அஸ்ஸீரதுல் ஹல்பியா – தொகுதி 3, பக்கம் 109, ஸிக்ரு மகாஸிய்யத்தி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஃபத்ஹு மக்கா சர்ஃபுஹல்லாஹுத்தஆலா எனும் பாடம் பைரூத் வெளியீடு)

இவ்வாறு நல்லொழுக்கத்தினாலும், கருத்து சுதந்திரம் மற்றும் மார்க்க சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்த அனுமதி வழங்கியதனாலும் தான் இஸ்லாம் பரவியது. இந்த நல்லொழுக்கம் மார்க்க சுதந்திரம் என்ற அம்புதான் ஒரு வினாடியில் இக்ரிமாக போன்றவர்களையும் வீழ்த்தி விட்டது. கைதிகளுக்கும் அடிமைகளுக்கும் அவர்கள் எந்த மார்க்கத்தை விரும்புகிறார்களோ மேற்கொள்ளட்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். ஆனால் இஸ்லாத்தை ஏன் பிரச்சாரம் செய்தார்கள் என்றால் இஸ்லாத்தின் போதனையைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைப்பீராக. ஏனெனில் அவர்களுக்கு அது தெரியாது என்று அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். இஸ்லாம் உங்களுக்கு இறை நெருக்கத்தைத் தேடித்தரும் என்ற ஆசையினால் தான் உங்களுக்குக் கூறுகிறோம். உங்கள்மீதுள்ள அனுதாபத்தினால் நாங்கள் இஸ்லாத்தை உங்களுக்கு போதிக்கின்றோம்.

ஒரு கைதியைப் பற்றி இவ்வாறு சம்பவம் வருகிறது. ஹஸ்ரத் சயீத் பின் அபீ ஸயீத் அறிவிக்கின்றார்கள். அவர் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நஜத்தை நோக்கி ஒரு குழுவை அனுப்பினார்கள். அவர்கள் பனூ ஹனீஃபாவைச் சேர்ந்த ஒருவரை கைதியாக்கிக் கொண்டு வந்தனர். அவர் பெயர் ஸுமாமா பின் அஸால் ஆகும். நபித்தோழர்கள் அந்தக்

கைதியை மஸ்ஜிதே நபவியின் தூணில் கட்டி விட்டனர். ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் அவரிடம் வந்து ஸுமாமாவே! உம்மிடம் என்ன காரணம் இருக்கிறது? அல்லது உம்முடன் எப்படி நடந்து கொள்ளப்படும் என்று நினைக்கிறீர் எனக் கேட்டார்கள். அதற்கு அவர், நான் நல்லதையே நினைக்கிறேன். தாங்கள் என்னை கொன்று விட்டால் இரத்தம் சிந்ததக்கூடிய (கொலை செய்யக்கூடிய) ஒருவரை கொலை செய்வீர்கள். தாங்கள் எனக்கு நன்மை செய்தால், நன்மைக்கு மதிப்பளிக்கும் ஒருவருக்கு தாங்கள் நன்மை செய்வீர்கள். மேலும் தாங்கள் செல்வத்தை விரும்புகின்றீர்கள் என்றால் எவ்வளவு விரும்புகிறீர்களோ எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். அவருக்காக அவருடைய சமுதாயத்தின் சார்பாக அவ்வளவு செல்வம் கொடுக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. மறுநாளும் வந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் வந்து, உமது நாட்டம் என்ன? என்று ஸுமாமாவிடம் கேட்டார்கள். அதற்கு ஸுமாமா, நான் நேற்றே தங்களிடம் கூறி விட்டேன். தாங்கள் நன்மை செய்தால், நன்மைக்கு மதிப்பளிக்கும் ஒருவருக்கு தாங்கள் நன்மை செய்வீர்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை அங்கேயே விட்டு விட்டார்கள். பிறகு மூன்றாவது நாள் வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் சென்று, ஸுமாமாவே! உமது நாட்டம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நான் கூறவிருந்ததைக் கூறிவிட்டேன் என்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவரை விடுவித்து விடுங்கள் என்றார்கள். ஸுமாமா விடுதலை செய்யப்பட்டார். அப்போது அவர் மஸ்ஜித் நபவியின் அருகில் இருந்த பேரீத்தம் பழ தோட்டத்திற்கு சென்றார். குளித்தார். பள்ளிவாயிலில் நுழைந்து –ஹாதத் கலிமாவை ஓதினார். மேலும் முஹம்மதே! (ஸல்). இறைவன் மீது ஆணையாக! உலகத்திலேயே எனக்கு மிகவும் வெறுக்கத்தக்க முகம் உங்களுடைய முகமாக இருந்தது. ஆனால் இப்போது எனக்கு எல்லாவற்றையும் விட மிகவும் பிடித்தமான முகம் உங்களுடைய முகம் தான். மேலும் இறைவன் மீது ஆணையாக! உலகத்தில் நான் மிகவும் வெறுத்த மார்க்கம் உங்களுடைய மார்க்கமாகவே இருந்தது. ஆனால் இன்று எனக்கு மிகவும் பிடித்தமான மார்க்கம் தாங்கள் கொண்டு வந்த மார்க்கமாகும். இறைவன் மீது ஆணையாக! எல்லா நகரங்களையும்விட மிகவும் வெறுப்பிற்குரியதாக

இருந்தது உங்கள் நகரம் தான். ஆனால் இப்போது இதுவே எனக்கு மிகவும் பிடித்தமான நகரமாகும் என்றார். நான் உம்ரா செய்ய விரும்பிய போது தங்களின் குதிரை வீரர்கள் என்னைப் பிடித்து விட்டனர். அதுபற்றி தாங்கள் என்ன கட்டளையிடுகின்றீர்கள் எனக் கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் முஸ்லிமாக மாறியதற்கு நற்செய்திகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து உம்ரா செய்யவும் அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக என்று துஆ செய்தார்கள். அவர் மக்கா சென்ற போது ஒருவர் அவரைப் பார்த்து, இவர் சாபியாகி விட்டாரா? என்றார். அதற்கு அவர், இல்லை. நான் சாபியாகவில்லை. நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன் என்றார். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனுமதி தராத வரை இனி யமாமாவிலிருந்து ஒரு தானியம் கூட உங்களிடம் வராது என்று கூறினார்.

(புகாரி – கிதாபுல் மகாஸி – வஃபது பனீ ஹனீஃபா எனும் பாடம்,
மேலும் ஸுமாமா பின் அஸால் அவர்களின் ஹதீஸ்)

இன்னொரு ரிவாயத்தின்படி, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் உம்ரா செய்ய முயன்றார். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிந்த மக்கத்து காஃபிர்கள் அவரை அடிக்க முயற்சி செய்தனர் அல்லது அடித்தனர். அப்போது அவர் இனி யமாமாவிலிருந்து ஒரு தானியம் கூட உங்களிடம் வராது என்று கூறினார். அதுவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சார்பாக அனுமதி வராத வரை உங்களுக்கு வராது என்று கூறினார். அதன்படி அவர் தனது சமுதாயத்திடம் சென்று பேசினார். அங்கிருந்து தானியம் வருவது நின்றுவிட்டது. (மக்களின்) நிலை மிகவும் மோசமாகி விட்டது. அப்போது அபூஸுஃப்யான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று மக்கள் இவ்வாறு பசியால் மரணிக்கின்றார்கள். உங்கள் சமுதாயத்தின் மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள் என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தானியம் கிடைக்க வேண்டுமென்றால் முஸ்லிமாக மாறுங்கள் என்று கூறவில்லை. மாறாக, இந்தத் தடையை நீக்கி விடுங்கள். இது அநியாயமாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுமாமாவுக்கு உடனே செய்தி அறிவித்தார்கள். மேலும், குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு,

நோயாளிகளுக்கு, முதியவர்களுக்கு உணவு தேவைப்படுகிறது. அது அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றார்கள். (அஸ்ஸீரத்துந் நபவிய்யா லிஇப்னி ஹிசாம் அஸிர்ரு ஸுமாமதிப்னி அஸாலில் ஹனஃபிய்யி வ இஸ்லாமிஹீ. குரூஜஹு இலா மக்கத்த வகிஸ்ஸதிஹீ மஅ குரைஷ்)

ஆக, இந்தக் கைதி ஸுமாமாவிடமும், நீர் இப்போது எங்களிடம் சிக்கிக் கொண்டீர். இனி நீர் முஸ்லிமாகிவிடும் என்று கூறவில்லை. மூன்று நாட்களாக அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்பட்டது. பிறகு நல்ல முறையில் நடந்து கொள்வதிலும் உன்னத தகுதியை நிலைநாட்டியவாறு அவரை விடுதலை செய்து விட்டார்கள். பிறகு பாருங்கள். ஹஸ்ரத் ஸுமாமா அவர்களும் அகப்பார்வை கொண்டவராக விளங்கினார்கள். அந்த விடுதலையை பெற்றதுமே ஹஸ்ரத் நபி (ஸல) அவர்களின் அடிமைத்தனத்தில் தன்னை பிணைத்துக் கொள்ள தயாராகி விட்டார்கள். ஏனெனில் அவர்களின் அடிமைத்தனத்தில் தான் தனது இம்மை மறுமையின் நன்மை இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்.

பிறகு யூத அடிமையை, நீர் அடிமையாவாய். என் கட்டுப்பாட்டில் இருக்கிறாய். எனவே நான் சொன்னதைச் செய் என்று கட்டாயப்படுத்த –வில்லை. அந்த யூத அடிமை நோய்வாய்ப்பட்ட போது அவனுடைய நிலை மிக மோசமாக இருப்பதைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த யூத சிறுவனின் முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்ற கவலை ஏற்பட்டது. இறைவனின் கடைசி சரீஅத்தை ஏற்காத நிலையில் அச்சிறுவன் உலகத்தை விட்டுச் சென்று விடக்கூடாது. மாறாக அதை ஏற்றுக் கொண்ட நிலையில் அவன் உலகத்தை விட்டுச் சென்று விட வேண்டும்; இதன் மூலமாக இறைவன் மன்னித்தருள்வதற்கான வழிவகைகள் ஏற்பட வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. எனவே, நலம் விசாரிக்க சென்ற போது மிகவும் அன்போடு அச்சிறுவனை நோக்கி, நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒரு பணியாளர் யூத சிறுவன் நோயுற்றான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனை நலம் விசாரிக்கச் சென்றார்கள். அவனுடைய

தலையணை பக்கம் அமர்ந்தார்கள். அவனிடம் நீ இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்று கூறினார்கள். இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. அவன் தனது பெரியோர்களைப் பார்த்தான். எவ்வாறாயினும் அனுமதி கிடைத்ததும் அல்லது தனக்கே தோன்றியதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டான். (ஸஹீஹ் புகாரி – கிதாபுல் ஜனாயிஸ் எனும் பாடம் இஸா அஸ்லமஸ் ஸபிய்யு ஃபமாத...... ஹதீஸ் எண் : 1356)

ஆக இந்தச் சிறுவன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவன் மீது காட்டிய பரிவினால் ஆகும். அன்னாரது அடிமைத்தனத்தில் அச்சிறுவனுக்கு கிடைத்த சுதந்திரத்தின் விளைவினால் ஆகும். எனவே தான் அவன், நிச்சயமாக இது உண்மையான மார்க்கமாகும். இதை ஏற்றுக் கொள்வதில் கண்டிப்பாக நமக்கு லாபம் தான் என்பதை உணர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஏனெனில் கருணையின் வடிவாகத் திகழும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எனக்குத் தீயதை நாடமாட்டார்கள். அவர்கள் நிச்சயமாக உண்மையாளராவார்கள். அவர்கள் எப்பொழுதும் மற்றவர்களை நல்ல விசயங்களின் பக்கம், நல்ல செயல்களின் பக்கம் அழைப்பவர்களாவார்கள். மேலும் இதனையே வலியுறுத்தி வந்தார்கள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். ஆக இந்த சுதந்திரத்தைத் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நிலைநாட்டினார்கள். உலகத்தில் இதற்கு வேறு எந்த உதாரணத்தையும் ஒருபோதும் காணவியலாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதத்திற்கு முன்னும் மார்க்க சுதந்திரம், கருத்து சுதந்திரம், வாழ்க்கை சுதந்திரத்தை விரும்பினார்கள். அடிமைத்தனத்தை வெறுத்தார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை திருமணம் செய்து கொண்ட பிறகு தமது எல்லா செல்வங்களையும், அடிமைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், கதீஜாவிடம் நீங்கள் இவை எல்லாவற்றையும் கொடுக்கின்றீர்கள் என்றால் அவை எனது அதிகாரத்தின் கீழ் வந்துவிடும். பிறகு நான் என்ன விரும்புகின்றேனோ அதை செய்வேன் என்றார்கள். அதற்காகத்தான் கொடுக்கிறேன் என்று கதீஜா (ரலி) கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு நான் எல்லா

அடிமைகளையும் விடுதலை செய்து விடுகிவேன். அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் தங்களுக்குக் கொடுத்து விட்டேன். இனி நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். அதன் மீது எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. அது உங்கள் செல்வமாகும் எனக் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கதீஜாவின் எல்லா அடிமைகளையும் அழைத்து இன்றிலிருந்து உங்கள் அனைவருக்கும் விடுதலை எனக் கூறினார்கள். மேலும் செல்வங்களின் பெரும் பகுதியையும் ஏழைகளுக்கு விநியோகம் செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விடுதலை செய்த அடிமைகளில் ஒருவர் ஸய்த் என்பவரும் ஆவார். அவர் மற்ற அடிமைகளை விட சாதுரியமானவராகவும் புத்தி கூர்மை உள்ளவராகவும் இருந்தார் எனத் தெரிகிறது. அவர், எனக்கு இப்பொழுது விடுதலை கிடைத்து விட்டது. அடிமைத்தனம் என்ற முத்திரை இப்பொழுது நீங்கி விட்டது. ஆனால் நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எப்பொழுதும் அடிமையாக வாழ்வதே எனக்கு சிறப்பு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். எனவே ஸய்த் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், தாங்கள் என்னை விடுதலை செய்து விட்டீர்கள். ஆனால் நான் விடுதலையாக விரும்பவில்லை. நான் அடிமையாக உங்களுடனேயே இருப்பேன் என்றார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடனேயே இருந்தார். அன்பு மற்றும் நேசத்தின் இந்த உறவு இரண்டு புறமிருந்தும் வளர்ந்து கொண்டே சென்றது. உண்மையில் ஸய்த் என்பவர் செல்வம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார். செல்வச் செழிப்பான வீட்டில் பிறந்திருந்தார். வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவரைக் கடத்திச் சென்று அடிமையாக விற்று விட்டனர். அவர் தொடர்ச்சியாக விற்கப்பட்டு இங்கு வந்தடைந்தார். அவருடைய பெற்றோர்களும், உறவினர்களும், அன்பர்களும் அவரை தேடி அலைந்தனர். இறுதியில் இவர் மக்காவில் இருப்பதை அறிந்து மக்காவுக்கு வந்தனர். ஹஸ்ரத் ஸய்த் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இருப்பதை அறிந்து அன்னாரது சபைக்கு வந்தனர். எங்கள் மகனை விடுதலை செய்து விடுங்கள். அதற்குப் பதிலாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். அவருடைய தாயார் மகனைக் காணாமல் அழுது கொண்டிருக்கிறாள். அவளுடைய நிலை

மோசமாக இருக்கிறது என்றனர். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் அவரை ஏற்கனவே விடுதலை செய்து விட்டேன். அவர் சுதந்திரமானவர் ஆவார். அவர் செல்ல விரும்புகிறார் என்றால் செல்லலாம். எனக்கு எவ்வித பணமும் தேவையில்லை என்று கூறினார்கள். வந்திருந்தவர்கள் ஸய்திடம், மகனே! எங்களுடன் வா என்றனர். அதற்கு மகன் சொன்னான்: நான் உங்களை சந்தித்து விட்டேன். அதுவே போதுமானது. சந்தர்ப்பம் கிடைத்தால் தாயையும் சந்திக்கலாம். ஆனால் இப்போது நான் உங்களுடன் வர இயலாது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அடிமையாகி விட்டேன். அன்னாரை விட்டு என்னால் இனி பிரிந்திருக்கவே முடியாது. தாய் தந்தையை விட அதிகமான நேசம் எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருக்கின்றது என்றார். ஸய்தின் தந்தையும், சிறிய தந்தையும் அழுத்தமாக கூறிப் பார்த்தனர். ஆனால் ஸய்த் செல்ல மறுத்து விட்டார். ஸய்தின் இந்த நேசத்தைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஸய்த் ஏற்கனவே விடுதலையாக்கப்பட்டு விட்டார். ஆனால் இன்றிலிருந்து அவர் என் மகன் ஆவார் என்று கூறினார்கள். இந்த நிலையைக் கண்ட ஸய்தின் தந்தையும் சிறிய தந்தையும் அங்கிருந்து தனது ஊருக்கு திரும்பி விட்டனர். பிறகு ஸய்த் நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டார்.

**(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் எனும் நூலிலிருந்து பக்கம் 112)**

நுபுவ்வத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுதந்திரம் பற்றிய உணர்வுகள் மேலும் பொலிவடைந்தன. அன்னாரின் இயல்பும் அவ்வாறே இருந்தது. அன்னாரின்மீது இறங்கிய –ரீஅத்திலும் இந்த கட்டளைதான் இருந்தது. அதாவது அடிமைகளுக்கு அவர்களுடைய உரிமைகளைக் கொடுங்கள். கொடுக்க முடியாவிட்டால் அவர்களை விடுதலை செய்து விடுங்கள்.

ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஒரு நபித்தோழர் தன் அடிமையை அடித்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். அதனால் அந்த நபித்தோழர் அடிமையை விடுதலை செய்து விட்டார். நான் அவரை விடுதலை செய்து விடுகிறேன் என்றார். நீர் விடுதலை செய்யாவிட்டால் நீர் அல்லாஹ்வின்

பிடியின்கீழ் வந்து விடுவீர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் – கிதாபுல் ஈமான், ஸுஹ்பதுல் மமாலீக் எனும் பாடம், ஹதீஸ் எண் 4308)

பாருங்கள்! இதுதான் விடுதலை பற்றி இஸ்லாமிய போதனை. மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமைக்கும் கருத்து சுதந்திரத்திற்கும் ஓர் உதாரணம் பாருங்கள். மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுவிட்ட பிறகு கருத்து சுதந்திரத்திற்கான முன்னுதாரணங்கள் காணக் கிடைக்கின்றன.

ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இரண்டு பேர் ஒருவரையொருவர் ஏச ஆரம்பித்தனர். ஒருவர் முஸ்லிம், இன்னொருவர் யூதர். எல்லா உலகங்களிலும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு சிறப்பினை வழங்கி அன்னாரை தேர்ந்தெடுத்த இறைவன் மீது ஆணையாக! என்று முஸ்லிம் கூறினார். அப்போது யூதர், மூஸாவுக்கு எல்லா உலகங்களை விடவும் சிறப்பினை வழங்கிய இறைவன் மீது ஆணையாக! என்று கூறினார். இதைக் கேட்ட முஸ்லிம் யூதரை அடித்து விட்டார். அந்த யூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து முறையிட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிமிடம் விபரம் கேட்டார்கள். பிறகு, லா துகய்யிரூனீ அலா மூஸா – மூஸாவை விட எனக்கு சிறப்பினை வழங்காதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி – கிதாபுல் குஸுமாத், மா யஸ்குரு ஃபில் அஷ்காஸி வல் குஸுமதி பய்னல் முஸ்லிமி வல் யஹுதி என்ற பாடம்)

ஆக, இதுதான் மத நல்லிணக்கம், கருத்து சுதந்திரம் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த நிலை! மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு மதீனாவிலுள்ள கோத்திரங்களிடமும் யூதர்களிடமும் சாந்தி சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக ஓர் உடன்படிக்கை செய்தார்கள். அதன்படி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருந்த காரணத்தால் அல்லது முஸ்லிம்களாக மாறாவிட்டாலும் முஸ்லிம்களுடன் பலர் இணைந்திருந்த காரணத்தினால் ஆட்சி ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் இருந்தது. ஆனால் அதற்காக, அந்த ஆட்சியின் பொருள். அந்த ஆட்சியின் கீழ் உள்ள மற்ற மக்களின் உணர்வுகளை பொருட்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா இறை தூதர்களை விடவும் சிறப்பானவர்கள் என்று திருக்குர்ஆனில் சாட்சி இருந்த போதிலும் நபிமார்களைப் போட்டியாகப் பார்ப்பதன் காரணமாக அமைதியான சூழ்நிலையை கெடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த யூதரின் விசயத்தைக் கேட்டு முஸ்லிமைத்தான் கண்டித்தார்கள். நீங்கள் உங்கள் சண்டைக்கு மத்தியில் நபிமார்களைக் கொண்டு வராதீர்கள். உங்கள் கொள்கைப்படி நான் எல்லா நபிமார்களையும் விட சிறந்தவன் என்பது உண்மைதான். அல்லாஹ்வும் அதற்கு சாட்சி பகர்ந்து விட்டான். ஆனால் நமது ஆட்சியின் கீழ் உள்ள ஒருவருக்கு, தான் ஏற்றுக் கொள்ளும் ஒரு நபியை ஒருவர் ஏதோ சொல்லி விட்டார் என்பதற்காக மனவருத்தம் ஏற்படக் கூடாது; அதற்கு நான் அனுமதியளிக்க மாட்டேன். என்னை கண்ணியப்படுத்துவதற்கு மற்ற நபிமார்களையும் கண்ணியப்படுத்த வேண்டியது வரும்.

ஆக, இதுதான் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு மத்தியிலும் மற்றவர்களுக்கு மத்தியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நீதி மற்றும் கருத்து சுதந்திரமாகும். இன்னும் சொல்லப்போனால் சில சமயங்களில் மற்றவர்களின் உணர்வுகளுக்கு அதிகம் மதிப்பளிக்கப்பட்டது.

## மனித உரிமையை நலைநாட்டுவதில் மற்றும் மத நல்லிணக்கத்திற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற முன்மாதிரி

பிறகு மனித உரிமை மற்றும் மதநல்லிணக்கத்தை நிலைநாட்டியதற்கு இன்னோர் உதாரணத்தைப் பாருங்கள். ரிவாயத்தில் வருகிறது. அப்துர் ரஹ்மான் பின் அபீலைலா அறிவிக்கின்றார்கள்: ஸஹல் பின் ஹனீஃப், கைய்ஸ் பின் ஸஅத் ஆகியோர் காதிசியா எனும் இடத்தில் உட்கார்ந்திருந்தனர். ஒரு ஜனாஸா அவர்களைக் கடந்து சென்றது. அப்போது அவர்கள் இருவரும் எழுந்து நின்றனர். இவர் ஸிம்மிகளைச்

சேர்ந்தவர் என்று அவர்களிடம் கூறப்பட்ட போது அவ்விருவரும் கூறினர். ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கடந்து ஒரு ஜனாஸா சென்றது. அப்போது அன்னார் மதியாதைக்காக எழுந்து நின்றார்கள். இது ஒரு யூதருடைய ஜனாஸாதானே என்று அன்னாரிடம் கூறப்பட்ட போது, அலைஸத் நஃப்ஸா – அவர் மனிதர் இல்லையா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். (சஹீஹ் புகாரி – கிதாபுல் ஜனாயிஸ் – மன் காம லிஜனாஸதி யஹுதிய்யி எனும் பாடம்) ஆக, இதுதான் மற்ற மார்க்கத்திற்கும் மனித நேயத்திற்கும் அவர்கள் கொடுத்த கண்ணியம்! மேலும் இந்த முன்மாதிரிகளினால் தான் மதநல்லிணக்கத்திற்கான சூழ்நிலை உருவாக முடியும். இவ்வாறு வெளிப்படுத்துவதனால் தான் ஒருவருக்கொருவர் மென்மையான உணர்வுகள் உருவாகின்றன. இந்த உணர்வுகளினால் தான் அன்பு, நேசம், அமைதி என்ற சூழ்நிலை உருவாகின்றது. மற்றபடி இன்றைய காலத்தில் உலகவாதிகளின் செயல்களினால் வெறுப்புகளின் சூழ்நிலை தான் வளரும்.

இன்னொரு ரிவாயத்தில் வருகிறது. கைபர் வெற்றியின் போது தவ்ராத்தின் சில பிரதிகள் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன. யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, எங்களுடைய புனித வேதநூலை எங்களிடம் கொடுத்து விடுங்கள் என்று கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், யூதர்களின் வேதநூலை அவர்கதுக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்றார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா – ஸிக்ரு மகாஸியா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனும் பாடம். கஸது கைபர், தொகுதி 3 பக்கம் 49)

யூதர்களின் தவறான போக்கின் காரணமாக அவர்களுக்கு தண்டனை கிடைத்துக் கொண்டிருந்தது என்றாலும் எதிரிகளிடம் கூட அவர்களின் மார்க்க உணர்வுகளை புண்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்ற கொள்கையுடையவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளங்கினார்கள்.

தனிப்பட்ட நபர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறினேன். மதீனாவில் ஓர் உடன்படிக்கை நடந்தது என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல நிபந்தனைகளை வகுத்தார்கள். ரிவாயத்தில் வருவதை நான் எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சூழ்நிலையில் எவ்வாறு மதநல்லிணக்கத்தை நிலைநாட்ட முயற்சி செய்தார்கள் என்பது தெரிகின்றது. சமூகத்தில் அமைதியும் நிலைபெற வேண்டும். மனிதத்துவத்தின் மேன்மையும் நிலைபெற வேண்டும் என்பதற்காக அவர்கள் என்ன விரும்பினார்கள்? மதீனா சென்ற பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுடன் செய்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் இவையாகும்:

1. முஸ்லிம்களும் யூதர்களும் ஒருவருக்கொருவர் அனுதாபத்துடனும், கபடமற்ற நிலையிலும் இருப்பார்கள். ஒருவர் மற்றவருக்கெதிராக அநீதியோ வரம்பு மீறுதலோ செய்ய மாட்டார்கள்.

   (யூதர்கள் இந்த உடன்படிக்கையை எப்போதும் முறித்துக் கொண்டேயிருந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்மையையே செய்து வந்தார்கள். யூதர்கள் வரம்புமீறி விட்ட பிறகு கட்டாயத்திற்குள்ளாகி அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.)

2. இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், ஒவ்வொருவருக்கும் மார்க்க சுதந்திரம் உண்டு என்பதாகும்.

   (முஸ்லிம்கள் மதீனாவில் பெரும்பான்மையாக இருந்தாலும் நீங்கள் உங்கள் மார்க்கத்தில் சுதந்திரமானவர்களாக இருக்கலாம்.)

3. மூன்றவாது நிபந்தனை என்னவென்றால், குடிமக்கள் அனைவரின் உயிர்களும் உடைமைகளும் பாதுகாப்பாக இருக்கும். ஒருவர் குற்றம் செய்தால் அல்லது அநியாயம் செய்தாலேயன்றி அவற்றை மதித்து நடக்க வேண்டும்.

   (இப்போது இதிலும் எந்த பாகுபாடு கிடையாது. குற்றம் செய்பவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லது யூதராக இருந்தாலும் அவருக்கு கண்டிப்பாக தண்டனை கிடைக்கும். மற்றபடி, பாதுகாப்பது அனைவரின் ஒட்டுமொத்தமான கடமையாகும். ஆட்சியின் கடமையாகும்.)

4. இன்னொரு நிபந்தனை என்னவென்றால், எல்லா கருத்து வேறுபாடுகளும், சண்டைகளும் தீர்ப்புக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்து வைக்கப்படும். மேலும் எல்லா தீர்ப்பும் இறைகட்டளைக்கு ஏற்ப இருக்கும்.

(இறை கட்டளைக்கேற்ப என்பதன் பொருள், ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அதனுடைய சரீஅத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கப்படும். தீர்ப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் கொடுப்பார்கள். ஏனென்றால் அப்போது உயர் அதிகாரி அன்னார் தான். எனவே அன்னார் தான் தீர்ப்பு கொடுக்கக்கூடியர்களாக இருந்தார்கள். ஆனால் மக்கள் எந்த மார்க்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்களோ அதன் சரீஅத்தின் படியே அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். சில யூதர்களுக்கு அவர்கள் ஏற்றுக் கொண்ட தவ்ராத்தின் அடிப்படையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அதனை இன்றைய கிறிஸ்தவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர்; அநியாயம் செய்யப்பட்டு விட்டது என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அந்த யூதர்கள் கூறியபடியே அவர்களின் மார்க்க சட்டத்திற்கேற்ப தீர்ப்புகள் வழங்கப்பட்டன.)

5. அடுத்த நிபந்தனை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி இல்லாமல் எந்த பிரிவும் போருக்காக வெளியேற கூடாது. ஏனென்றால் ஓர் ஆட்சியின் கீழ் வாழும் போது அதற்குக் கட்டுப்பட்டிருப்பது அவசியமானதாகும்.

(இந்த நிபந்தனை இன்றைய காலத்தில் ஜிஹாதிய இயக்கங்களுக்கும் ஒரு வழிகாட்டலாக இருக்கின்றது. எந்த ஆட்சியின் கீழ் இருக்கின்றார்களோ அதனுடைய அனுமதி இல்லாமல், எந்தவிதமான ஜிஹாது செய்யவும் அனுமதியில்லை. ஆனால் அதனுடைய இராணுவத்தில் சேர்ந்து அந்த நாடோ அல்லது அரசாங்கமோ சண்டையிட்டாலேயொழிய ஜிஹாது ஆகுமானதல்ல.)

6. அடுத்த நிபந்தனை என்னவென்றால், யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக ஒரு சமுதாயம் போர் செய்தால் அவ்விருவரும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வார்கள்.

(அதாவது இரு சமுதாயத்தில் எந்த சமுதாயத்துடன் போர் நடந்தாலும் இவ்விரு சமுதாயங்களும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்ய வேண்டும். மேலும் எதிரியுடன் சமாதானம் செய்து கொள்ளும் நிலை வரும் போது அதனால் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள் இருவருக்கும் ஏதேனும் இலாபமோ, பயனோ கிடைக்கும் என்றால் அந்த இலாபத்தை இருவரும் சரி பாதியாக பங்கிட்டு கொள்ள வேண்டும்.)

அவ்வாறே எவராவது மதீனாவை தாக்கினால் எல்லாரும் சேர்ந்து அவரை எதிர்க்க வேண்டும்.

7. அடுத்த நிபந்தனை என்னவென்றால், மக்கத்து குரைஷிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களுக்கும் யூதர்களின் சார்பாக எந்தவிதமான உதவியும் அடைக்கலமும் கொடுக்கக் கூடாது.

(ஏனெனில் மக்கத்து குரைஷிகள் தான் முஸ்லிம்களை மக்காவிலிருந்து வெளியேற்றினர். பிறகு முஸ்லிம்கள் மதீனாவில் வந்து தஞ்சம் புகுந்தனர். எனவே இனி முஸ்லிம்களின் ஆட்சியில் வாழ்பவர்கள் அந்த எதிரி சமுதாயத்துடன் எந்த உடன்படிக்கையும் செய்யக்கூடாது; எந்த உதவியும் வாங்கக் கூடாது.)

ஒவ்வொரு சமுதாயமும் தனது செலவுகளை தானே ஏற்றுக் கொள்ளும். (அதாவது தத்தமது செலவுகளை தாமே பார்த்துக் கொள்ளும்.)

இந்த உடன்படிக்கையினால் எந்த அநியாயக்காரரும், குழப்பவாதியும் தண்டிக்கப்படுவதிலிருந்தோ பழிவாங்கப்படுவதிலிருந்தோ தப்பித்திருக்க மாட்டார்.

(அதாவது, முன்னரே கூறப்பட்டது போன்று, எவர் அநியாயம் செய்தாலும், குற்றமிழைத்தாலும், தவறு செய்தாலும் அவர் கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்; பிடிக்கப்படுவார். அவர் முஸ்லிமாக இருந்தாலும், யூதராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் எவ்வித பாகுபாடும் இன்றி தண்டனை வழங்கப்படும்.)

**(சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலிலிருந்து – பக்கம் 279)**

பிறகு இந்த மத நல்லிணக்கத்தையும், மார்க்க சுதந்திரத்தையும் நிலை நாட்டுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஜ்ரானிலிருந்து வந்திருந்த கிறிஸ்தவக் குழுவுக்கு மஸ்ஜிதே நபவியில்

வணங்குவதற்கு அனுமதியளித்தார்கள். அந்தக் கிறிஸ்தவர்கள் கிழக்கு நோக்கி முகந்திருப்பியவாறு தொழுதனர். அவ்வாறு கூடாது என நபித்தோழர்கள் கருதினர். பரவாயில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு நஜ்ரான் மக்களுக்கு பாதுகாப்பு பத்திரம் கொடுத்த சம்பவமும் வருகிறது. (நஜ்ரானிலிருந்து வந்திருந்த) கிறித்தவர்களின் எல்லைப் புறங்கள் முஸ்லிம் இராணுவத்தின் மூலமாக பாதுகாக்கப்படும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள், வணக்கஸ்தலங்கள், பயணிகள் இல்லங்கள் – அவை எவ்வளவு தூரமான இடங்களில் இருந்தாலும் சரி அல்லது நகரங்களில் இருந்தாலும், மலைகளில் இருந்தாலும், காடுகளில் இருந்தாலும் அவற்றைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் பொறுப்பாகும். (கிறித்தவர்களாகிய) அவர்களுக்கு தங்கள் மார்க்கத்தின்படி இறைவணக்கம் செய்வதற்கு சுதந்திரம் உண்டு. அவர்களின் இந்த இறைவணக்கம் செய்வதற்கான சுதந்திரத்தை பாதுகாப்பதும் முஸ்லிம்களின் மீது கடமையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஏனென்றால் இப்பொழுது இவர்கள் முஸ்லிம் அரசின் குடிமக்களாவார்கள். எனது குடிமக்களாவார்கள். எனவே இந்த வகையிலும் அவர்களை பாதுகாப்பது என்மீது கடமையாகிவிட்டது.

முஸ்லிம்கள் தங்கள் போர்களில் அவர்களை (அதாவது கிறிஸ்தவர்களை) அவர்களின் விருப்பதிற்கு மாற்றமாக சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களின் பாதிரிமார்கள் அல்லது மார்க்கத் தலைவர்கள் எந்த அந்தஸ்தில் எந்த பொறுப்பில் இருக்கின்றார்களோ அதிலிருந்து அவர்கள் நீக்கப்பட மாட்டார்கள். அவர்கள் அவ்வாறே தமது பணிகளை செய்து வருவார்கள். அவர்களின் வணக்கஸ்தலங்களில் எவ்விர தலையீடும் இருக்காது. எந்நிலையிலும் அவை உபயோகப்படுத்தப்பட மாட்டாது. அவை பயணிகளின் தங்குமிடமாக ஆக்கப்படமாட்டாது. எவரும் அங்கு தங்க வைக்கப்பட மாட்டார்கள். எந்தவொரு நோக்கத்திற்காகவும் அவர்களிடம் கேட்காமல் அந்த இடங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது. மார்க்க அறிஞர்களும், துறவிகளும்

எங்கிருந்தாலும் அவர்களிடமிருந்து வரியோ, கப்பமோ வசூலிக்கப்பட மாட்டாது. ஒரு முஸ்லிமுக்கு கிறிஸ்தவ மனைவி இருந்தாலும் அவள் தனது மார்க்க முறைப்படி தொழுவதற்கு முழு சுதந்திரம் உண்டு. ஒருவர் தனது மார்க்க அறிஞரிடம் சென்று மார்க்க சந்தேகங்கள் குறித்து கேட்க விரும்பினால் அவர் கேட்க செல்லலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருச்சபைகளின் சீரமைப்புப் பணிக்காக கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடம் பண உதவியோ, தொண்டு உதவியோ வாங்க விரும்பினால் முஸ்லிம்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் இது சிறந்த வி–யமாகும். அது நன்மையோ கடனோ அல்ல. மாறாக, இவ்வாறு அது, சமூக தொடர்புகளை பேண வேண்டும்; ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற உடன்படிக்கையை மேலும் சிறப்பாக நிறைவேற்றுவதாக அது அமையும். (ஸாதுல் மஆத் ஃபீ ஹூதா கைருல் இபாத்–லிருந்து)

இதுதான் மதநல்லிணக்கம், மத சுதந்திரம் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உன்னத நிலை. அப்படியிருந்தும் அன்னார் அநீதியிழைத்தார் என்றோ, வாளின் பலவந்தத்தினால் இஸ்லாத்தை பரப்பினார் என்றோ, அன்னாரின் மீது குற்றம் சுமத்துவது மிகவும் கொடுமையானது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“வேதத்தையுடையோரும், அரபு நாட்டின் இணைவைப்பவர்களும் மிகவும் மோசமான நடத்தையுள்ளவர்களாகி விட்டபோது, தீமை செய்துவிட்டு நாம் நன்மை செய்தோம் என்று கருதிய போது குற்றங்களிலிருந்து விலகாத போது, பொதுமக்களின் அமைதியில் இடையூறை ஏற்படுத்திய போது, அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கையில் ஆட்சியின் கடிவாளத்தை வழங்கி அவர்களின் கையினால் ஏழைகளைக் காப்பாற்ற விரும்பினான். அரபு நாடு கடிவாளம் இல்லாத நாடாக இருந்தது. அவர்கள் எந்த மன்னராட்சிக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவில்லை. எனவே ஒவ்வொரு பிரிவினரும் எவ்வித கட்டுப்பாடுமின்றி துணிவுடன் வாழ்ந்து வந்தனர்”.

எந்தச் சட்டமும் இருந்ததில்லை. ஏனென்றால் எவருக்கும் கட்டுப்பட்டவராக இருக்கவில்லை.

“அவர்களுக்கென்று தண்டனைக்கான எந்தச் சட்டமும் இருந்ததில்லை. எனவே அவர்கள் நாளுக்கு நாள் குற்றங்களில் முன்னேறிக் கொண்டே சென்றனர். எனவே இறைவன் அந்த நாட்டின் மீது இரக்கம் கொண்டு...... ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அந்த நாட்டிற்கு இறைத்தூதராக அனுப்பியது மட்டுமல்லாமல் அந்த நாட்டிற்கு மன்னராகவும் ஆக்கினான். மேலும் திருக்குர்ஆனை எத்தகைய சட்டத்தைப் போன்று முழுமையாக வழங்கினான் என்றால் அதில் குற்றவியல், இராணுவம், பொருளாதாரம் ஆகியவை பற்றிய வழிகாட்டுதல்கள் எல்லாம் அடங்கியுள்ளன. ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னர் என்ற முறையில் எல்லாப் பிரிவினர்களுக்கும் அதிகாரியாக இருந்தார்கள். ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்த மக்களும் தமது வழக்குகளுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக தீர்வு கண்டார்கள்.

திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகின்ற விசயம் என்னவென்றால், ஒருமுறை ஒரு யூதருக்கும் முஸ்லிமுக்கும் இடையிலுள்ள ஒரு வழக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விசாரித்த பிறகு அந்த யூதரின் வார்த்தை உண்மை என்பதை உணர்ந்து, அந்த முஸ்லிமுக்கு எதிராகவும், யூதருக்கு சாதகமாகவும் தீர்ப்பு வழங்கினார்கள். (இதுபற்றி ஏற்கனவே நான் கூறிவிட்டேன்.)

“எனவே திருக்குர்ஆனை கவனமாக படிக்காத சில அறிவிலி எதிரிகள் எல்லா நிலையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் கீழ் கொண்டு வர விரும்புகின்றார்கள். ஆனால் அந்த தண்டனைகள் ஆட்சியாளர் என்ற நிலையில் வழங்கப்பட்டு வந்தது.” (அதாவது இது அரசாங்கத்தின் பணியாகும்.)

“இஸ்ராயீல் மக்களிடம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு நபிமார்கள் தனியாகவும், மன்னர்கள் தனியாகவும் இருந்தனர்.

அந்த மன்னர்கள் அரசியல் மூலமாக அமைதியை நிலைநாட்டி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இந்த இரண்டு பதவிகளையும் இறைவன் அன்னாருக்கு அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு) வழங்கினான்.'' மேலும் குற்றவாளிகள் நீங்கலாக மற்ற பொதுமக்களிடம் நடந்த கொண்ட முறை பற்றி கீழ்வரும் வசனத்திலிருந்து தெளிவாகிறது:

وَقُلْ لِّلَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ وَالْاُمِّيّٖنَ ءَاَسْلَمْتُمْ ؕ فَاِنْ اَسْلَمُوْا فَقَدِ اهْتَدَوْا ۚ وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْكَ الْبَلٰغُ ؕ

''தூதரே! வேதக்காரர்களிடமும், அரபு நாட்டின் அறிவீனர்களிடமும் கூறுவீராக. நீங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் நுழைகின்றீர்களா? நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் நேர்வழி பெற்று விட்டீர்கள். நீங்கள் முகம் திருப்பி விட்டால் தூதுச் செய்தியை எட்ட வைப்பது மட்டுமே உம்மீது பொறுப்பாகும்''. (சூரா ஆலி இம்ரான் வசனம் 21)

நீங்கள் அவர்களிடம் போர் செய்யுங்கள் என்று இந்த வசனத்தில் கூறவில்லை. முஸ்லிம்களை கொன்று வந்த பொது அமைதியில் இடையூறை ஏற்படுத்திக் கொண்டிருந்த திருட்டிலும், கொள்ளையிலும் ஈடுபட்டிருந்த குற்றவாளிகளுக்கு எதிராக மட்டுமே போர் செய்ய அனுமதி இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அந்த போர், மன்னர் என்ற முறையில் இருந்ததே தவிர தூதுத்துவத்தி(னை ஏற்க வைப்பத)ற்காக இருக்கவில்லை. (அதாவது அன்னார் முதன்மை ஆட்சியாளராக இருந்த போது நாட்டின் சட்டங்களுக்கு மாற்றமாக அமைதியைக் குலைக்கின்ற, அநீதியிழைக்கின்றவர்களுக்கு எதிராக தீமையைத் தடுப்பதற்காக போர் செய்தார்கள். நபி என்பதற்காக செய்யவில்லை.) அல்லாஹ் கூறுகிறான்:

وَقَاتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ الَّذِيْنَ يُقَاتِلُوْنَكُمْ وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ ۝١٩١

அதாவது உங்களுடன் போர் செய்பவர்களுடன் நீங்களும் அல்லாஹ்வின் வழியில் போரிடுங்கள். மற்றவர்களுடன் போர் செய்யும் நோக்கம் வேண்டாம். மேலும் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோர்களை நேசிப்பதில்லை''. (சூரா அல்பக்கரா வசனம் 191)
**(சஷ்மயே மஃரிஃபத் – ரூஹானி கஸாயின் தொகுதி 23, பக்கம் 242, 243)**

எனவே, எந்த தூய நபியின் மீது இந்த சரீஅத் இறங்கி இருக்கின்றதோ அவர் எவ்வாறு தனக்கு இறங்கிய சரீஅத்திற்கு மாற்றமாக வரம்பு மீறி நடப்பார்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் தான் பாதுகாப்பில் இருப்பீர்கள் என்ற எந்தவித நிபந்தனையுமின்றி அவர்களை மன்னித்து விட்டதாக பொது மன்னிப்பிற்கான அறிவிப்பைச் செய்தார்கள். இது சம்பந்தமான ஓர் உதாரணத்தை நாம் ஏற்கனவே பார்த்து விட்டோம். அது பல்வேறு வகையான தோற்றங்களைக் கொண்டதாக இருந்தாலும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் தான் மன்னிப்பு கிடைக்கும் என்று எங்கும் இல்லை. பல்வேறு வகையான இடங்களுக்கு செல்வதாலும், நுழைவதாலும், ஒருவருடைய கொடியின் கீழ் வருவதாலும், கஃபதுல்லாஹ்வுக்குள் செல்வதாலும், ஒருவருடைய வீட்டிற்கு செல்வதாலும் மன்னிப்பு கிடைக்கும் என அறிவிப்பு செய்யப்பட்டது. மேலும் இது எப்படிப்பட்ட உயர்ந்த முன்னுதாரணம் என்றால் வேறு எங்கும் இது நமக்கு காணக்கிடைக்காது. முழுமையாக இவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்டது.

“லா தஸ்ரீப அலைக்குமுல் யவ்ம் அதாவது இன்று உங்களை பிடிக்க மாட்டோம்.” நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் என்று அறிவிப்பு செய்தார்கள்.

இத்தகைய உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டிய அன்னார் மீது ஆயிரக்கணக்கான ஸலவாத்துகள் உண்டாவதாக. நமக்கும் அந்த போதனையை அன்னார் வழங்கியுள்ளார்கள். அதன்படி செயல்படும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.